# பாதிக்கப்பட்டோர் உரிமைகளின் சுருக்கம்

## 1. விளங்கிக்கொள்ள மற்றும் விளங்கச்செய்ய இயலுமாக இருத்தல்

உங்களுக்கு இலகுவாக விளங்கக்கூடிய ஒரு  வழியில் தகவல்கள் பெறவும்,  அவ்வாறு விளங்கிக்கொள்ள ஏதுவாக, தேவைப்படுமிடத்து, உரை மற்றும் எழுத்து மொழிபெயர்ப்புச் சேவைகளை அணுகும் வசதி உள்ளிட்ட சேவைகள் கிடைக்க உங்களுக்கு உரிமை உண்டு.

## 2.  நியாயமற்ற தாமதம் இன்றி பதிவு செய்யப்பட்ட குற்றச்செயலின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமை

காவல்துறையால் பதிவு செய்யப்பட்ட  குற்றச்செயலின் விபரங்களை, சம்பவம் நடந்ததன்மேல் இயன்றவரை விரைவாகப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு. நீங்கள் சான்றுஞர் கூற்று ஒன்றைச் சமர்ப்பிக்க அல்லது நேர்காணல் ஒன்றுக்கு வரக் கோரப்பட்டால், இந்தச் செய்முறையை நிறைவேற்ற உதவுமுகமாக உங்களுக்கு மேலதிக ஆதரவு வழங்கப்படவேண்டிய உரிமை உங்களுக்கு உண்டு.

## 3. குற்றச்செயலை அறிவிக்கும்போது தகவல்கள் பெறும் உரிமை

நீங்கள் குற்றச் செயல் ஒன்றை அறிவிக்கும்போது அதனை எழுத்துமூலம் உங்களுக்கு உறுதிப்படுத்தல்,  குற்றவியல் நீதியின் செயற்பாடு பற்றிய தகவல்களை உங்களுக்கு வழங்கல், பாதிக்கப்பட்டவர்களுக்காக உள்ள நிகழ்ச்சித்  திட்டங்கள்  சேவைகள் பற்றி உங்களுக்கு எடுத்துரைத்தல் என்பன உங்களுக்கான உரிமையாகும். நீங்கள் சந்தேக நபரை அல்லது  குற்றவாளியை சந்திக்கக்கூடியதான சேவையும் இதில் உள்ளடங்கலாம். இது முன்னிலை மீட்டாக்க நீதி  (Restorative Justice)  என அறியப்படுகிறது.

## 4. பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவு வழங்கும் சேவைகளிடம் உங்களைப் பாரப்படுத்தி, உங்கள் தேவைகளுக்கு ஏற்ப சேவைகளையும் ஆதரவையும்  ஒழுங்குபடுத்தவேண்டிய உரிமை.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு வழங்கும் சேவைகளிடம் உங்களைப் பாரப்படுத்தவேண்டிய உரிமை உங்களுக்கு உண்டு. இதில் நீங்கள் நேரடியாக அவற்றுடன் தொடர்பு கொண்டு, உங்கள் தேவைகளுக்கு ஏற்ப சேவைகள் மற்றும் ஆதரவை ஒழுங்குபடுத்தும் வகையில், உங்கள் தேவைகளை மதிப்பீடு  செய்துகொள்ளும் உரிமையும உள்ளடங்கும். தகுதி இருப்பின், விசேட ஆதரவு சேவைகளிடம் உங்களைப் பாரப்படுத்தி,  நீதிமன்றில் உங்களுக்குக் கிடைக்கும் மேலதிக ஆதரவை - உதாரணமாக விசேட செயற்பாடுகள் - உங்களுக்கு எடுத்துரைக்கப்படவேண்டிய உரிமையை நீங்கள் கொண்டுள்ளீர்கள்.

## 5. நட்டஈடு பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமை

குற்றச்செயலின் விளைவாக, ஏற்பட்ட இழப்பு, சேதம். அல்லது காயம் எதற்கும், தகுதி இருப்பின் எவ்வாறு நட்டஈடு கோருவது என்று உங்களுக்கு எடுத்துரைக்கப்படவேண்டிய உரிமையை நீங்கள் கொண்டுள்ளீர்கள்.

## 6. புலன்விசாரணை மற்றும் வழக்கீடு பற்றிய தகவல்கள் உங்களுக்கு கிடைக்க வழி வகுக்கும் உரிமை

உங்கள் வழக்குப் பற்றிய ஆகப் பிந்திய தகவல்கள் உங்களுக்கு வழங்கப்படவேண்டும்.  முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும்போது அவை உங்களுக்கச் சொல்லப்படவேண்டும.் இவற்றுக்கான உரிமை. நீதிச் செயல்முறையின் சிற்சில  கட்டங்களின்போது  சம்பந்தப்பட்ட சேவை வழங்குநர் தீர்மானங்களை மீள் பரிசீலனை  செய்யவேண்டும் என்று கோரும் உரிமை .

## 7. பாதிக்கப்பட்டவர்  தனிப்பட்ட வாக்குமூலம் ஒன்றை அளிப்பதற்கான உரிமை

குற்றச்செயல் எவ்வாறு உங்களைப் பாதித்துள்ளது என்றும், குற்றவாளிக்குத் தண்டனை வழங்கும்போத அதனைக் கருத்தில் எடுக்குமாறும்  நீதிமன்றத்திடம்  கோரும் தனிப்பட்ட வாக்குமூலம் ஒன்றை அளிக்கும் உரிமை.  இதன் செயல்முறை பற்றிய தகவல்கள் உங்களிடம்  தரப்படும்.

## 8. விசாரணை, விசாரணைச் செயல்முறை மற்றும் சாட்சியாக உங்கள் வகிபாகம் பற்றிய தகவல்கள் உங்களுக்கு வழங்கப்படவேண்டியது உங்கள் உரிமை

உங்கள் வழக்கு நீதிமனறத்துக்குப் போகுமானால், உங்களுக்கு கேட்புரை எதுவும் நடைபெறும்  நேரம், திகதி, மற்றும் இடம்  அத்துடன் அந்தக் கேட்புரைகளின் விளைவு என்பன நேரகாலத்துடன் உங்களுக்கு அறிவிக்கப்படவேண்டியது  உங்களுக்குள்ள உரிமையாகும். நீங்கள் சாட்சியம் அளிக்கக் கோரப்பட்டால், விசாரணைக்கு முன்னதாக, பொருத்தமான உதவிக்கு உரித்தாகுவீர்கள்.அத்துடன், இயலுமானவிடத்து, நீதிமன்று அனுமதித்தால், சாட்சியம் அளிக்குமுன் வழக்குத் தொடுநருடனான சந்திப்புக்கும் உங்களுக்கு உரிமை உண்டு.

## 9. வழக்கின் முடிவு மற்றும் மேன்முறையீடு எதுவும் பற்றிய தகவல்களைப் பெறும் உரிமை

வழக்கின் முடிவு உங்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும். அத்துடன், பிரதிவாதி குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தால்,  தண்டனை பற்றி உங்களுக்கு விளக்கம் அளிக்கப்படவேண்டும். இவை உங்கள் உரிமையாகும். குற்றவாளி அவருக்கு விதிக்கப்பட்ட  குற்றத் தீர்ப்பு அல்லது தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்தால், மேன்முறையீடு பற்றியும்  அதன் விளைவு பற்றியும் உங்களுக்கு எடுத்துரைக்கப்படவேண்டும். அது உங்கள் உரிமையாகும்.

### உங்களுக்குச் செலவினங்கள் வழங்கப்படுவதும், சொத்துடைமைகள் மீளளிக்கப்படுவதம் உங்களுக்குள்ள உரிமையாகும்.

நீங்கள் நீதிமன்றத்தில்  முன்னிலையாகி சாட்சியம் அளிக்கக் கோரப்பட்டால்,  சில செலவினங்களைக் கோரும் உரிமை . உங்கள் உடைமைகளில் ஏதும் சான்றுப் பொருளாக   எடுக்கப்பட்டிருந்தால், இயலுமான விரைவில் அதனைத் திரும்பப் பெற உங்களுக்கு உரிமை உண்டு.

### 11. குற்றத் தீர்ப்பு ஒன்றை அடுத்து, குற்றவாளி பற்றிய தகவல்கள் உங்களுக்கு வழங்கப்படவேண்டும்

தகுதி காண் அடிப்படையில் நீங்கள் பாதிக்கப்பட்டவர் தொடர்பாடல் திட்டத்துக்குப் பாரப்படுத்தப்படும்  உரிமையைக் கொண்டுள்ளீர்கள்.இத்திட்டம் குற்றவாளி பற்றியும் சிறையில் அவரது முன்னேற்றம் பற்றியும் உங்களுக்குத் தகவல் வழங்கும். அத்துடன் அவர் நிபந்தனையுடனான விடுவிப்பு அல்லது விடுவிப்புக்கான பரிசீலனைக்குத் தகுதி பெறுகிறாரா, அவ்வாறானால் எப்போது என்றும் தகவல் வழங்கும். பொருந்துமிடத்து,  புதிய பாதிக்கப்பட்டவரின் தனிப்பட்ட  வாக்குமூலம்  ஒன்றை வழங்க உங்களுக்கு   உரிமை   உண்டு. புரியப்பட்ட குற்றச்செயலால் நீங்கள் எவ்வாறு தொடர்ந்து பாதிக்கப்படுகிறீர்கள்  என்று அதில் கூறலாம்.

### 12.  உங்கள் உரிமைகள் புறக்கணிக்கப்படுவதாக முறைப்பாடு செய்யும் உரிமை

உங்கள் உரிமைகள் கிடைக்கவில்லை என்று நீங்கள் நம்பினால், சம்பந்தப்பட்ட சேவை வழங்குநருக்கு முறைப்பாடு ஒன்றைச் செய்ய உங்களுக்கு உரிமை உண்டு. நீங்கள் தொடர்ந்து அதிருப்தியுற்றிருந்தால், நாடாளுமன்ற மற்றும் உடல்நல சேவை முறைமன்ற நடுவருடன் தொடர்பு கொள்ளலாம்.

## அறிமுகம்

## பாதிக்கப்பட்டோரின் நெறிமுறைத் தொகுப்பு

குற்றச்செயலால் பாதிக்கப்பட்டோரின் நெறிமுறைத் தொகுப்பு [அடிக்குறிப்பு 1] (பாதிக்கப்பட்டோரின் நெறிமுறைத் தொகுப்பு) இங்கிலாந்திலும் வேல்ஸிலும் குற்றச்செயலால் பாதிக்கப்பட்டோரின் அமைப்புக்கள் ( சேவை வழங்குநர்கள் என்று அறியப்படுபவை) வழங்கவேண்டிய சேவைகளையும் அவை கொண்டுள்ள குறைந்தபட்ச தரத்தையும் விபரிக்கிறது.

## இந்த நெறிமுறைத் தொகுப்பின் கீழ ◌ 'பாதிக்கப்பட்டவர் ' யார்.

'முறைப்பாட்டாளர் ' மற்றும் 'எஞ்சுநர்' என்கிற பதங்கள், குற்றவியல் நீதி முறைமையின் கீழ் காவல்துறையிடம் குற்றவியல் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைக்கும் ஆளொருவரைய வர்ணிக்கப் பெரும்பாலும பயன்படுத்தப்படுகின்றன என்பதை நெறிமுறைத் தொகுதி ஏற்றுக்கொள்கிறது. இருப்பினும், இந்த நெறிமுறைத் தொகுப்பின் நோக்கத்துக்கு அமைய, ' பாதிக்கப்பட்டவர்' என்றால் :

- [அடிக்குறிப்பு 2 ]குற்றவியல் குற்றச்செயல்ஒன்றின் நேரடி விளைவாக, உடல், உள அல்லது உணர்வுத் தீங்கு அல்லது பொருளாதார இழப்பு உட்பட தீங்கிற்கு உள்ளான ஆளொருவர்[அடிக்குறிப்பு 3]
- குற்றவியல் குற்றச்செயலின் நேரடி விளைவாக இறந்தவரின் நெருங்கிய உறவினர் ஒருவர் [அடிக்குறிப்பு 4] (அல்லது நியமிக்கப்பட்ட குடும்பப் பேச்சாளர் ஒருவர் ) .

நீங்கள் கீழ்க்கண்டவர்களில் ஒருவராக இருந்தால், இந்த நெறிமுறைத் தொகுப்பின்கீழ் நீங்களும் உரிமைகள் பெறலாம்:

- பாதிக்கப்பட்டவர் 18 வயதுக்கு உட்பட்டவராக இருந்தால் அவரது பெற்றார் அல்லது பாதுகாவலர்.[அடிக்குறிப்பு 5]அல்லது
- பாதிக்கப்பட்டவரால் தொடர்பாடல் செய்ய இயலாத அல்லது அவ்வாறு செய்யும் ஆற்றல் அற்ற அளவுக்கு, குற்றவியல் குற்றம் ஒன்றின் காரணமாக அவர் மனநிலை குன்றியிருந்தால் அல்லது அவர் கடுமையாகக் காயப்பட்டிருந்தால், நியமிக்கப்பட்ட குடும்பப் பேச்சாளர் ஒருவர்.

அனைத்து சேவை வழங்குநர்களும் பாதிக்கப்பட்டவரின் சிறந்த நலன்களை முக்கியமாகக் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்டவரின்

வயது. முதிர்ச்சி,கருத்துக்கள், தேவைகள் மற்றும் கவலைகளில் முழுமையாக கவனம் செலுத்தல் வேண்டும்.

## உங்களுக்கு எந்த உரிமைகள் பொருந்தும்?

உங்களுக்கு எந்த உரிமைகள் பொருந்தும் என்பது, குற்றச்செயல் காவல்துறைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா, வழக்கு நீதிமன்றுக்கு சென்றுள்ளதா, மற்றும் பிரதிவாதி குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளாரா என்பனவற்றைப் பொறுத்தாகும் .அத்துடன் உங்கள் தனிப்பட்ட தேவைகள் மற்றும் சூழ்நிலைகளையும் பொறுத்ததாகும். உரிமைகள் 1, 4 மற்றும் 12 அனைத்துப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தும். எஞ்சியுள்ள உரிமைகள் குற்றச்செயல் ஒன்று காவல்துறைக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் மட்டும் பொருந்தும். சம்பந்தப்பட்ட சேவை வழங்குநர் உங்களுக்கு எந்த உரிமைகள் பொருந்தும் என்று எடுத்துரைப்பார்.

## நான் எவ்வாறு நடத்தப்படுவேன் என எதிர்பார்க்கலாம்?

உங்களுக்குக் கீழ்க்கண்ட உரிமைகள் உள்ளன:

- மதிப்பு, கௌரவம், கூருணர்வு, கருணை மற்றும மரியாதையுடன் நடத்தப்படுதல்;
- நன்மதிப்புடன் கூடிய அறிவார்ந்த தெரிவுகளைச் செய்தல்;
- சேவை வழங்குநர்கள், சம்பந்தப்பட்ட தனிமைச் சுதந்திர மற்றும் தரவுகள் பாதுகாப்பு சட்டங்களிந் கீழ் தமது கடப்பாடுகளுக்கு அமைய, உங்கள் தனிமையுரிமையை மதித்து நடத்தல்; அத்துடன்
- குற்றவியல் நீதிச் செயற்பாட்டை நீங்களும் உங்கள் குடும்பமும் விளங்கி அத்துடன் ஒருங்கிணைந்து செல்ல உதவும் சேவைகளை உங்களுக்கு வழங்குதல். மேலும் அச்சேவைகள் உங்களுக்கு தொழில்முறைப் பாணியில், எவ்வித பாகுபாடுமின்றி வழங்கப்படுதல்.

## சாட்சிகளுக்கான ஆதரவு

நீங்கள்  குற்றச்செயல்  ஒன்றைக் கண்டதன் நேரடி விளைவாக உங்களுக்கு உடல், உள அல்லது உணர்ச்சி தொடர்பான தீங்கு, அல்லது பொருளாதார இழப்பு உட்படத்  தீங்கு ஏற்பட்டிருந்தால், பாதிக்கப்பட்டவர்களை ஆதரிக்கும் இந்த நெறிமுறைத்  தொகுப்பின் நோக்கங்களுக்கு அமைய,  நீங்கள் குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவராவீர்.  நீங்கள் காவல்துறைக்கு வாக்குமுலம் ஒன்றை வழங்கியிருக்கவோ அவர்களால் நேர்முகம் காணப்பட்டிருக்கவோ சாட்சியாக நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கோரப்பட்டிருக்கவோ தேவையில்லை.

ஏனைய  சாட்சிகள் அனைவரும் இந்த நெறிமுறைத் தொகுப்பிலும் பார்க்க, சாட்சிகள் சாசனத்தால் வழங்கப்படும் [அடிக்குறிப்பு 6] சேவைகளை அணுகலாம்.

## வாச அந்தஸ்து

உங்கள் வாச அந்தஸ்து என்ன என்கிற பேதமின்றி, இந்த நெறிமுறைத் தொகுப்பினகீழ் உங்களுக்குச சேவைகளைப் பெறுவதற்கான உரிமை உண்டு. இருப்பினும், குற்றச்செயல்  இங்கிலாந்தில் அல்லது வேல்ஸில் புரியப்பட்டிருந்து ,நீங்கள் பிறிதோரிடத்தில் வசிப்பவராக இருந்தால், நீங்கள் வசிக்கும் இடத்திலேயே ஆதரவு   சேவைகளை அணுகவேண்டும். நீங்கள் இங்கிலாந்தில் அல்லது வேல்ஸில் உள்ள நீதிமன்றில் சாட்சியம் அளிக்கக் கோரப்பட்டிருந்தால், நீங்கள் இங்கிலாந்தில் அல்லது வேல்ஸில் இருக்கும்போது, உங்களால் ஆதரவு சேவைகளை அணுக முடியும்.

## மரண இழப்பு நேர்ந்த குடும்பங்கள்[அடிக்குறிப்பு 7] வெளிநாட்டில் கொலை  அல்லது கைமோசக்கொலை  காரணமாக

ஜக்கிய இராஜ்யத்துக்கு வெளியே கொலை அல்லது கைமோசக்கொலைக்கு ஆளான பிரித்தானிய பிரஜையின் குடும்பங்கள் வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவேண்டும். அந்த அலுவலகம் காலம் சென்றவரை சொந்த நாட்டுக்கு அனுப்புவது உட்பட, சம்பவம் நடந்த நாட்டில் உள்ள செயன்முறைகள் பற்றி ஆதரவும் தகவல்களும் வழங்கும். அவர்கள் காலம் சென்றவரின் குடும்பத்தை  விசேட ஆதரவுச் சேவையாளர்களுடன் தொடர்புபடுத்தவும்  உதவலாம். மேலும் தகவல்கள் 020 7008 5000 என்கிற தொலைபேசி இலக்கத்தை

அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.[அடிக்குறிப்பு 8]அல்லது இங்கே:கொலை அல்லது கைமோசக் கொலை காரணமாக வெளிநாட்டில் மரணம் (Death abroad through murder or manslaughter)

பிரித்தானிய பிரஜை ஒருவர் வெளிநாட்டில் கொலை, கைமோசக்கொலை அல்லது சிசுக்கொலைக்குப் பலியாளாகும்போது வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம், இங்கிலாந்து மறறும் வேல்ஸில் உள்ள காவல்துறையினர் மற்றும் மரணவிசாரணை அதிகாரிகள் ஆகியோரின் வகிபாகங்கள் என்ன என்று விளக்கம் பெற உதவும் விளக்க ஆவணம் ஒன்று (Memorandum of Understanding) உண்டு. ஆவணம் காலம் சென்றவர் மற்றும் அவரது குடும்பம் மீது கவனம் செலுத்தி எத்தகைய ஆதரவு கிடைக்கும் என்று விளக்கம் அளிக்கிறது.

## எனக்கு மிகச்சிறந்த சேவை கிடைப்பதை எவ்வாறு உறுதி செய்யலாம்?

உங்கள் வழக்கு விசாரணையின்போது நீங்கள் தொடர்பு கொள்ளும் பல்வேறு ஆட்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்க சேவை வழங்குநர்கள் முனைவார்கள். இயலுமானவிடத்து, உங்களுக்குத் தகவல் தர ஓரே தொடர்பு முனையை ஏற்படுத்துவார்கள். இந்த நெறிமுறைத் தொகுப்பின் கீழ் உங்கள் உரிமைகளை வழங்க அவர்களுக்கு உதவும் வகையில் நீங்கள்:

- உங்கள் தொடர்பு விபரங்கள் அல்லது விருப்புக்களில் மாற்றம் ஏற்பட்டால் அவர்களுக்கு அறிவித்தல்
- உங்களுக்கு உங்கள் வழக்கு அல்லது குற்றவியல் நீதிச் செயற்பாடு தொடர்பாக ஏதும் நிச்சயம் இல்லை என்றால்,அவர்களிடம் கேள்வி கேட்கவும், அத்துடன்
- சேவை வழங்குநர்கள் தமது சேவைகளை சிறப்புற வழங்கி உயர்தர சேவையாக்க உதவும் வகையில் அவர்களது சேவைகள் பற்றி உங்கள் கருத்துக்களை அவர்களுக்கு எடுத்துக் கூறவும்

## இந்தத் தொகுப்பின் கீழ் வழங்கப்படும் உரிமைகள் எனக்குத் தேவையில்லை என்றால் என்ன நடக்கும்?

இந்தத் தொகுப்பின் கீழ் கிடைக்கும் உரிமைகளில் சிலவற்றை அல்லது முழுவதையும் தேவையற்றவை என்று நீங்கள் தீர்மானிக்கலாம். இதனை நீங்கள் சம்பந்தப்பட்ட உங்கள் சேவை வழங்குநருடன் கலந்தாலோசித்தல் வேண்டும்.

இந்த வழக்கு தீவிர விசாரணயில் உள்ளபோது, அல்லது வழக்கீட்டில் உள்ளபோது, அல்லது குற்றவாளி தண்டனை அனுபவிக்கும்போது, எந்தச் சமயத்திலும் சரி, இந்தத் தொகுப்பின்கீழ் கிடைக்கும் உரிமைகளை நீங்கள் மீளப்பெறத் தெரிவு செய்யலாம். இது நிலைமைக்கு ஈடு கொடுத்து, இயலுமானவரை குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர் என்கிற நிலையில் இருந்து மீள உதவி கோரும் உரிமைக்குப் பொருந்தமாட்டாது.

எவரேனும் குற்றவியல் குற்றம் ஒன்றின் பேரில் குற்றம் சாட்டப்பட்டு, குற்றவாளியாகக் காணப்பட்டாரா, குற்றச்செயலை காவல்துறைக்கு அறிவிக்க நீங்கள் தீர்மானித்தீர்களா அல்லது விசாரணையில் ஒத்துழைக்க உங்களுக்கு விருப்பம் இல்லையா என்கிற பேதம் இன்றி, இந்த உரிமை கிடைக்கிறது.

## நீங்கள் பாதுகாக்கப்படவேண்டிய உரிமை

விசாரணையின்போதும், அதன் பின்னரும் வழக்கீட்டு நடைமுறையின்போதும் மீள-நியாயமற்றுப பாதிக்கப்படுதல் பயமுறுத்தப்படுதல் மற்றும் பழிக்குப் பழி வாங்கப்படுதலில் இருந்து பாதுகாக்கப்படும் உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உடனடிப் பாதுகாப்புக் குறித்து கவலை ஏற்பட்டால், நீங்கள் காவல்துறையை கீழ்க்கண்ட இலக்கத்தில் தொடர்பு கொள்ளவேண்டும்: 999

சந்தேக நபர் (விசாரணைக்குமுன்) அல்லது குற்றவாளி ( குற்றவாளியாகக் காணப்பட்டபின்) காவலில் இருந்து தப்பிச் செல்லும் அசாத்திய சம்பவம் நிகழ்ந்தால், காவல்துறை உங்களுடன் தொடர்பு கொள்ளும். சந்தேகநபர் அல்லது குற்றவாளியால் உங்களுக்கு தீங்கு நேரக்கூடிய தீவிர ஆபத்து காணப்படுவதாக மதிப்பிடப்பட்டால், உங்களுக்கு தொடர்ந்து பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தேவையான நடவடிக்கைகளை அவர்கள் எடுப்பார்கள்.

சிறையில் உள்ள ஒரு குற்றவாளியிடமிருந்து அனாவசிய தொடர்பு ஏற்பட்டால், நீங்கள் மாண்புமிகு அரசியின் சிறைச்சாலை மற்றும் நன்னடத்தைக் கண்காணிப்புச் சேவையின் உதவித் தொலைபேசிச் சேவையுடன் தொடர்பு கொள்ளவேண்டும்.[அடிக்குறிப்பு 9]0300 060 669910

அல்லது கீழ்க்கண்ட மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவேண்டும்:victim.helpline@justice.gov.uk

நிபந்தனையின் பேரில் சமூகத்தில் விடுவிக்கப்பட்ட குற்றவாளியிடமிருந்து உங்களுக்கு அனாவசிய தொடர்பு ஏற்படுத்தப்பட்டால் நீங்கள் காவல்துறையுடன் தொடர்பு கொள்ளலாம் அல்லது, உங்களுக்கு பாதிக்கபாபட்டவருடனான தொடர்பு அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தால் அவருடன் தொடர்பு கொள்ளலாம். குற்றவாளி 18 வயதுக்குட்பட்டவராக இருந்தால், அனாவசிய தொடர்பு எதனையும் காவல்துறைக்கு அறிவிக்கலாம் ஆனால், அவர் இளைஞர் குற்றத்தடுப்பு குழுவின் (Youth Offending Team), கண்காணிப்பில் இருக்கிறார் என்று நீங்கள் அறிவீர்களானால், நீங்கள் குழுவுடன் நேரடியாகவே தொடர்பு கொள்ள விரும்பலாம். இளைஞர் குற்றத் தடுப்பு குழுக்களுக்கான தொடர்பு விபரங்கள் கீழ்க்கண்ட இணைய முகவரியில் கிடைக்கும்: www.gov.uk/government/collections/youth-offending-team-contact-details

## இந்தத் தொகுப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள தகவல்கள்

சேவை வழங்குநர்கள் தங்கள் இணையதளங்களில் இந்தத் தொகுப்புப் பற்றிய தகவல்களை உள்ளடக்கவேண்டும். இந்தத் தகவல்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு சம்பந்தப்பட்ட பக்கங்களை சுட்டிக்காட்டுவதாக அமையவேண்டும்:GOVT.UK

சேவை வழங்குநர்கள் இந்தத் தொகுப்பின் கீழ் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளக் கோரப்படும்போது, அவர்கள் அதனை பயனுறுதி மிக்கதாகவும், தரவுகள் பாதுகாப்புச் சட்டம், பொதுத் தரவுகள்பாதுகாப்பு விதிகள் 2018 என்பனவுக்கு அமையவும் செய்தல் வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களை அதிக எண்ணிக்கையில் கொண்ட முத லீட்டு மோசடி ஒன்று போல, அல்லது இது போன்ற வேறு விதிவிலக்கான வழக்குகள் போல, வழக்கு ஒன்றில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால், [அடிக்குறிப்பு 10] சேவை வழங்குநர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த தொகுப்பு வழங்கும் உரிமையின் கீழான தகவல்களை தனித்தனியாக வழங்குவதை விடுத்து, ரங்கள் இணையத்தளம் போன்ற மாற்று வழிகள் மூலம் அனுப்பலாம்.

சேவை வழங்குநர் பாதிக்கப்பட்ட ஆள் ஒருவருக்கு  வழங்கும் தகவல் வெளிப்படுத்தப்படுதல்  கீழ்க்கண்ட விளைவுகளை ஏற்படுத்துமானால், அத்தகவலை வழங்குமாறு இந்தத் தொகுப்பில் உள்ள  எதுவும்  கோரமாட்டாது:

- ஆளெவருக்கும் தீங்கு விளைவிக்கக் கூடும்.
- குற்றவியல் புலன்விசாரணை அல்லது வழக்கீடு எதனையும் சரிவரக்கையாளுவதை பாதிக்கக்கூடும்.  அல்லது உரிமையியல் அல்லது குற்றவியல் வழக்கு  அல்லது நிபந்தனையிந் பேரிலான விடுவிப்பு எதிலும்  தவறான உணர்வை ஏற்படுத்தலாம். சிவ
- சேவை வழங்குநரின் கருத்துப்படி  தேசிய பாதுகாப்புக்கு முரணாக  இருக்கும்

## ஊடகங்கள்  என்னுடன் தொடர்பு கொண்டால் என்ன நடைபெறும்?

பொதுவாக்ப பத்திரிகையாளர் நீதிமன்றில் சமுகமளித்து  அங்கே இடம்பெறும் நிகழ்வுகளைப் பிரசுரிக்கலாம். சில சமயங்களில் ஊடகங்கள் வழக்கு ஒன்றில்  அக்கறை கொண்டு உங்களையும் உங்கள் குடும்பத்தையும்  அல்லது உங்களை  அல்லது உங்கள் குடும்பத்தை  கருத்துக் கேட்க அணுகலாம். அவற்றுடன் பேசவேண்டும் என்கிற கடப்பாடு  இல்லை ஆயினும், நீங்கள் நீதிமன்ற வழக்கு ஒன்றின் முடிவில் நியாயமற்ற செல்வாக்குச் செலுத்தி,  நீதிமன்றத்தை அவமதித்ததான ஆபத்தைத் தேடும் அளவுக்கு  எதுவும் செய்யாதிருப்பதில்  அவதானமாக இருத்தல் வேண்டும்.[அடிக்குறிப்பு 11]

உங்களுக்கு கவலைகள் ஏதேனும் இருந்தால்,  அல்லது ஆலோசனை வேண்டுமானால்,  நீங்கள் காவல்துறையுடன்  அல்லது பாதிக்கப்பட்டவரின்  ஆதரவு வழங்குநர்  ஒருவருடன்  பேசலாம். மாற்றாக, நீங்கள்  சுயாதீன ஊடக தரம்  பேணும்  அமைப்பு டன் (Independent Press Standards  Organisation)  தொடர்பு கொள்ளலாம்அவர்கள் உங்கள் கவலைகள் பற்றி உங்களுடன்  பேசி, செயல்முறை  ஆலோசனையும் வழிகாட்டலும்  வழங்குவார்கள்

## மருத்துவ ஆதரவு பெறுதல்

நீங்கள் குற்றச்செயல் ஒன்றினால் பாதிக்கப்பட்டு அதன் விளைவாக உடல் அல்லது உளநல தேவை உங்களுக்கு ஏற்பட்டிருந்தால், நீங்கள் தேசிய சுகாதார சேவையின் சேவைகளை நாடலாம். இந்தச் சேவைகளை நாடுவதற்கு நீங்கள் காவல்துறைக்கு குற்றச்செயல் ஒன்றை அறிவித்திருக்கத் தேவையில்லை.

எவரேனும் கடுமையாகச் சுதவீனமுற்றிருந்து, அல்லது காயமுற்றிருந்து, உயிராபத்தான நிலையில் இருந்தால், 999-இல் அவசர சேவையை அழைக்கவும். உயிராபத்தற்ற அவசர நிலை என்றால், உங்களுக்குப் பல தெரிவுகள் உள்ளன நீங்கள்:

- இலக்கம் 111 -ஐ ( தேசிய சுகாதார சேவை, இங்கிலாந்து ) அல்லது இலக்கம் 0845 46 47 -ஐ ( தேசிய சுகாதார சேவை , வேல்ஸ் ) அழைக்கலாம். அவசரநிலை அற்ற மருத்துவ உதவி லைன்;
- உங்கள் பகுதியில் உள்ள தேசிய சுகாதார சேவையின் 'வாக் - இன்' நிலையத்துக்கு அல்லது உங்கள் பகுதியில் உள்ள அவசர கவனிப்பு நிலையம் / சிறு காயங்கள் யூனிட் டுக்கு அல்லது உங்கள் பகுதி விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கு (A&E) செல்லலாம்.
- உங்கள் பொது மருத்துவருக்கு (GP) அழைப்பு எடுக்கலாம் அல்லது அவரிடம் செல்லலாம். அவர் உங்களை உளநல ஆதரவு உட்பட ,விசேட சேவைகளிடம் உங்களைப் பாரப்படுத்தக் கூடியவராவார்.; அல்லது
- மருந்தாளர் (pharmacist) ஒருவருடன் பேசவும்

தேசிய சுகாதார சேவை வழங்கும் சேவைகள் பற்றிய மேலதிக தகவல்கள் www.nhs.uk என்கிற இணையதளத்தில்அல்லதுwww.wales.nhs.uk என்கிற இணையதளத்தில், அல்லது ( இங்கிலாந்து/ வேல்ஸில் )இலக்கம் 111/0845 46 47 - ஐ அழைப்பதன் மூலம் , அல்லது உங்கள் ஜி பியிடம் செல்வதினூடாகக் கிடைக்கும்.

உங்களைக காவல்துறை பாரப்படுத்தும் அதே வேளை நீங்களும் உங்களை பாலியல் தாக்குதல் பாரப்படுத்தல் நிலையம் ஒன்றிடம் பாரப்படுத்தலாம். [அடிக்குறிப்பு 12]. இந்த நிலையங்களில் விசேட பயிற்சி பெற்ற திறத்தொழிலர்கள் உள்ளனர். நீங்கள் கற்பழிப்பு அல்லது பாலியல் வன்முறைக்கு ஆளானால், குற்றச் செயலை காவல்துறைக்கு அறிவிக்கத் தீர்மானித்தீர்களோ இல்லையோ என்கிற பேதமின்றி அவர்கள் உங்களுக்கு உடல் மற்றும் உள நல ஆதரவு தரக்கூடியவர்கள்.

பரந்துபட்ட வகைகளில்  உள்ளத்தையும்  உணர்வுகளையும் ஆற்றுப்படுத்தி ஒய்வமைதி தரும் அணுகுமுறைகள் நிலையங்களில் உங்களுக்கு  கிடைக்கும். உதாரணமாக,  தேசிய சுகாதார சேவை, தன்னார்வ முகவரகங்கல் மற்றும் தனியார் திறத்தொழில் நிலையங்கள். நீங்கள் சாதாரணமாக ஐக்கிய இராஜ்ய வாசி அல்லவென்றால்,   ஆரம்ப சுகாதார சேவைகளுக்கும்,  சித்திரவதை, பெண் பாலுறுப்பு சிதைவு,  குடும்ப வன்முறை , பாலியல் வன்முறை என்பனவற்றின் விளைவாக, அல்லது  நீங்கள் இன்றைய அடிமை முறையால்  அல்லது மனிதக் கடத்தலால் பாதிக்கப்பட்டவராக கருதப்பட்டு  அதன் விளைவாக, உடல் அல்லது உள பாதிப்புக்கு ஏற்படுதல் போன்ற நிலைமைகளுக்குச்  சிகிச்சை அளிப்பதற்கான சில சுகாதார சேவைகளுக்கும்   பணக் கொடுப்பனவில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். மேலும் விபரங்கள் கீழ்க்கண்ட  இணைய முகவரியில் கிடைக்கும்: www.gov.uk/guidance/nhs-entitlements-migrant-health-guide

## மரண விசாரணை அதிகாரிகள்

இந்தத் தொகுப்பின்  கீழ் மரண விசாரணை அதிகாரிகள் உள்ளடக்கப்படவல்லை . மரண விசாரணைகள் குற்றவியல் குற்ற நடவடிக்கைகள் அல்ல என்பதும்,  இழப்பு நேர்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு  ஏற்கனவே   மரண விசாரணைகளில் அக்கறையுள்ள ஆள் என்கிற , அவர்களுக்குச் சில சட்டபூர்வ உரிமைகளை  வழங்கும்  அந்தஸ்து உண்டு என்பதும் இதற்கான காரணங்களாகும். சாட்சிகளிடம்   சம்பந்தமான கேள்விகளைக் கேட்டல் ஆவண வெளிப்படுத்தல்களை பெறுதல் வேறு சாட்சியங்களைப் பெறுதல் பற்றிய உரிமை இதில் உள்ளடங்கும். மரண விசாரணையில் சம்பந்தப்படும் குற்றச்செயலின் விளைவாகப் பலியாளானவரின் குடும்ப உறுப்பினர்கள், பதிலாக, இழப்பு நேர்ந்த வர்களுக்கு  மரண விசாரணை அதிகாரியின் புலன்விசாரணைகள் பற்றிய  வழிகாட்டி யைப் படித்தல் வேண்டும். அது கீழ்க்கண்ட இணைய முகவரியில் கிடைக்கும்:  www.gov.uk/government/publications/guide-to-coroner-services-andcoroner-investigations-a-short-guide

## இந்தத் தொகுப்பின் கீழ்வரும் உரிமைகளை  வழங்கும் பொறுப்பு எவரைச் சார்ந்தது?

இந்தத் தொகுப்பின் கீழ் வரும் உரிமைகளை வழங்கமாறு கீழ்க்கண்ட அமைப்புக்கள் கோரப்பட்டுள்ளன:

- காவல்துறை மற்றும் குற்றச்செயல் ஆணையர்கள்
- இங்கிலாந்திலும் வேல்ஸிலும் உள்ள அனைத்து காவல்துறைப் படையினர், பிரித்தானிய போக்குவரத்துக் காவல்துறையினர் மற்றும் தற்காப்பு அமைச்சு காவல்துறை
- காவல்துறை சாட்சிகள்நல பிரிவுகள்[அடிக்குறிப்பு 13]
- முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை
- மாண்புமிகு அரசியின் நீதிமன்ற மற்றும் விசாரணைமன்ற சேவை
- மாண்புமிகு அரசியின் சிறைச்சாலைகள் மற்றும் நன்னடத்தைக் கண்காணிப்பு சேவை
- தேசிய நன்னடத்தைக் கண்காணிப்புச் சேவை
- இங்கிலாந்து மற்றும் வேல்ஸுக்கான நிபந்தனையில் விடுவிப்புச் சபை
- குற்றவியல் குற்ற வழக்குகளின் மீள்பரிசீலனை ஆணையம்
- குற்றவியல் குற்றக் காயங்களுக்கான இழப்பீட்டு அதிகாரசபை
- ஐக்கிய இராஜ்ய அதி உயர் நீதிமன்றம் (The UK Supreme Court)
- இளைஞர் குற்றத் தடுப்புக் குழுக்கள்

இந்தத் தொகுப்பின் கீழ், பாதிக்கப்பட்டவர்களில் சிலர், தங்கள் உரிமைகளை மேலே குறிப்பிடப்பட்டுள்ள சேவை வழங்குநர்களில் சிலரும் வேறு சில சேவை வழங்குநர்களும் சேர்ந்த கூட்டு சேவை வழங்குநர்களிடமிருந்து பெறுவார்கள் வேறு சேவை வழஙகுநர்களில் கீழ்க்கண்டவர்களும் உள்ளடங்குவார்கள்:

- வியாபாரப் போட்டி மற்றும் சந்தைகள் தொடர்பிலான மேலாண்மை
- வியாபாரம், சக்தி மற்றும் பெருந்தொழில் மூலோபாயத்துக்கான இலாகா (குற்றச்செயல் தடுப்பு செயலாக்கம் )
- சுற்றுச் சூழல் முகவரகம்
- நிதி நெறிமுறை மேலாண்மை
- சூதாட்டக் கண்காணிப்பு ஆணையம்
- சுகாதார மற்றும் பாதுகாப்பு மேலாண்மை
- மாண்புமிகு அரசியின் இறைவரி மற்றும் சுங்கம்
- உள்விவகார அமைச்சு (குடிவரவு செயலாக்கம்)
- தகவல்துறை ஆணையர் அலுவலகம்

- காவல்துறையினர் நடத்தைக்கான சயாதீன அலுவலகம்
- தேசிய குற்றச்செயல் முகவரகம்
- தேசிய சுகாதார தேவை
- வேல்ஸ் தேசிய வளங்கள்
- ரயில்பாதைகள் மற்றும் வீதிகளுக்கான அலுவலகம்
- பெருமோசடிகளுக்கான அலுவலகம்

குற்றச்செயல்களின் புலன்விசாரணைகள் மற்றும்/ அல்லது வழக்கீடுகளில் வேறு சேவை வழங்குநர்களும் பங்குபற்றலாம். [அடிக்குறிப்பு 14] இருப்பினும் குற்றச்செயல்களைப் புலன்விசாரணை செய்யவும் வழக்குப் போடவும் பரந்த அதிகாரங்களைக் கொண்ட காவல்துறை மற்றும் முடிக்குரிய வழக்கீட்டு சேவை போன்று இந்த சேவை வழங்குநர்களால் சில சூழ்நிலைகளில் சில குறிப்பிட்ட வகைக் குற்றச் செயல்களைப் புலன்விசாரணை செய்து வழக்காடுதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது அவர்களால் பாதிக்கப்பட்டோருடன் எந்த வழியில் எவ்வளவு விரைவில் தொடர்பு கொள்ள முடிகிறுத என்று தீர்மானிக்கும்.

இந்தத் தொகுப்பில் உள்ள உரிமைகள் ( மேலே பட்டியலிடப்பட்டவை போன்ற), வேறு சேவை வழங்குநர்கள் குற்றப் புலன்விசாரணை செய்ய, அல்லது வழக்கீட்டுக்குத் தீர்மானிக்க முறையாகப் பொறுப்பு எடுக்கும் பட்சத்திலேயே பொருந்தும். இருப்பினும், வேறு சேவை வழங்குநர்கள் மேற்கொள்ள முன்வரும் பணிகள் அனைத்துமே காவல்துறையும் முடிக்குரிய வழக்கீட்டு சேவையும் மேற்கொள்ளும் அதே பணிகள் அல்ல. இந்தத் தொகுப்பின் கீழ் வரும் சேவை வழங்குநர் செய்யும் பணிகளுக்கு சமமான பணிகளை வேறு சேவை வழங்குநர் ஒருவர் செய்யும்போது, (உதாரணமாக வேறு சேவை வழங்குநர் புரியப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்செயல் ஒன்றை புலன்விசாரணை செய்கிறார் அல்லது வழக்கீடு செய்கிறார்) அவர் மேலே பட்டியலிடப் பட்டுள்ளாரா என்கிற பேதம் இன்றி, நியாயமற்ற கால தாமதமில்லாது, உரிமைகளை வழங்கவேண்டும்.

## காவல்துறை மற்றும் குற்றச்செயல் ஆணையர்களின் வகிபாகம்

காவல்துறை மற்றும் குற்றச்செயல் ஆணையர்கள் திறமையுடனும் பயனுறுதியுடனும் காவல்துறை அலுவல்களை நடத்தும் பொருட்டு உள்ளூரில் தெரிவு செய்யப்பட்டவர்களாவர் தங்கள் பகுதியில் காவல்துறையினர் முக்கியமாகக் கவனம் செலுத்தவேண்டிய

பணிகளுக்கு பாதிக்கப்பட்டவர்களின் கலந்தாலோசனையுடன் முதன்மை அளித்து, அதற்கான பொறுப்பை பிரதம கான்ஸ்டபிளிடம் ஒப்படைக்கும் சட்டரீதியான கடமை அவர்களுக்கு உண்டு. பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படவேண்டும் என்று இந்தத் தொகுப்பில் விபரிக்கப்படும் சேவைகள் பலவற்றைத் தொடக்கி வைக்கும் பொறுப்பு அவர்களுக்கு உண்டு.

### பாதிக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான ஆணையரின் வகிபாகம் (பாதிக்கப்பட்டோரின் ஆணையர்)

பாதிக்கப்பட்டோரின் ஆணையர் இந்தத் தொகுப்பின் கீழ் சேவைவழங்குநராகப் பட்டியலிடப்படவில்லை. இந்தத் தொகுப்பை கிரமமாக மீளாய்வு செய்யும் சட்டரீதியான கடமை ஆணையருக்கு இருப்பதே இதற்குக் காரணமாகும். பாதிக்கப்பட்டோரின் கருத்துக்களைக் கேட்டறிதல், குற்றவியல் குற்ற நீதிமுறையை பாதிக்கப்பட்டவர்களின் கருத்தில் இருந்து விளங்கிக்கொள்ளல் கிடைக்கும் சேவைகளையும் ஆதரவையும் மேம்படுத்த உதவ முயற்சி செய்தல் என்பன ஆணையரின் வகிபாகத்தில் ஒரு பகுதியாகும். பாதிக்கப்பட்டவர்கனின் ஆணையர் தனிப்பட்ட வழக்குகளில் உதவி செய்யவோ, வேறு முடிவுகளை எடுக்கச்சொல்லி குற்றவியல் குற்ற முகவரகங்களைச் சவாலுக்கு உட்படுத்த இயலாது.

## உயர்த்தப்பட்ட உரிமைகள்

பாதிக்கப்பட்டோரில் எளிதில் ஊறுபடக்கூடியவர்கள் அல்லது பயமுறுத்தப்பட்டவர்கள் என்று கருதப்படுவோர், (இழப்பு நேர்ந்த நெருங்கிய உறவினர் ஒருவர் உட்பட) அல்லது தொடர்ச்சியாக இலக்கு வைக்கப்படுவோர் கூடுதலாக விசேட உதவி தேவைப்படுபவர்கள் என்று இந்தத் தொகுப்பு ஏற்றுக்கொள்கிறத( பாதிக்கப்பட்டோரி ல் சிலர் ஒரு வகையினராகவோ ஒன்றுக்கு மேற்பட்ட வகையினராகவோ இருக்கலாம்). இத்தகைய ஆதரவுச் சேவைகளில் விசேட ஆதரவுச் சேவை ஒன்றிடம் பாரப்படுத்துதல் உள்ளடங்கலாம். முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டு, விசேட நடவடிக்கைகள் உறுதியாகிய நிலையில் இது விரைவாக இடம்பெறும். (உரிமை 4-ஐப் பார்க்கவும்). இந்தத் தொகுப்பு ஒவ்வொரு தனி

உரிமையைப் பொறுத்தவரையிலும் உயர்த்தப்பட்ட உரிமைகள் எங்கே உள்ளன என்று முதன்மைப்படுத்திக் காட்டுகிறது.

சேவை வழங்குநர் ஒருவர்  நீங்கள் உயர்த்தப்பட்ட உரிமைகளுக்குத் தகுதியுடையவர்  என்று இனம் கண்டவுடன், இந்தத் தகவல், இந்தத் தொகுதியின் கீழ் பொறுப்புக்கள் உள்ள இதர சேவை வழங்குநர்களுக்கும், அத்துடன், பொருத்தமானவிடத்து, பாதிக்கப்பட்டவர்களை ஆதரிக்கும்  சேவைகளுக்கும் வழங்கப்படுவதை  உறுதி செய்யவேண்டும்.

மேலே விபரிக்கப்பட்டுள்ள பிரிவினருள் நீங்கள் வராவிடில்,  சேவை வழங்குநர் ஒருவர் உங்கள் சூழ்நிலை அல்லது குற்றச்செயலின் தாக்கத்தைப் பொறுத்து, உங்களுக்கு சில உயர்த்தப்பட்ட உரிமைகளை வழங்கத் தீர்மானிக்கலாம்.

## எளிதில் ஊறுபடக்கூடிய அல்லது பயமுறுத்தலுக்குள்ளான பாதிக்கப்பட்டவர்கள்

நீங்கள் இந்தத் தொகுப்பின் கீழ், கீழ்க்கண்ட சூழ்நிலைகளில்  எளிதில் ஊறுபடக்கூடிய பாதிக்கப்பட்ட ஆளாக [அடிக்குறிப்பு 5] உயர்த்தப்பட்ட உரிமைகளுக்குத் தகுதி  பெறுவீர்கள்:

- குற்றச்செயல் நேரம் நீங்கள் 18 வயதுக்குட்பட்டவராக இருக்கிறீர்கள். [அடிக்குறிப்பு 16] அல்லது
- உங்கள் சாட்சியத்தின் தரம் பாதிக்கப்படும் சாத்தியம் உண்டு, ஏனென்றால் நீங்கள்
    - உளநலச் சட்டம் 1983-இன் விதிகளுக்கு அமைய  மனக் கோளாறினால்  அவதிப்படுகிறீர்கள்
    - உங்களுக்கு உடல் ஊனம் ஒன்று உண்டு அல்லது உடல் கோளாறு ஒன்றினால் அவதிப்படுகிறீர்கள்.

சேவை வழங்குநர், நீதிமன்றில் சாட்சியம் அளிப்பது குறித்த உங்கள் அச்சம் காரணமாக உங்கள் சாட்சியத்தின் தரம் பாதிக்கப்படும் என்று கருதினால்,  இந்தத் தொகுப்பின் கீழ் உள்ள உயர்த்தப்பட்ட உரிமைகளுக்கு நீங்கள்   பயமுறுத்தப்பட்ட பாதிக்கப்பட்ட ஆளாகத் தகுதி உள்ளவராகிறீர்கள்.[அடிக்குறிப்பு 17]

பாதிக்கப்பட்டவர் ஒருவர்   பயமுறுத்தப்பட்டாரா என்று மதிப்பிடும்போது, சேவை வழங்குநர் கீழ்க்கண்டவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும்:

- சந்தேகநபர், அவரது குடும்பத்தினர், அல்லது சகாக்கள், அல்லது வழக்கில் சந்தேக நபராகவோ சாட்சியாகவோ இருக்கக்கூடிய வேறெந்த நபரோ பாதிக்கப்பட்டவருடன் நடந்துகொள்ளும் முறை.
- பாதிக்கப்பட்டவரின் வயது
- பொருத்தமானால், பாதிக்கப்பட்டவரின் சமூக மற்றும் கலாசாரப் பின்னணி, மத நம்பிக்கைகள் அல்லது அரசியல் கருத்துக்கள், இனப் பின்னணி, குடும்ப மற்றும் தொழில் சூழ்நிலைகள்
- வழக்குடன் சம்பந்தப்பட்ட குற்றச்செயலின் தன்மையும் அது நடந்ததாகக் கூறப்படும் சூழ்நிலையும். (பாலியல் குற்றச்செயல் அல்லது மனிதக் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் பயமுறுத்தப்பட்ட பாதிக்கப்பட்ட ஆளாகக் கருதப்படுவார்கள்)
- பாதிக்கப்பட்டவரால் கூறப்பட்ட கருத்துக்கள் எவையும்.

## மிகமோசமான குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர்கள்

நீங்கள் குற்றவியல் குற்றச் செயல் ஒன்றினால் இழப்பு நேர்ந்த குடும்பத்தில் நெருங்கிய உறவினராக, குடும்ப துஷ்பிரயோகத்தால், துவேஷக் குற்றச்செயல், பயங்கரவாதம், பாலியல் குற்றச்செயல்கள், மனிதக் கடத்தல், இன்றைய அடிமைத்தனம், கொலை முயற்சி, கடத்தல முறையற்ற சிறைவைப்பு, உயிராபத்து ஏற்படுத்தும் நோக்குடனான தீவைப்பு மற்றும் வேண்டுமென்றே காயப்படுத்தல் அல்லது கடும் காயம் விளைவித்தல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவராக இருந்தால், நீங்கள் இந்தத் தொகுப்பின் கீழ், உயர்த்தப்பட்டஉரிமைகளுக்குத் தகுதி உள்ளவராவீர்கள்

இழப்பு நேர்ந்த குடும்பத்தில் உள்ள நெருங்கிய உறவினர்களுக்கு கிடைக்கும் மேலதிக உயர்த்தப்பட்ட உரிமைகள் இந்த த் தொகுப்பில் உள்ள ஒவ்வொரு உரிமையிலும் தனித்தனியாக முதன்மைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

## விடாப்பிடியாக இலக்கு வைக்கப்படும் பாதிக்கப்பட்ட ஆட்கள்

நீங்கள் குற்றச்செயலின் தொடர்ச்சியான நேரடிப் பாதிப்புக்கு ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இலக்காக்கப்பட்டு வந்தால், குறிப்பாக

வேண்டுமென்றே இலக்காக்கப்பட்டு வந்தால், அல்லது தொல்லை கொடுக்கும் அல்லது பின்தொடர்ந்து தொல்லை கொடுக்கும தொடர்சம்பவங்களால் பாதிக்கப்பட்டால், இந்தத் தொகுப்பின் உயர்த்தப்பட்ட உரிமைகளுக்குத் தகுதி உள்ளவராகிறீர்கள்

## உரிமை 1: விளங்கிக்கொள்ளும் ஆற்றல் மற்றும் விளங்கவைக்கும் ஆற்றல் To be able to understand and to be understood

1.1 என்ன நடைபெறுகிறது என்று நீங்கள் விளங்கிக்கொள்வதற்கும் உங்களை விளங்கிக்கொள்வதற்கும் உங்களுக்கு உதவி வழங்கப்படவேண்டியது உங்களது உரிமையாகும். இதற்கான பொருத்தமான செற்பாடுகளை கருத்தில் கொள்ளும்போது. சேவை வழங்குநர்கள் உங்கள் விளங்கிக்கொள்ளும் மற்றும் விளங்கச்செய்யும் ஆற்றலைப் பாதிக்கக்கூடிய உங்கள் தனிப்பட்ட குணவியல்புகளை ஆராயவேண்டும். அனைத்து சேவை வழங்குநர்களும் இலகுவான, புரியக்கூடிய மொழியில் தொடர்பாடல் செய்யவேண்டும்.அனைத்து உரை மொழிபெயர்ப்பு அல்லது மொழி பெயர்ப்பு சேவைகளும் பாதிக்கப்பட்டவருக்கு இலவசமாக வழங்கப்படவேண்டும்.

1.2 குற்றச்செயலின் தாக்கம் காரணமாக உங்களுக்கு விளங்கத்தக்கதாகவும் உங்களை ஏனையோர் விளங்கத்தக்கதாகவும் உங்களுக்கு உதவி தேவைப்படுமானால், சேவை வழங்குநர் , அது உங்கள் நலனுக்கு உதவாது அல்லது புலன்விசாரணைகளில் அல்லது வழக்கீட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதினால் அன்றி, நீங்கள் தெரிவு செய்யும் ஒருவரை உதவிக்கு அழைக்கலாம். இந்தச் சூழ்நிலைகளில், சேவை வழங்குநர் ஏன் என்று உங்களுக்கு விளக்குவார்.

1.3 ஆங்கிலத்தை விளங்கவோ அம்மொழியில் பேசவோ உங்களுக்கு வில்லங்கமாக இருந்தால், கீழ்க்கண்ட நிகழ்வுகளின்போது, உங்களுக்கு விளங்க உதவ உங்களுக்கு [ அடிக்குறிப்பு 18]மொழிபெர்ப்பாளர் ஒருவரைப் பயன்படுத்தும் உரிமை உண்டு

- குற்றவியல் குற்றச்செயல் ஒன்றை அறிவித்தல்[அடிக்குறிப்பு 19]
- காவல்துறையால் நேர்காணல் செய்யப்படல்
- சாட்சியாக சாட்சியம் அளித்தல்

1.4 நேர்காணலினது அல்லது நீதிமன்றக் கேட்புரையினது நோக்கங்களுக்கு அமைய அவசியமானால், அங்கே நீங்கள் வாசிக்கவென உங்களுக்கு ஆவணம் ஏதும் ஒன்றின் மொழிபெயர்ப்பு தரப்படலாம்.கீழ்க்கண்டவையும் இவற்றில் உள்ளடங்கும் :

- குற்றச்செயல் அறிவிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளும் எழுத்துமூல ஆவணம்
- நேர்காணல் அல்லது நீதிமன்ற கேட்புரையின் நோக்கங்களுக்கு அமைய, உங்களிடம் வெளியிடப்பட்ட ஆவணத்தின் பிரதி ஒன்றைப் பார்த்தல் அவசியமானால், ஆவணத்தின் சம்பந்தப்பட்ட பகுதிகளின் பிரதி
- நீதிமன்ற விசாரணை நடைபெறும் திகதி, நேரம், மற்றும் இடத்தை உங்களுக்கு அறிவிக்கும் தொடர்பு ஆவணம்.
- குற்றவியல் குற்ற விசாரணை நடவடிக்கைகளின் முடிவும், கிடைக்குமானால், முடிவுக்கான காரணங்கள்
- பாதிக்கப்பட்டோரின் மீளாய்வு செய்யும் உரிமைத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட முறைப்பாடு அல்லது கோரிக்கை எதுவுக்கும் கிடைத்த பதில் .[அடிக்குறிப்பு 20]

1.5 மேலே பட்டியலிடப்பட்டுள்ள ஆவணங்களில் எவற்றினதும் வாய்மூல மொழிபெயர்ப்பை அல்லது சுருக்கத்தை பெற்றுக்கொள்வதால், விசாரணை நடவடிக்கைகளின் நடுநிலைத் தன்மைக்கு ஊறு நேராது என்றால், அவற்றை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

1.6 வேல்ஸில் விசாரிக்கப்படும் வழக்குகளைப் பொறுத்தவரை உங்களுக்கு சாட்சியம் அளிக்க வெல்ஷ் மொழியைப் பயன்படுத்தும் சட்டபூர்வமான உரிமை உண்டு. நீதிமன்று தேவையான ஏற்பாடுகளைச் செய்யும். [அடிக்குறிப்பு 22] அத்துடன், குற்றவாளியின் இருப்பிடம் பற்றிய பேதமின்றி, பாதிக்கப்பட்டவர் நிபந்தனையின் பேரில் விடுவித்தல் சபைக்கு வெல்ஷ் மொழியில் தனிப்பட்ட வாக்குமூலம் வழங்கவும், நிபந்தனையின் பேரில் விடுவித்தல் முடிவின் சுருக்கத்தை வெல்ஷ் மொழியில் தருமாறு கேட்கவும் உங்களுக்கு உரிமை உண்டு.

# உரிமை 2: குற்றச்செயலின் விபரங்கள் நியாயமற்ற காலதாமதம் இன்றி பதிவு செய்யப்படும் உரிமை

2.1 சம்பவத்தை அடுத்து காவல்துறையால் பதிவு செய்யப்பட்ட குற்றச்செயலின் விபரங்கள் உங்களிடம் நியாயமற்ற தாமதம் இன்றி வழங்கப்படவேண்டியது உங்கள் உரிமையாகும். நீங்கள் சம்பவம் ஒன்றை அறிவிக்கும்போது குற்றம் பற்றிய விபரங்களை வழங்குமாறு கோரப்படுவீர்கள்

2.2 நீங்கள் சாட்சிய வாக்குமூலம் ஒன்றை வழங்குமாறு கோரப்படும் பட்சத்தில், வழக்கு நீதிமன்றம் செல்லுமிடத்து, நீங்கள் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கக் கோரப்பட நேரலாம் என்று காவல்துறையினர் உங்களுக்கு விளக்குவார்கள்

2.3 நீங்கள் நேர்காணலுக்கு உள்ளாகக் கோரப்பட்டால், நேர்காணல் எதுவும் நியாயமற்ற காலதாமதம் இன்றி மேற்கொள்ளப்படடு, நேர்காணல்கள் மிகக்குறைந்த எண்ணிக்கையில், இயலுமானவிடத்து ஒரே ஆளால் மேற்கொள்ளப்படவேண்டும். நீங்களும் (உங்கள் குடும்பமும்) சந்தேக நபருடன் எவ்வித அனாவசிய தொடர்பும் வைக்காதிருப்பதை உறுதிப்படுத்தக் காவல்துறை தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

2.4 உங்களுக்கு மேலதிக ஆதரவு வழங்குவதால் நன்மை உண்டா என்று காவல்துறை சிந்திக்கவேண்டும். உதாரணமாக, மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியை வழங்குதல், எந்த நேர்காணலையும் அதற்காகப் பயிற்சி பெற்ற திறத்தொழிலர்களைக் கொண்டு நடத்துதல். நேர்காணல் அந்த நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்ட அல்லது மாற்றி அமைக்கப்பட்ட வளாகத்தில் நடத்தப்படுவதையும் அவர்கள் உறுதிப்படுத்த முற்படவேண்டும். இது சாத்தியமல்லவெனில், காவல்துறை ஏன் என்று காவல்துறை உங்களுக்கு எடுத்துக்கூறும்.

இது சாத்தியமல்லவெனில், காவல்துறை ஏன் என்று காவல்துறை உங்களுக்கு எடுத்துக்கூறும்.

2.6 காவல்துறை அல்லது முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை உங்கள் சாட்சியம் உங்களிடம் உள்ள ஓர் ஊறுபாடு காரணமாகப் பாதகமாகப் பாதிக்கப்படலாம் என்று நம்பினால், அவர்கள் பதிவ பெற்ற இடைப்பட்டவர் ஒருவரின் ஆதரவு பெறும் தகுதி உங்களுக்கு உண்டா என்று ஆராய்ந்து (உரிமை 4 -ஜப் பார்க்கவும்) உங்கள்

தேவைகளின் அடிப்படையில் வேறு நியாயமான சரிப்படுத்தல்களை மேற்கொள்வார்கள்

**பதிவு பெற்ற இடைப்பட்டவர் என்பவர் யார்?**

காவல்துறைக்கும், குற்றவியல் குற்ற விசாரணைகளில் நீதிமன்றத்துக்கும் சாட்சி சொல்லத் தொடர்பாடல் சிரமங்களுக்கு ஆளாகும் ஊறுபடக்கூடிய பாதிக்கப்பட்ட ஆட்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவி புரிபவர் சுயதொழில் புரியும் பதிவு பெற்ற இடைப்பட்டவர் ஆவார்.

பாதிக்கப்பட்டவர்/ சாட்சி ஒருவருக்கு அவரது வயது, கற்றல் பிரச்சினை, மனக் கோளாறு அல்லது உடல் வலதுகுறைவு காரணமாக அவரது தொடர்பாடல் ஆற்றல் பாதிக்கப்பட்டு, பதிவு பெற்ற இடைப்பட்டவரின் உதவி தேவைப்படலாம் சாட்சி ஒருவரால் சாட்சியம் அளிக்க முடிகிறது அல்லது முடியவில்லை என்கிற இரு நிலைகளுக்கிடையிலான வேற்றுமையாக அவர் பெரும்பாலும் காணப்படுகிறார்.

2.7 குற்றவியல் குற்ற விசாரணை நடவடிக்கைகளின் நோக்கங்களுக்கு அமைய மருத்துவ பரிசோதனை ஒன்று தேவைப்படுமானால், அவை மிகக்குறைந்த எண்ணிக்கையிலும், உங்கள் உடன்பாட்டுடனும் செய்யப்படவேண்டும்.

நீங்கள் பாலியல் வன்முறையால், பாலின வன்முறையால். அல்லது குடும்ப துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவராக இருந்தால், நேர்காணலை நடத்தும் காவல்துறை அலுவலர் நீங்கள் தெரிவு செய்யும் பாலினத்தவராக இருக்கக் கோரும் உரிமை உங்களுக்கு உண்டு. இவ்வாறு செய்வதனால், விசாரணை நடவடிக்கைகளின் நேரியதன்மைக்கு ஊறு நேருமானாலொழிய காவல்துறை உங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டும். இவ்வாறு நடந்தால் காவல்துறை ஏன் என்று உங்களுக்கு எடுத்துக்கூறும்.

2.9 நீங்கள் ஊறுபடக்கூடியவர் என்று கருதப்பட்டால், , உதாரணமாக 18 வயதுக்குட்பட்டவர், அல்லது பயமுறுத்தப்பட்டவர் (பார்க்கவும்உயர்த்தப்பட்ட உரிமைகள்) காவல்துறையினர் உங்களிடம் அல்லது உங்கள் பெற்றார்/ பாதுகாவலரிடம், உங்கள் காவல்துறை நேர்காணலை வீடியோ மூலம் பதிவு செய்ய விரும்புவீர்களா என்று கேட்பார்கள்.என்ன நடந்தது என்று அவர்களிடம் கூறுவதை உங்களுக்கு இலகுவாக்கும் பொருட்டு இதனைக் கேட்பார்கள். இது உங்கள் சாட்சியமாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம். உங்கள் நீதிமன்ற குறுக்கு விசாரணைச் சாட்சியத்தையும் நீதிமன்ற விசாரணக்கு முன்னதாகவே ஒரு குறிக்கப்பட்ட நேரத்தில், விாரணைக்குப் புறம்பாகப் பதிவு

செய்யலாம். காவல்துறையினர் இந்தத் தெரிவு பற்றி உங்களுடன் கலந்தாலோசிக்கும். விசாரணையின்போது உங்கள் சாட்சியத்தை அளிக்க நீங்கள் விரும்பும் பட்சத்தில், உங்களுக்குத் தகுதி இருந்தால், நீதிமன்றம் ஒன்று பிரதிவாதியைச் சந்திக்கும் ஆபத்தைக் குறைக்கும் பொருட்டு உங்கள் சாட்சியத்தையும், குறுக்கு விசாரணையையும் நீதிமன்றத்தக்குக அப்பால் உள்ள நேரடி இணைப்பு அறையில் அல்லது தூர இடத்தில் வைத்து வழங்க அனுமதி வழங்கலாம். இருப்பினும், நீங்கள் விரும்பும் பட்சத்தில், நீதிமன்றத்திலும். உங்கள் சாட்சியத்தை அளிக்கலாம். சாட்சிகள் எவ்வாறு சாட்சியம் அளிப்பது என்று தங்கள் விருப்பங்கள் பற்றிச் சிந்தித்தபோதிலும், இது நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் ஒரு விண்ணப்பத்திலும் , இறுதி முடிவை நீதிபதி ஒருவரே எடுப்பார் என்கிற புரிதலிலும் தங்கியுள்ளது என்பதை வழக்கீட்டாளர்கள் சாட்சிகளுக்கு அறியத்தரவேண்டும்.

# உரிமை 3: குற்றச்செயலை அறிவிக்கும்போது தகவல்கள் வழங்கப்படவேண்டும்.

3.1 நீங்கள் காவல்துறைக்குக் குற்றச்செயல் ஒன்றை அறிவித்தால், அல்லது உங்கள் சார்பில் குற்றச்சாட்டு ஒன்று அறிவிக்கப்பட்டால், அல்லது புலன்விசாரணைகளின் மத்தியில் நீங்கள் பாதிக்கப்பட்ட ஒருவர் என்று உங்களுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டால், உங்கள் குற்றச்சாட்டு எழுத்துமூலம் உறுதி செய்யப்படும் உரிமை உங்களுக்கு உண்டு. இதில் குற்றச்செயலின் அடிப்படை விபரங்கள், ஒரு குற்றச்செயல் குறியீட்டு இலக்கம், உங்கள் வழக்கைக் கையாளும் காவல்துறை அலுவலரின் தொடர்பு விபரங்கள் உள்ளடங்கும். இந்த உறுதிப்படுத்தும் ஆவணம் ஒரு கடிதமாக, மின்னஞ்சலாக, எழுத்துச் செய்தியாக அல்லது கையால் எழுதப்பட்ட ஆவணமாக இருக்கலாம்.

3.2 எழுத்தில் உறுதிப்படுத்தல் ஆவணத்தை உங்களுக்கு அனுப்புவதால் உங்களுக்கு தீங்கு ஏற்படும் என்று காவல்துறையினர் கருதுமிடத்து, உதாரணமாக குடும்ப துஷ்பிரயோக வழக்குகள், அவர்கள் உறுதிப்படுத்தலை உங்கள் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படாத வழி ஒன்றைக் கையாண்டு அனுப்புதல் வேண்டும்.

3.3. குற்றவியல் குற்ற நீதியின் செயற்பாடு பற்றியும், பாதிக்கப்பட்டவராக உங்களுக்கு உள்ள உரிமைகள பற்றியும் எங்கே

நீங்கள்  மேலும் தகவல்கள் பெறலாம் என்று காவல்துறை  விளக்கம் அளிக்கும். எங்கே, எவ்வாறு ஆலோசனையும் ஆதரவும் கிடைக்கும் என்கிற தகவல்கள் இதில் உள்ளடங்கும். உதாரணமாக, பொருத்தமானபோதும் கிடைக்கும் சாத்தியம் உள்ளபோதும்  எவ்வாறு இழப்பீடு, மருத்துவ ஆதரவு,  உளநல ரீதியான ( விசாரணைக்கு முந்திய சிகிச்சை மற்றும் ஆற்றுப்படுத்தல் சேவை  உட்பட்ட)   விசேட ஆதரவு,  மற்றும் மாற்று இருப்பிட வசதி தேடுவது. (பார்க்கவும் உரிமை 5) நீங்கள் இங்கிலாந்திலோ வேல்ஸிலோ வசிக்காவிடில், என்ன ஏற்பாடுகள் கிடைக்கும் என்றும் காவல்துறையினர்  விளக்குவார்கள்.

**பாதுகாப்பான இடவசதி பெற்றுக்கொள்ளல்**

நீங்கள் குடும்ப துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகிவரும் ஒருவரானால், எவ்வாறு பாதுகாப்பான இடவசதி பெற்றுக்கொள்வது என்று ஆலோசனையும் ஆதரவும் வழங்குவதற்கு பல அமைப்புக்கள் உள்ளன. தேசிய குடும்ப  துஷ்பிரயோக உதவிலைனில்  ஓராண்டில் நாளாந்தம் 24 மணி நேரமும்  அர்ப்பணிப்புடன் இயங்கும் பணியாளர் இருப்பார்கள். 0808 2000 247 என்கிற தொலைபேசி இலக்கத்தில் அவர்களை அணுகலாம். சமாரித்தர்களும்  நாளாந்தம் 24 மணி நேரம் பணியாற்றுவார்கள். அவர்களை இந்த இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்:116 123 மாற்றுவழியாக, சமூக சேவைகள் அமைப்பு, ஜிபி மருத்துவர்கள் மருந்தகங்கள், பிரஜைகள் ஆலோசனை  அலுவலகம் என்பன உட்படப்  பல வகைச் சேவைகள் மேலதிக தகவல்கள் வழங்கி உங்கள் பகுதியில் ஆதரவு  கிடைக்கும்  இடங்களுக்கு வழிகாட்டுகின்றன. கீழ்க்கண்ட இணைய முகவரியில் மேலும் தகவல்கள் கிடைக்கும்:

போதிய நேரம் கிடைக்காதவர்களின் நலன் கருதி பெரும்பாலான குடும்ப துஷ்பிரயோக ஆதரவுத் தளங்கள்  விரைவுத்தீர்வுத் தெரிவு களைக்  கொண்டுள்ளன.  நீங்கள் உடனடி ஆபத்தில இருந்தால், காவல்துறையுடன் 999-இல் தொடர்பு கொள்ளவும்.

3.4  குற்றவாளி  வயதுவந்தவராக இருந்தால், முன்னிலை மீட்பு நீதி (Restorative Justice) பற்றிய தகவல்களைக் காவல்துறையிடம்  பெற்றுக் கொள்ளவும்  உள்ளூரில் எவ்வாறு முன்னிலை மீட்பு  நீதிச் சேவைகளை அணுகலாம் என்று அறியவும் உங்களுக்கு உரிமை உண்டு. குற்றவாளி 18 வயதுக்குட்பட்டவராக இருந்தால், இளைஞர் குற்றத்தடுப்புக் குழுவிடமிருந்து முன்னிலை மீட்பு நீதி பற்றிய தகவல்களைப் பெறும் உரிமை  உங்களுக்கு உண்டு.[அடிக்குறிப்பு 23]

3.5  முன்னிலை மீட்பு  நீதி பற்றிய தகவல்களை உங்களுக்கு வழங்கும் பொறுப்பு காவல்துறையிடம் தொடக்கத்தில் உள்ளபோதிலும், இந்தத் தகவல்களைப் பெறுவதனால்  உங்களுக்கு  நன்மை கிடைக்குமா

என்று சேவை வழங்குநர்கள் குற்றவியல் குற்ற நீதிச் செயற்பாட்டின் ஏதுமொரு கட்டத்தில், ஆராய்வது அவசியம்.

**முன்னிலை மீட்பு நீதி என்றால் என்ன?**

முன்னிலை மீட்பு நீதி என்பது, குற்றச்செயலால் தீங்கு இழைக்கப்பட்டவர்களையும், தீங்குக்குப் பொறுப்பானவர்களையும் தொடர்பாடல் செய்யவைக்கும் ஒரு செயல்முறையாகும். ஒரு குறிப்பிட்ட சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் இழைக்கப்ட்ட தீங்கை நிவர்த்தி செய்வதில் ஒரு பங்கை வகிக்க வழிவகுக்குகிறது. முன்னேற்றகரமான பாதையைத் தேடுவதில் இது பெறுமதி மிக்கதாக அமையலாம். தொடர்பாடல் பல வடிவங்களில் நிகழலாம்.சிலருக்க இது குற்றவாளியுடனான நேரடிச் சந்திப்பாக அர்த்தப்படும். ஏனையோரைப் பொறுத்தவரை, கடிதமூலம் தொடர்பு கொள்ளல், பதிவு செய்யப்பட்ட நேர்காணல்கள் அல்லது வீடியோக்களாக அமையும். முன்னிலை மீட்பு நீதியின் எந்த வடிவம் உங்களுக்கு மிகப் பொருத்தமாக இருந்தாலும் புயிற்சி பெற்ற ஏற்பாட்டாளர்கள் செயல்முறையின் இறுதிவரை, உங்களை ஆயத்தப்படுத்தி ஆதரவுவழங்குவார்கள்.

முன்னிலை மீட்பு நீதி சகல தரப்புக்களுக்கும் தன்னார்வமானது. ஏற்பாட்டாளர்கள், உட்பட சம்பந்தப்பட்ட அனைவரும் இதனை முன்னெடுச் செல்வது பாதுகாப்பானது மற்றும் பொருத்தமானத என்று இணங்கியிருத்தல் வேண்டும். நீங்களும் குற்றவாளியும் வழக்கின் அடிப்படைப் பொருண்மைகளை ஏற்றுக்கொண்டு, இருவரும் பங்குபற்ற விரும்பினால் மட்டுமே இந்தச் செயல்முறை தொடரும். நீங்கள் பங்குபற்ற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை, எந்த நேரமும் நீங்கள் விலகிக்கொள்ளலாம். முன்னிலை மீட்பு நீதியில் உங்களுக்குச் சரியெனப்படும் நேரத்தில் நீங்கள் பங்குபற்றக் கோரலாம். குற்றவாளியுடன் தொடர்பு கொள்ளப்பட்டு,பாதுகாப்பானது என்று செயல்முறை மதிப்பிடப்பட்ட நிலையில், உ ங்களுக்கு பங்குபற்றும் வாய்ப்பு வழங்கப்படலாம்.

3.6 இந்த உரிமையின் கீழ் உள்ள தகவல்கள் அனைத்தும் குற்றச்செயல் அறிவிக்கப்பட்ட 5 வேலை நாட்களுக்குள் வழங்கப்படவேண்டும். (உயர்த்தப்பட்ட உரிமைகளின் கீழ் அவை 1 வேலை நாளில்) வழங்கப்படவேண்டும்.

# உரிமை 4: பாதிக்கப்பட்டவர்களை ஆதரித்து , உங்கள் தேவைகளுக்கேற்ற ஆதரவும்

# சேவைகளும் வழங்கக்கூடியச சேவைகளிடம் நீங்கள் பாரப்படுத்தப்படவேண்டும்

## தேவைகள் மதிப்பிடப்படுதல்

4.1 நீங்கள் காவல்துறைக்குக் குற்றச்செயல் ஒன்றை அறிவிக்கும்போது, உங்களுக்கு ஆதரவு அளிக்கப்படுதல் உங்கள் உரிமையாகும். நீங்கள் இந்தத் தொகுப்பின் பக்கம் 10-இல் விபரிக்கப்பட்டுள்ள உயர்த்தப்பட்ட உரிமைகளுக்கு உரித்தானவரா என்கிற மதிப்பீடு ஒன்றும் இதில் உள்ளடங்கும். மதிப்பீட்டின்போது எவ்வளவு கூடுதலாக உங்களால் தகவல்கள் தர முடிகிறதோ, அவ்வளவு தூரம் உங்கள் தேவைகளுக்கு மிகவும் ஏற்ற வகையில் சேவை வழங்குநர்களால் உதவியும் ஆதரவும் உங்களுக்கு வழங்கக்கூடியதாக இருக்கும்.

4.2 உங்கள் சேவை வழங்குநர்களிடம், எவ்வாறு உங்கள் தேவைகள் மாற்றம் அடைந்துள்ளன என்று எடுத்துரைத்தால், வழக்கு நடக்கும் காலம் முழுவதும், உங்களை மீள் மதிப்பீடு செய்ய சேவை வழங்குநர்கள் வாய்ப்புத் தரவேண்டும்.

4.3 நீங்கள் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் முன்னிலையாகக் கோரப்பட்டால், உங்களுக்கு விசாரணைக்கு முன்னரும் நீதிமன்றத்திலும் மேலும் உதவியும் ஆதரவும் தேவைப்படுமா என்று தீர்மானிக்கும் பொருட்டு சாட்சிகள் கவனிப்புச் சேவை புறம்பான தேவைகள் மதிப்பீடு ஒன்றைச் செய்ய முன்வரும்.

## பாதிக்கப்பட்டவர்களை ஆதரிக்கும் சேவைகளிடம் பாரப்படுத்தல்

4.4 பாதிக்கப்பட்டவர்களை ஆதரிக்கும் சேவைகள், நிலைமைக்கு ஈடு கொடுக்கவும் குற்றச்செயலின்பின் இயலுமானவரை மீண்டெளவும் உதவுவதற்கே உள்ளன. குற்றச்செயல் காவல்துறைக்கு அறிவிக்கப்டாவிடினும், ஆதரவு இலவசம் உங்கள் பகுதியில் ஆதரவு பெறுவது பற்றி, மேலும் தகவல் பெற உங்கள் உள்ளூர் காவல்துறை

மற்றும் குற்றச்செயல் ஆணையருடன் தொடர்பு கொள்ளவும்.[அடிக்குறிப்பு 23]அல்லது அணுகவும்:www.gov.uk/get-support-as-a-victim-of-crime

4.5 நீங்கள் குற்றச்செயல் ஒன்றைக் காவல்துறைக்கு அறிவித்தால், பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னிலை மீட்பு நீதி, உட்பட ஆதரவு வழங்கும் சேவை ஒன்றுக்கு நீங்கள் பாரப்படுத்தப்படவேண்டிய உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் பகுதியில் கிடைக்கும் அனைத்து ஆதரவுச் சேவைகள் பற்றியும் காவல்துறையினர் உங்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். நீங்கள் 2 நாட்களுக்குள் ஆதரவுச் சேவை ஒன்றிடம் பாரப்படுத்தப்படுவீர்கள். ஆதரவு கிடைக்குமானால், இந்தச் சேவைகள், உரிய நேரத்தில் அதனைப் பெறுத்தர முனையும்.

4.6 குற்றச்செயலை காவல்துறையினரிடம் அறிவிக்காதிருக்க நீங்கள் தீர்மானிக்கும்போதும், எந்த நேரத்திலும் ஆதரவுச் சேவைகளை அணுகும் உரிமை உங்களுக்கு உண்டு. உள்ளூர் ஆதரவுச் சேவைகளை நீங்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும். உங்களுக்குச் சமீபமாக உள்ள ஆதரவுச் சேவை ஒன்றைத் தேட, உள்ளூர் காவல்துறை மற்றும் குற்றச்செயல ஆணையருடன் தொடர்பு கொள்ளவும்.[அடிக்குறிப்பு 24] அல்லது நாடவும்: www.gov.uk/getsupport-as-a-victim-of-crime

4.7 நீங்கள் இழப்பு நேர்ந்த குடும்பத்து நெருங்கிய உறவினராக இருந்தால், குடும்ப தொடர்பு அலுவலர் ஒருவரை காவல்துறை உங்களுக்கு நியமிப்பது பொருத்தம் என்று சிரேஷ்ட புலன்விசாரணை அலுவலர் கருதுமிடத்து, அவ்வாறு நியமித்தல் உங்களது உரிமையாகும். உங்கள் குடும்ப தொடர்பு அலுவலர் வழமையாக உங்களுக்கும் சேவை வழங்குநர்களுக்கும் இடையிலான ஒரு தனித் தொடர்புமுனையாக இயங்குவார். உங்கள் வழக்கு, கொலை அல்லது கைமோசக்கொலைக் குற்றச்சாட்டு சம்பந்தப்பட்டதானால், நீங்கள் தேசிய கொலை நிவாரணச் சேவையிடமும் (National Homicide Service) தொடர்புடைய வேறு விசேட ஆதரவுச் சேவைகளிடமும் பாரப்படுத்தப்படவேண்டிய உரிமையும் உங்களுக்கு உண்டு. இந்தப் பாரப்படுத்தல் வழமைபோல உங்கள் குடும்ப தொடர்பு அலுவலர் மூலம் மேற்கொள்ளப்படும்.

**தேசிய கொலை நிவாரணச் சேவை என்றால் என்ன?**

தேசிய கொலை நிவாரணச் சேவை பயங்கரவாதச் செயல் ஒன்றின விளைவு உட்பட, கொலை அல்லது கைமோசக்கொலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணர்ச்சிகளை ஆற்றுப்படுத்தும், செயல்முறையான, விசேட ஆதரவையும் சம நிலையில் உள்ளவர்களின் ஆதரவையும் வழங்குகிறது. இதன் சேவை இலவசமானது.

4.8 உங்கள் தேவைகளையும் உங்கள் வழக்கின் தன்மையையும் பொறுத்து, உங்களுக்கு விசேட ஆதரவு வழங்கப்படலாம். உதாரணமாக, சுயாதீன பாலியல் வன்முறை ஆலோசகரின் அல்லது குடும்ப வன்முறை ஆலோசகரின் ஆதரவு. உங்கள் ஆலோசகர் வழமையாக, வழக்கு நடைபெறும் காலம் முழுவதும், உங்கள் தனித் தொடர்புமுனையாக இருந்து காவல்துறையினர், சாட்சிகள் கவனிப்பு பிரிவு மற்றும் முடிக்குரிய வழக்கீட்டுச் சேவையுடன் தொடர்பாடல் செய்வார்.

**சுயாதீன பாலியல் வன்முறை ஆலோசகர் அல்லது சுயாதீன குடும்ப வன்முறை ஆலோசகர் ஒருவரது வகிபாகம் என்ன?**

சுயாதீன பாலியல் வன்முறை ஆலோசகர் கற்பழிப்பு மற்றும் பாலியல் தாக்குதலுக்கு உள்ளான ஆட்களுடன் பணியாற்றும் ஆலோசகராவார். பாதிக்கப்பட்டவர் காவல்துறைக்கு அறிவித்தாரா என்கிற பேதமின்றி அவர் பணியாற்றுவார்.

சுயாதீன குடும்ப வன்முறை ஆலோசகர்கள் குடும்ப துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும் பாதிக்கப்பட்டவர்களுடன், அவர்களது அனுபவங்களையும் அவர்கள் எதிர்கொள்ளும் தீங்கு பற்றியும் விளங்கிக் கொள்ளுமுகமாகப் பணியாற்றவார்கள். பாதிக்கப்பட்டவர் பாதுகாப்புடன் வாழ்வதையும், துஷ்பிரயோகத்திலிருந்து விடுபட்டு தனது வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பத் தொடங்குவதையும உறுதிப்படுத்த அவசியமான அனைத்தும் கிடைக்கும் வகையில் அவருடன் சேர்ந்து தனிப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை அவர்கள் தயாரிப்பார்கள் இந்தத் திட்டத்தில் பாதிக்கப்பட்டோர் (சுகாதார சேவை மற்றும் வீடமைப்பு சேவை போன்ற) சட்டபூர்வ சேவைகளை அணுகி உதவி பெற உதவுதல், பலமுகவரக ஆபத்து மதிப்பீட்டு மகாநாட்டில் அவர்களது குரலைப் பிரதநிதித்துவப் படுத்தல் மற்றும் அவர்களது சமூகமத்தியில் உள்ள தன்னார்வ சேவைகளை அணுகுதல் உள்ளடங்கலாம். சுயாதீன குடும்ப வன்முறை ஆலோசகர்கள் சுதந்திரமான சட்டபூர்வ சேவையாளர்கள் ஆவர். அவர்களால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளுக்கு ஏற்ற பொருத்தமான தகவல்களையும் ஆலோசனையையும் வழங்க இயலும்.

4.9 நீங்கள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க கோரப்பட்டால், சாட்சி ஆதரவு சேவை ஒன்றிடம் நீங்கள் பாரப்படுத்தல் செய்யப்படவேண்டிய உரிமை உங்களுக்கு உண்டு. (பார்க்கவும் உரிமை 8).

4.10 உங்கள் வழக்கின் முடிவில், அதன் முடிவு எப்படி இருந்தபோதிலும், ஆதரவுச் சேவை ஒன்றிடம் நீங்கள் முன்னர் அவர்களை அணுகாத போதிலும் பாரப்படுத்தப்படவேண்டிய உரிமை உங்களுக்கு உண்டு. உங்களுக்குச் சமீபமாக உள்ள

பாதிக்கப்பட்டோரை ஆதரிக்கும் சேவை ஒன்றைத் தேட உங்கள் உள்ளூர் காவல்துறையினருடனும் குற்றசெயல் ஆணையருடனும் தொடர்பு கொள்ளவும [அடிக்குறிப்பு 25] அல்லது நாடவும்: www.gov.uk/get-support-as-a-victim-of-crime

## விசேட நடவடிக்கைகள்

4.11 விசேட நடவடிக்கைகளைப் பயன்படுத்தி, சாட்சியமளிப்பதற்கான தகுதி உங்களுக்கு உண்டா, அவ்வாறு சாட்சியமளிப்பதால் உங்களுக்கு நன்மை விளையுமா என்று தீர்மானிப்பதற்காக, உங்கள் தேவைகள் காவல்துறையினரால் அல்லது சாட்சிகள் கவனிப்புச் பிரிவினால் மதிப்பீடு செய்யப்படும் உரிமை உங்களிடம் உண்டு.[அடிக்குறிப்பு 26]காவல்துறையினர் அல்லது சாட்சிகள் கவனிப்பு பிரிவு என்ன விசேட நடவடிக்கைகள் உள்ளன என்று விளக்குவார்கள். அத்துடன் அவற்றில் எதற்கு விண்ணப்பிக்க விரும்புவீர்கள் என்று உங்கள் கருத்தைக் கேட்பார்கள்

**விசேட நடவடிக்கைகள் என்றால் என்ன?**

ஊறுபடக்கூடிய அல்லது பயமுறுத்தப்பட்ட பாதிக்கப்பட்ட ஆட்கள், நீதிமன்றத்தில் சிறப்பாகச் சாட்சியமளிக்கவும், சாட்சியமளிப்பதுடன் தொடர்புடைய மன அழுத்தத்தில் இருந்து ஓரளவு விடுபடவும் உதவியாக விசாரணையின்போது விசேட நடவடிக்கைகளைப் பயன்படுத்தக் கேட்கலாம். தகுதி இருந்தால் விசேட நடவடிக்கைகளை அனுமதிப்பதா என்று நீதிமன்றம் தீர்மானிக்கும்.

பொதுவான விசேட நடவடிக்கைகளில் கீழ்க்கண்டவை உள்ளடங்கும்: சாட்சிக்கூண்டைச் சுற்றித் திரை/ மறைப்பு போடுதல் அல்லது நீதிமன்றத்தின் உள்ளே தனி அறையிலிருந்து நேரடி வீடியோ இணைப்பு செய்தல் அல்லது நீதிமன்றக் கட்டடத்துக்கு வெளியே இருந்து நேரடி இணைப்பு வசதி செய்தல். இதனால் நீங்கள் பிரதிவாதிகளையோ நீதிமன்ற பார்வையாளர்களையோ பார்க்கும்ீநிரப்பந்தம் இல்லை.

இதர விசேட நடவடிக்கைகளில் உள்ளடங்குவன:

- பத்திரிகையாளர்களோ பொதுமக்களோ நீதிமன்றத்தில் அனுமதிக்கப்படாது தனிப்பட்ட முறையில் சாட்சியம் அளித்தல்

- முடிக்குரிய நீதிமன்றத்தில் நீதிபதி, எதிர்தரப்பு, வழக்கீட்டு அத்துவக்காத்துக்கள் அணியும் புனைமுடிகள் மற்றும் கவுண்களை அகற்றுதல்
- தொடர்பு கொள்ளும் கருவிகள் பாவனை அல்லது கேள்விகளை விளங்கிக்கொள்ள இடைப்பட்டவரின் உதவிபெறுதல், அல்லது
- முன்னதாகப் பதிவு செய்யப்பட்ட வீடியோ மூலம் சாட்சியம் அளித்தல் அல்லது குறுக்கு விசாரணை செய்யப்படுதல் இதன் அர்த்தம், சாட்சி விசாரணையின்போது சாட்சியம் அளிக்கத் தேவையில்லை என்பதாகும். ( சாட்சிகள் முன்னதாகப் பதிவு செய்யப்பட்ட சாட்சிய விடயத்தில், நீதிமன்றத்தில் )

4.12 விசேட நடவடிக்கைகள் கோரி வழக்குத் தொடுப்பவர் விடுக்கும் வேண்டுகோளின் பேரில் நீதிபதி (judge ) அல்லது நீதவான் ( magistrate)அவை வழங்கப்படவேண்டுமா என்று தீர்மானிப்பார்கள். சாட்சிகள் கவனிப்பு பிரிவு, நீதிபதி அல்லது நீதவானின் தீர்மானத்தை உங்களுக்கு தெரிவிப்பார்கள். (பார்க்கவும் உரிமை 8). அத்துடன், மாண்புமிகு அரசியின் நீதிமன்றங்கள் மற்றும் விசாரணை மன்றங்கள் சேவையைச் சேர்ந்த நீதிமன்றப் பணியாளர்கள் வழங்கப்பட்டுள்ள விசேட நடவடிக்கைகள் உங்களுக்காக மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவார்கள்.

# உரிமை 5: இழப்பீடு பற்றி உங்களுக்குத் தகவல் வழங்கப்படவேண்டும் என்பது உங்கள் உரிமையாகும்.

## நீதிமன்றத்தால் கட்டளை இடப்படும் இழப்பீடு

5.1 பிரதிவாதி குற்றத்தை ஏற்றுக்கொண்டால், அல்லது குற்றவாளியாகக் காணப்பட்டால், குற்றச்செயலின் விளைவாக ஏற்பட்ட இழப்பு,, சேதம், அல்லது காயத்துக்கு இழப்பீடு செலுத்துமாறு நீதிபதி அல்லது நீதவான் அவருக்கு உத்தரவிடுவார். இழப்பீடு பெறுவது எவ்வாறு என்று காவல்துறையினர் உங்களுக்குச் சொல்லித்தரவேண்டும். அது உங்கள் உரிமையாகும். இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டமைக்கு உங்களியம் சான்று கோரப்படலாம். உதாரணமாக

பற்றுச்சீட்டுக்கள் அல்லது குற்றச்செயலின்போது ஏற்பட்ட சேதத்தைத் திருத்துவதற்கான செலவு விபர ஆவணம்

## குற்றவியல் குற்றக் காயங்களுக்கான இழப்பீட்டுத் திட்டம்

5.2 வன்முறைக் குற்றச்செயல் ஒன்றின் நேரடி விளைவாக, உங்களுக்குக் கடும் உடல் அல்லது உளக் காயம் ஏற்பட்டிருந்தால், நீங்கள் குற்றவியல் குற்றக் காயங்களுக்கான இழப்பீட்டுத் திட்டத்தின் (திட்டம்) மூலம் இழப்பீடு பெற உரித்துடையவராக இருக்கக்கூடும். .[அடிக்குறிப்பு 27] இந்தத் திட்டம், இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்தில் காயப்பட்டவர்களுக்கானது. இந்தத் திட்டத்தின் மூலம் எவ்வாறு இழப்பீட்டுக்கு விண்ணப்பிக்கவேண்டும் என்று காவல்துறையினர் உங்களுக்குக் கூறவேண்டும். இது உங்கள் உரிமையாகும்.[அடிக்குறிப்பு 28](பார்க்கவும் உரிமை 3)

5.3 திட்டத்தை நிர்வகிப்பது குற்றவியல் குற்றக் காயங்களுக்கான இழப்பீட்டு ஆணையம் ஆகும்.

5.4 உங்கள் விண்ணப்பத்தைத் தாமதிக்காதீர். நடைமுறைச் சாத்தியமாகும் நியாயமான விரைவில் நீங்கள் விண்ணப்பித்தல் வேண்டும் சம்பவம் நடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் இது வழமையாகச் செய்யப்படவேண்டும். விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரம் குற்றவியல் குற்றக் காயங்களுக்கான இழப்பீட்டு ஆணையம் கால எல்லைகளை நீடிக்கமுடியும். சம்பவம் நடந்த நேரத்தில் நீங்கள் 18 வயதுக்குட்பட்டவராக இருந்திருந்தால், 29 வெவ்வேறு விதிகள் பொருந்தும். இழப்பீட்டுக்குத் தகுதி உள்ளவராகுவதற்குத் திட்டத்தில் உள்ள விரிவான தகுதிகாண் அடிப்படைகளை நீங்கள் கொண்டிருக்கவேண்டும்.

5.5 விண்ணப்பிப்பதற்கு நீங்கள் குற்ற விசாரணையின் முடிவுக்காகக் காத்திருக்கலாகாது. உங்கள் பாத்தியதைக் கோரிக்கை குற்றவாளி, குற்றம் காணப்படுவதில் தங்கியிருக்கவில்லை. இருப்பினும், குற்றவியல் குற்றக் காயங்களுக்கான இழப்பீட்டு ஆணையத்திடம், உங்கள் விண்ணப்பத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு வேண்டிய போதிய தகவல்கள் இல்லையானால், விசாரணை முடிவை நீங்கள் அறியும்வரை, உங்கள் விண்ணப்பத்தை முன்னெடுக்காது வைத்திருக்கக்கூடும்.

5.6 திட்டம் இறுதி வழிமுறையாகும். இழப்பீட்டை வேறெங்கிலும் நாடும் வாய்ப்புக் கிடைக்குமிடத்து, நீங்கள் அவ்வாறு செய்யவேண்டும். திட்டத்தின் கீழ் கிடைக்கும் இழப்பீட்டு

வழங்கலின்போது , நீதிமன்றம் கட்டளையிட்ட இழப்பீடு அல்லது உரிமையியல் (சிவில்) மானநட்ட வழக்கு இழப்பீடு போன்ற இழப்பீட்டு கொடுப்பனவுகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். குற்றவியல் குற்றக் காயங்களுக்கான இழப்பீட்டு ஆணையம், நீங்கள் கிடைக்கும் இதர வழிகள் மூலம் இழப்பீடு கோர நியாயமான நடவடிக்கைகளை எடுத்து அந்த நடவடிக்கைகளின் முடிவுக்காக காத்திருக்கும் வரை, உங்கள் பாத்தியதை உரிமை விடயத்தில் முடிவு எடுப்பதைத் தள்ளிவைக்கலாம்.

5.7 நீங்கள் குற்றவியல் குற்றக் காயங்களுக்கான இழப்பீட்டு ஆணையத்துக்கு விண்ணப்பம் அனுப்பியதன் மேல், அது உங்கள் விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதை உறுதிப்படுத்தும். அத்துடன், உங்கள் விண்ணப்பம் பற்றிய அனைத்து எழுத்துமூல தொடர்பாடலுக்கும் 20 வேலை நாட்களுக்குள் பதிலளிக்கும்.

5.8 உங்கள் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டதன் மேல், குற்றவியல் குற்றக் காயங்களுக்கான இழப்பீட்டு ஆணையத்தின் முடிவை மீளாய்வு செய்வதற்கு உங்களுக்கு உள்ள உரிமை பற்றிய தகவல்கள், அதற்கான நடைமுறையும் கால எல்லைகளும் உட்பட, வழங்கப்படும்.

5.9 இழப்பீட்டுக்கு விண்ணப்பிப்பது பற்றிய மேலதிக தகவல்கள் கீழ்க்கண்டவாறு கிடைக்கும்: www.gov.uk/claimcompensation criminal-injury, காவல்துறை, உங்கள் உள்ளூர் ஆதரவுச் சேவை அல்லது குற்றவியல் குற்ற காயங்களுக்கான இழப்பீட்டு ஆணையத்தினை கீழ்க்கண்ட தொலைபேசிய இலக்கத்தில் தொடர்பு கொள்வதன் மூலம்: 0300 003 3601.[^30}

5.10 வெளிநாடுகளில் பயங்கரவாதத் தாக்குதல்களில் பாதிக்கப்படும் ஐக்கிய இராஜ்ய பிரஜைகளும் கடல்கடந்த பயங்கரவாத இழப்பீட்டுத் திட்டத்தின் (Overseas Terrorism Compensation Scheme) கீழ் இழப்பீட்டுக்கு உரித்தாகலாம். இது இந்தத் தொகுப்பின் வாய்ப்பெல்லைக்கு அப்பாற்பட்டது. இழப்பீட்டுக்கு விண்ணப்பிப்பது பற்றிய மேலும் தகவல்களை இங்கே பெறலாம்: www.gov.uk/compensation-victim-terrorist-attack அல்லது குற்றவியல் குற்றக் காயங்களுக்கான இழப்பீடு ஆணையத்தை கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு பெறலாம்: 0300 003 3601.[அடிக்குறிப்பு 30]

## உரிமையியல் (குற்றவியல்-அல்லாத) இழப்பீடு

5.11 குற்றவியல் நீதிக்கு வெளியே சந்தேக நபரிடம் அல்லது குற்றவாளியிடமிருந்து இழப்பீடு கோரலாம். உரிமையியல் (சிவில்)

இழப்பீடு  கோருவது பற்றி நீங்கள் சிந்திப்பதானால், சொலிசிட்டர் ஒருவரிடம் சட்ட ஆலோசனையும் உதவியும் பெறவேண்டும்.

### இழப்பீடு கோருவது குறித்து  சட்ட ஆலோசனை/ உதவி பெறுதல்

5.12 உங்களுக்கு  சட்ட ஆலோசனை மற்றும்/ அல்லது  உதவி தேவைப்படுமானால்,  நீங்கள் சொலிசிட்டர் ஒருவருடன்  தொடர்பு கொள்ளவேண்டும். நீங்கள் குறைந்த வருமானம்  அல்லது நலனுதவிகள் பெறுபவராக இருந்தால்,  இதற்கான செலவுக்கு  உதவ, சட்ட உதவியை  (Legal Aid)  பெறக்கூடியதாக இருக்கலாம். நீங்கள் சட்ட உதவி பெறத் தகுதி உள்ளவரா என்பது பற்றிக் கூடிய தகவல்கள் கீழ்க்கண்ட இணைய முகவரியில்  கிடைக்கும் : www.gov.uk/legal-aid

5.13  உள்ளூரில்  சொலிசிட்டர் ஒருவரை நாட நீங்கள் சட்டவாளர் சபையுடன்  கீழ்க்கண்ட இணைய முகவரியில் தொடர்பு கொள்ளவேண்டும்:www.lawsociety.org.uk

## உரிமை 6: புலன்விசாரணை மற்றும் வழக்கீடு பற்றிய தகவல்கள் வழங்கப்படவேண்டிய உரிமை

6.1  புலன்விசாரணைகள் சம்பந்தமாக எடுக்கப்படும் முக்கிய முடிவுகளை காவல்துறையினர் உங்களுக்குத் தெரிவிக்கவேண்டிய உரிமை உங்களுக்கு உண்டு.  அத்துடன்  பொருந்துமிடத்து,  வேலை 5 நாட்களுக்குள்  அம்முடிவுகளுக்கான காரணங்கள் உங்களுக்கு விளங்கப்படுத்தப்படவேண்டும்.                  ( உயர்த்தப்பட்ட உரிமைகளின் கீழானால், கீழ்க்கண்டவை நிகழ்ந்த  1 நாளில்  விளங்கப்படுத்தப்படவேண்டும். ) சந்தேக நபர்:

- கைது;
- iஎச்சரிக்கையுடனான நேர்காணல்;
- குற்றச்சாட்டு இன்றி விடுதலை; அத்துடன்

- காவல்துறை பிணையில் விடுதலை, புலன்விசாரணை அல்லது காவல்துறை பிணை நிபந்தனைகளில் மாற்றம் அல்லது இரத்து

6.2 உங்கள் வழக்கை புலன்விசாரணை செய்வதில்லை என்று முடிவு செய்தால், அந்த முடிவு பற்றிய விளக்கம் உங்களுக்கு 5 வேலைநாட்களுக்குள் தரப்படும். ( உயர்த்தப்பட்ட உரிமைகளின் கீழ்1 வேலை நாளில்) காவல்துறையினர் உங்களை ஆதரவு சேவை ஒன்றிடம் பாரப்படுத்தவும் முன்வருவார்கள்.

6.3. காவல்துறையினர் உங்கள் வழக்கைப் புலன்விசாரிப்பதானால், விசாரணையின் முன்னேற்றம் குறித்த ஆகப்பிந்திய நிலைவரங்களை எவ்வெப்போது உங்களுக்கு தருவது, நீங்கள் தொடர்பு கொள்ள விரும்பும்முறை குறித்து உங்களுடன் கலந்தாலோசிப்பார்கள். நீங்கள் மிக அண்மையிலான உங்கள் விருப்பத் தெரிவுகளை எந்த நேரத்திலும் நடைமுறைப்படுத்தலாம்.

6.4 வழக்கு நீதிமன்றம் செல்லவேண்டுமா என்பது பற்றிய புலன்விசாரணை மற்றும் முடிவை எடுக்க நீண்ட காலம் எடுக்கலாம். முக்கிய முடிவுகளுக்கிடையிலும் நீண்ட நாள் இடைவெளி ஏற்படக்கூடும். இந்த நேரத்தில் உங்களுடன் தொடர்ப கொள்வதை நீங்கள் விரும்புவீர்களா என்று காவல்துறையினர் உங்களுடன் ஆலோசித்து, புலன்விசாரணை சமயம் நீங்கள் கேள்விகள் எவையும் எழுப்ப விரும்புவீர்களானால், தொடர்பு கொள்ளும் விபரங்களைத் தருவார்கல்.

6.5 சேவை வழங்குநர் ஒருவரால், உங்களுக்கு மிகப்பிந்திய தகவல்களை வழங்க இயலாது போய்விடும். அத்துடன்/ அல்லது உங்களுக்கு விருப்பமான தொடர்பு முறையைப் பயன்படுத்த இயலாது போகும்.

6.6 சில வழக்குகளைப் பொறுத்தவரை, காவல்துறை அல்லது முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை வழக்கை நீதிமன்றம் கொண்டு செல்லாது தாமே கையாள முடிவு செய்யக்கூடும். இது நீதிமன்றத்துக்கு வெளியிலான தீர்வு என்று விபரிக்கப்படுகிறது. [அடிக்குறிப்பு31] இது, சம்பவத்தை ஒப்பீட்டு ரீதியில் மேலும் விரைவாகக் கையாள வழிவகுக்கிறது. அத்துடன், மேலும் குற்றச்செயல்கள் நடப்பதைத் தடுப்பதில் இது கூடிய பயனுறுதி கொண்டதாக காணப்படலாம்.

6.7 காவல்துறை அல்லது முடிக்குரிய வழக்கீட்டு சேவை, நீதிமன்றத்துக்கு வெளியிலான தீர்வு ஒன்றைக் கருத்தில் கொள்ளும்போது, உங்கள் கருத்துக்கள் அறியப்படவேண்டும் என்பதும் முடிவு எடுக்கப்படும்போது உங்கள் கருத்துக்கள்

கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்பதும்  உங்கள் உரிமையாகும். நடைமுறையில் இது சாத்தியமில்லை என்றால், காவல்துறையும் முடிக்குரிய வழக்கீட்டுச் சேவையும் ஏன் என்று உங்களுக்கு விளக்குவார்கள்.

6.8  குற்றச்செயலின் முழுச்  சூழ்நிலையையும் உங்கள் கருத்துக்களையும் ஆராய்ந்தபின் காவல்துறையும் முடிக்குரிய வழக்கீட்டுச் சேவையும்  இறுதி முடிவை எடுப்பார்கள். தங்கள் முடிவுக்கான காரணங்களை அவர்கள் 5 வேலை நாட்களுக்குள் உங்களிடம்  கூறவேண்டும்.  இது உங்கள் உரிமையாகும். (உயர்த்தப்பட்ட உரிமைகளின் கீழ்  குற்றவாளிக்கு நீதிமன்றத்துக்கு வெளியிலான தீர்வு வழங்கும் முடிவுக்கான காரணங்களை) 1 நாளில் கூறவேண்டும்.

6.9  காவல்துறையினர் தங்கள் புலன்விசாரணைகளை முடித்ததும் அடுத்து ஆவது என்ன என்று முடிவு செய்வார்கள்,அல்லது,மேலும் மோசமான குற்றச்செயல்கள் விடயத்தில், முடிக்குரிய வழக்கீட்டுச் சேவையிடம்  தகவல்களை அனுப்புவார்கள். வழக்கை நீதிமன்றம் கொண்டுசெல்லப் போதிய சாட்சியம் உண்டா எனச் சேவை முடிவுசெய்யும்.

6.10   சந்தேக நபர் மீது வழக்குத் தொடருவதில்லை என்று காவல்துறையினர் அல்லது முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை முடிவு செய்தால், அவ்வாறு முடிவு செய்த 5 வேலை  நாட்களுக்குள், (உயர்த்தப்பட்ட உரிமைகளின் கீழ் என்றால் 1 வேலை நாளுக்குள் ) கீழ்க்கண்டவை உங்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும். அது உங்களது உரிமையாகும்:

- முடிவுக்கான காரணங்கள்;
- நீங்கள்  எவ்வாறு மேலும் தகவல்கள் பெறலாம் என்கிற விபரம்;
- எவ்வாறு மறு ஆய்வு ஒன்றைக் கோரலாம் மற்றும்  தேசிய காவல்துறைத் தலைவர்கள் சபையின் அல்லது முடிக்குரிய வழக்கீட்டு சேவையின் பாதிக்கப்பட்டவர் மறு ஆய்வு உரிமைத் திட்டத்தின் கீழ் கூற்றுக்களை முன்வைக்கலாம் என்பன பற்றிய தகவல்கள் [அடிக்குறிப்பு 32]; and
- எவ்வாறு ஆதரவுச் சேவை ஒன்றிடம் பாரப்படுத்தப்படலாம் என்கிற விபரம்.

6.11  சந்தேக நபர் மீது வழக்குப் போடுவதில்லை என்று காவல்துறை அல்லது  முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை எடுத்த முடிவு உங்களுக்கு அதிருப்தி ஏற்படுத்தினால், முடிவை தேசிய காவல்துறைத் தலைவர்கள் சபையின் கீழ், அல்லது முடிக்குரிய வழக்கீட்டுச்

சேவையின பாதிக்கப்பட்டவர் மறு ஆய்வு உரிமைத் திட்டத்தின் கீழ் மறு ஆய்வு செய்யுமாறு கோர உங்களுக்கு உரிமை உண்டு.

**பாதிக்கப்பட்டவர்களின் மறு ஆய்வு உரிமைத் திட்டம் என்பது என்ன?**

பாதிக்கப்பட்டவர்களின் மறு ஆய்வு உரிமைத் திட்டம் , குற்றச்செயல் ஒன்றினால் பாதிக்கப்பட்டவர்கள், வழக்கு தொடருவதில்லை அல்லது வழக்கை நிறுத்துவது என்று காவல்துறையினர் அல்லது முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை எடுத்த முடிவை மறு ஆய்வு செய்யக் கோரும் உரிமையை வழங்குகிறது.

**காவல்துறை**

பாதிக்கப்பட்டவர்களின் மறு ஆய்வு உரிமைத் திட்டம், சந்தேக நபர் ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடருவதில்லை என்ற காவல்துறை முடிவை மறு ஆய்வு செய்யக் கோரும் உரிமையை வழங்குகிறது. சந்தேக நபர் ஒருவர், கைது செய்யப்பட்டதன் மேல், அல்லது தன்னார்வமாக சரணடைந்ததன் மேல், அடையாளம் காணப்பட்டு, எச்சரிக்கையுடன் நேர்காணலுக்கு உள்ளாகும் வழக்குகளுக்கு இது பொருந்தும். காவல்துறையினர் கீழ்க்கண்டவாறாக முடிவு செய்தால் மறு ஆய்வு கோரும் உரிமை உங்களுக்கு இருக்கும்:

- குற்றம் சாட்டும் அதிகாரம் வழக்குகளில் இருந்தும், வழக்கீடு செய்யாதிருத்தல்
- குற்றம் சாட்டுவது தொடர்பான முடிவு எடுப்பதற்காக விடயத்தை முடிக்குரிய வழக்கீட்டு சேவையிடம் பாரப்படுத்தவேண்டிய தகுதி வழக்குக்கு இல்லை.

**முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை**

பாதிக்கப்பட்டவர்களின் மறு ஆய்வு உரிமைத் திட்டம், குற்றம் சுமத்துவதில்லை அல்லது அனைத்து வழக்கு நடவடிக்கைகளையும் நிறுத்துவது என்று முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை எடுக்கும் முடிவை மறு ஆய்வு செய்யக்கோரும் உரிமையை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், நீங்கள் கீழ்க்கண்ட முடிவுகளின் மறு ஆய்வைக் கோரலாம்:

- குற்றம் சாட்டுவதில்லை
- அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் தொடராது நிறுத்தி ( அல்லது அவற்றை நீதவான் நீதிமன்றத்திலிருந்து மீளப்பெற்று) அனைத்து வழக்கு நடவடிக்கைகளையும் முடிவுறுத்தல்

- அனைத்து வழக்கு நடவடிக்ககளின்போதும் சாட்சியம் முன்வைக்காமை; அல்லது
- வழக்கீட்டு வடவடிக்கைகளில் உள்ள அனைத்துக் குற்றச்சாட்டுக்ளையும் 'கோப்பில் இருக்க விடுதல்'. (முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை வழக்கைத் தொடருவதில்லை என்று முடிவு செய்து, 'குற்றச்சாட்டுக்களை இந்த நீதிமன்றத்தினது அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தினது அனுமதி இன்றி தொடர இயலாது' என்று தலைப்பிட்ட 'கோப்பில் இருக்க விடுமாறு ' கோரிக்கை விடுக்கம் சூழ்நிலையில் இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது).

6.12 ஒரு குறிப்பிட்ட வழக்கில் நீங்கள் பாதிக்கப்பட்டவராக இருக்கும் நிலையில், [அடிக்குறிப்பு 34] சந்தேக நபர் மீது குற்றம் சுமத்துவதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை உங்களிடம் கூறினால், கூட்டம் ஒன்றுக்கு நீங்கள் அழைக்கப்படுவது உங்கள் உரிமை - அவ்வாறான கூட்டம் நிகழலாகாது என்று சேவை முடிவு செய்தாலொழிய. முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை, கூட்டம் பொருத்தமானதல்ல என்று முடிவு செய்யும் அபூர்வமான தருணங்களில் அந்த முடிவு உங்களுக்கு விளங்கப்படுத்தப்படும்.

6.13 சந்தேக நபர் மீது குற்றம் அல்லது குற்றங்கள் சுமத்தப்பட்டால், உங்களுக்கு காவல்துறையால் 5 வேலை நாட்களுக்குள் கீழ்க்கண்டவை தெரிவிக்கப்படவேண்டும். அது உங்கள் உரிமையாகும். (உயர்த்தப்பட்ட உரிமைகளின் கீழ் 1 வேலை நாளுக்குள்) தெரிவிக்கப்படவேண்டும்:

- அவர் மீரு சுமத்தப்பட்டுள்ள குற்றச்செயல்;
- முதலாவது கேட்புரையின் திகதி, நேரம், மற்றும் இடம்; மற்றும்
- சந்தேக நபர் நீதிமன்றத்தில் முன்னிலையாகும் பொருட்டு காவல்துறைப் பிணையில் விடுவிக்கப்படுமிடத்து, பிணைக்கான நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் எவையும்.

6.14 நீங்கள் தகுதிகாண் வழக்கு ஒன்றில் இழப்பு நேர்ந்த குடும்பத்து நெருங்கிய உறவினரானால், [அடிக்குறிப்பு 35] சந்தேக நபர் மீது குற்றம் சுமத்துவதா இல்லையா என்று முடிவு செய்வதற்கு முன்னர் அல்லது பின்னர் முடிக்குரிய வழக்கீட்டுச் சேவையுடன் கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ள அழைக்கப்படுவது உங்கள் உரிமையாகும். குற்றம் சுமத்துவது என்று முடிவு செய்யப்பட்டால், முடிக்குரிய வழக்கீட்டுச் சேவையினர் , வழக்கு எப்படித் தொடர்ந்து நடக்கும் என்று உங்களுக்கு விளக்குவார். அத்துடன் உங்களிடம் இருக்கக்கூடிய கேள்விகளுக்குப்

பதிலளிப்பார். முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை உங்கள் தேவைகளை உங்களுடன் கலந்தாலோசித்து, நீங்கள் எவ்வளவு கிரமமாக ஆகப்பிந்திய தகவல்களைப் பெறுதல் வேண்டும் என்று கூட்டாக இணங்கும்.

-6.15 முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை சந்தேக நபர் மீது குற்றம் அல்லது குற்றங்களைச் சுமத்தி, பின்னர் குற்றச்சாட்டில் ஒன்றை நிறுத்தி இன்னொன்றைச் தொடர முடிவுசெய்தால், குற்றச்சாட்டு ஒன்றில் பெரிய மாற்றத்தைச் செய்தால், அல்லது வழக்கை நிறுத்த முடிவு செய்தால், காரணம் உங்களுக்குத தெரிவிக்கப்படவேண்டியது உங்கள் உரிமையாகும். அத்துடன், வழக்கை நிறுத்தும் விடயத்தில், நீங்கள் முடிவுக்கு இணங்கவில்லை என்றால், எவ்வாறு முடிக்குரிய வழக்கீட்டு சேவையின் பாதிக்கப்பட்டவர் மறு ஆய்வு உரிமைத் திட்டத்தின் கீழ் மறு ஆய்வுக்கு விண்ணப்பிக்கலாம் என்று உங்களுக்கு எ/டுத்துச் சொல்லப்படவேண்டியது உங்கள் உரிமையாகும்.

# உரிமை 7: பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் அளித்தல்

7.1 குற்றச்செயல் ஒன்று உங்களை எவ்வாறு பாதித்துள்ளது- உடல்ரீதியாகவோ, உளரீதியாகவோ, நிதிரீதியாகவோ அல்லது வேறெந்த வகையிலோ- என்று உங்கள் சொற்களில் விளக்கிப் பாதிக்கப்பட்டவரின் தனிப்பட்ட வாக்குமூலம் அளிக்க உங்களுக்கு உரிமை உண்டு. இது சாட்சியம் அளிப்பதிலிருந்து வேறுபட்டது பிரதிவாதி என்ன தண்டனை பெறவேண்டும் என்று தீர்மானிக்ககும் சமயம், நீதிபதியும் நீதவானும் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை கருத்தில் எடுப்பார்கள். அத்துடன் சேவை வழங்குநர்கள் உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் கூடுதலாக என்ன உதவி வழங்கலாம் என்று ஆராய்வதற்கும் வாக்குமூலம் உதவும்.

7.2 நீங்கள் இழப்பு நேர்ந்த குடும்பத்தில் ஒரு நெருங்கிய உறவினராக இருந்தால், உங்களுக்கு பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் ஒன்றை அளிக்கும் உரிமை உண்டு. அத்துடன், நீங்கள் சாட்சிய வாக்கமூலம் அளித்திருந்தாலும் இல்லாவிட்டாலும் தனிப்பட்ட வாக்குமூலம் அளிக்கையில் இன்னொருவரை கூடவே வைத்திருக்ககலாம்.

7.3 நீங்கள் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் அளிக்க விரும்புகிறீர்களா என்று முடிவு செய்ய உதவுமுகமாக, உங்களுக்கு

காவல்துறையினர் அதன் செயல்முறை பற்றிய தகவல்களை தருவது உங்களது உரிமையாகும். நீங்கள் காவல்துறையினரிடம் குற்றச் செயலை அறிவிக்கும்போது இத்தகவல்கள் உங்களுக்கு கிடைக்கும். தனிப்பட்ட வாக்குமூலம் அளிக்க நீங்கள் முடிவு செய்தால், அதனை நீதிமன்றத்தில் உரத்து வாசிக்க விருப்பமா அல்லது உங்கள் சார்பில் வாசிக்கப்படுவது விருப்பமா என்று உங்களிடம் கேட்கப்படும் வாக்குமூலத்தின் பிரதி ஒன்றை நீங்கள் காவல்துறையினரிடம் கோரலாம்.. குற்றச்செயலின் தாக்கத்தில் ஏற்படும் மாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கூடுதலாக தனிப்பட்ட வாக்குமூலம் அளிக்க உங்களுக்கு வாய்ப்பு அளிக்க இவ்வாறு செயயப்படுகிறது.

7.4 பிரதிவாதி குற்றத்தை ஏற்றுக்கொண்டால் அல்லது குற்றவாளியாகக் காணப்பட்டால், அத்துடன் உங்கள் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் உரத்து வாசிக்குமாறு ( அல்லது பதிவிலிருந்து இயங்கவிடுமாறு) நீங்கள் கோரினால், நீதிபதி அல்லது நீதவான் உங்கள் தனிப்பட்ட வாக்குமூலத்தை வாசிப்பதா அல்லது எந்தப் பகுதிகளை உரத்து (பதிவிலிருந்து) வாசிப்பது அத்துடன் யார் வாசிப்பது என்று முடிவு செய்வார்கள். நீதிபதி அல்லது நீதவான் தங்கள் முடிவை எடுக்கும்போது, உங்கள் விருப்பங்களை எப்போதும் கவனத்தில் கொள்வார்கள்- அவ்வாறு செய்யாதிருக்க நல்ல காரணம் இருந்தாலொழிய. சாட்சிகள் கவனிப்பு பிரிவு, நீதிபதியின் அல்லது நீதவானின் முடிவை உங்களுக்கு அறிவிப்பார்..

7.5 உங்கள் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை நீங்கள் வாசிக்கும் அவசியம் அல்லது உங்கள் சார்பில் வாசிக்கப்படும் அவசியம் இல்லை. தொடக்கத்தில் நீங்கள் உங்கள் சார்பில் தனிப்பட்ட வாக்குமூலம் உரத்து வாசிக்கப்படும் தெரிவை ஏற்றுவிட்டு, பின்னர் வேண்டாம் என்று முடிவெடுத்தால், உங்கள் மனதை மாற்றிக்கொள்ளலாம். உங்கள் தனிப்பட்ட வாக்குமூலம் நீதிமன்றத்தில் உரத்து வாசிக்கப்படுகிறதோ ( ஒலிபெருக்கப்படுகிறதோ) இல்லையோ, நீதிபதி அல்லது நீதவான் ஒரே மாதிரியே அதனைக் கருத்தில் எடுப்பார்கள்.

7.6 ஒரு வணிக அமைப்பின் நியமிக்கப்பட்ட தொடர்பாளர் எவ்வாறு பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் அளிக்க முடிகிறதோ, அவ்வாறே அனைத்து அளவுகளிலும் உள்ள வணிக அமைப்புக்கள், தங்கள் வணிகத்தின் மீதான தாக்கம் பற்றிய வாக்குமூலம் அளிக்கலாம். இது பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் போன்றதாகும். அத்துடன் இதே மாதிரியே நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படும்.ஆனால், எவ்வாறு குற்றச் செயல். நேரடி நிதி இழப்பு, செயற்பாட்டுச் சீர்குலைவு அல்லது நற்பெயருக்கு சேதம் போன்ற நட்டங்களை வணிக அமைப்பு க்கு ஏற்படுத்தியுள்ளது என்று விளக்கம் அளிக்க அனுமதிக்கும்.

7.7 நியமிக்கப்பட்ட தொடர்பாளர் குற்றச்செயலை அறிவிக்கும்போது வணிகத்தின் மீதான தாக்கம் பற்றிய வாக்குமூலம் அளிப்பதற்கான தகவல்களை அவருக்கு காவல்துறையினர் வழங்கவேண்டியது, நியமிக்கப்பட்ட தொடர்பாளரது உரிமையாகும்.

7.8 பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் மற்றும் வணிகத்தின் மீதான தாக்கம் பற்றிய வாக்குமூலம் ஆகியவற்றின் செயற்பாடு குறித்த மேலதிக தகவல்கள காவல்துறையினரிடமும் கீழ்க்கண்ட இணைய முகவரியிலும்
கிடைக்கும்: www.gov.uk/government/publications/victimpersonal-statement

**நான் எப்போது பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை அளிக்கலாம்?**

குற்றவாளிக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன் எந்தச் சமயத்திலும் நீங்கள் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை அளிக்கலாம். இருப்பினும், நீதிமன்றத்தில் கேட்புரை தொடங்கிவிட்டால், குறிப்பாக, பிரதிவாதி குற்றச் செயலை ஏற்றுக்கொண்டால் ,அதனை அளிக்க உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்காது போகக்கூடும். பாதிக்கப்பட்டவர்கள் பலருக்கு, பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் அளிக்கும் மிகச் சிறந்த நேரம், சந்தேக நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டு, குற்றச்செயலின் முழுமையான தாக்கம் தெளிவாகும் நேரமே. காவல்துறையினர், உங்கள் தேவைகளின் மதிப்பாய்வு ஒன்றைச் செய்யும்போது, அல்லது உங்கள் சாட்சிய வாக்குமூலத்தை பதிவு செய்யும்போது குற்றச்செயலினால் தொடக்கத்தில் ஏற்பட்ட தாக்கத்தின் விபரங்களைக் கோரலாம்.

**நான் மனதை மாற்றலாமா, அல்லது எனது பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தைப் புதுப்பிக்கலாமா?**

நீங்கள் ஒரு தடவை பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை அளித்தால், அது நீதிமன்ற ஆவணங்களில் ஒரு பகுதியாகிவிடுகிறது. அதனை உங்களால் மீளப்பெறவோ மாற்றவோ முடியாது. ஆயினும், முக்கிய விடயம் ஒன்று உங்கள் நினைவுக்கு வந்தால், அல்லது உங்கள் மீதான குற்றச்செயலின் தாக்கத்தில் மாற்றம் நிகழ்ந்துள்ளதாக உணர்ந்தால், நீங்கள் மற்றொரு வாக்குமூலத்தை அளிக்கலாம்.

**எனது பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை பிரதிவாதியால் பார்க்க முடியுமா?**

வழக்கு நீதிமன்றம் வரை சென்றுவிட்டால், உங்கள் தனிப்பட்ட வாக்குமூலத்தை வாசிக்க பிரதிவாதி வழமையாக அனுமதிக்கப்படுவார். இதர சாட்சியங்களைப் போலவே, நீதிமன்றம்

உங்கள் தனிப்பட்ட வாக்குமூலம் வழக்குடன் தொடர்புடையது என்று ஏற்றுக்கொண்டால், எதிர்தரப்பு உங்கள் வாக்குமூலத்திள் உள்ளவை தொடர்பாக உங்களிடம் கேள்விகள் கேட்கலாம். உங்கள் வாக்குமூலம் நீதிமன்றத்தில் உரத்து வாசிக்கப்பட்டால், அவ்வாறு வாசிக்கப்பட்டவற்றை ஊடகங்கள் வெளியிடலாம்.

**உங்கள் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தைப் பதிவு செய்வது குறித்து மேலும் கேள்விகள் அல்லது உதவி**

பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் அளித்தல், அது எவ்வாறு பயன்படுத்தப்படும், அதில் என்ன உள்ளடக்கப்படவேண்டும் என்பன பற்றி உங்களிடம் கேள்விகள் இருக்குமானால், நீங்கள் காவல்துறை, சாட்சிகள் கவனிப்பு பிரிவு ஆகியவற்றுடன் அல்லது குற்றச்செயலால் பாதிக்கப்படுபவர்களை ஆதரிக்கும் சேவை ஒன்றுடன் பேசலாம். அதனைப் பதிவு செய்யவும் அவர்கள் உதவி செய்வார்கள்

## நிபந்தனையின் பேரில் விடுவிப்பு அல்லது வரிக்கட்டண மீளாய்வு பற்றிய கேட்புரைகளில் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட [அடிக்குறிப்பு 36] வாக்குமூலங்கள்

7.9 வரிக்கட்டண மீளாய்வுக் கேட்புரைகளிலும் நிபந்தனையின் பேரில் விடுவிப்பு கேட்புரைகளிலும் உங்கள் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட மூலவாக்குமூலத்தைப் பயன்படுத்துமாறு நீங்கள் கோரலாம். இருபபினும், இந்தக் கேட்புரைகளுக்காக புதிய பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை எழுத உங்களுக்கு உரித்துண்டு. புதிய வாக்குமூலத்தில், எவ்வாறு குற்றச்செயல், உங்களை மற்றும்/ அல்லது உங்கள் குடும்பத்தைத் தொடர்ந்து பாதித்துவருகிறது என்றும் கேட்புரைகளின் முடிவு எவ்வித தாக்கத்தை விளைவிக்கலாம் என்றும் உங்களால் விளக்கக்கூடியதாக இருக்கும். நிபந்தனையின் பேரிலான விடுவிப்பு சபைக்கு அளிக்கப்படும் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்துக்கு வேறு விதிகள் பொருந்தும். (பார்க்கவும் உரிமை 11 )

# உரிமை 8: வழக்கு விசாரணை, விசாரணை செயல்முறை சாட்சி என்ற முறையில் உங்கள் வகிபாகம் என்பன பற்றிய

# தகவல்கள் வழங்கப்படவேண்டிய உரிமை உங்களுக்கு உண்டு

8.1 வழக்கு நீதிமன்றம் செல்லுமானால், அவ்விடயம், உங்களுக்கு சாட்சிகள் கவனிப்பு பிரிவினால் உங்களுக்கு 5 வேலை நாட்களுக்குள் தெரிவிக்கப்படவேண்டும். அது உங்கள் உரிமையாகும். (உயர்த்தப்பட்ட உரிமைகளின் கீழ் 1 நாளுக்குள்ளாகும்.) .அதாவது நீதிமன்றத்திலிருந்து சம்பந்தப்பட்ட வழக்கின் கேட்புரை முடிவு பற்றிய தகவல் கிடைத்த 5 வேலைநாட்களுக்குள்:

- கேட்புரை நடந்த நேரம், திகதி மற்றும் இடம் (அனைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கும் 1 வேலைநாளுக்குள்);
- பிணை விசாரணை முடிவு எதுவும் (அத்துடன் சம்பந்தப்பட்ட பிணை நிபந்தனைகள், அந்த நிபந்தனைகளில் செய்யப்பட்ட மாற்றங்கள், மற்றும் மாற்றங்களுக்கான காரணங்கள் );
- சந்தேக நபர் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதா, அவர் திரும்பக் கைது செய்யப்பட்டிருந்தால் கேட்புரை முடிவு பற்றிய தகவல், அத்துடன்
- சந்தேக நபர் திரும்பக் கைது செய்யப்பட்டிருந்தால் , கேட்புரை ஏதேனும் நிகழ்ந்து அதன் முடிவு

8.2 சந்தேக நபர் குற்றவாளி அல்ல என்று வாதிட்டதன்மேல், நீங்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகக் கோரப்பட்டால் உங்களுக்கு கீழ்க்கண்ட உரிமைகள் உள்ளன:

- நீங்கள் 1 வேலைநாளுக்குள் (அனைத்துப் பாதிக்கப்பட்டவர்களும்) சாட்சியம் அளிக்க கோரப்பட்டால் அதனை சாட்சிகள் கவனிப்பு பிரிவு உங்களுக்கு முடிக்குரிய வழக்கீட்டுச் சேவையிடமிருந்து தகவல் கிடைத்தவுடன் கூறவேண்டும்.
- உங்கள் தேவைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு சாட்சிகளை ஆதரிக்கும் சேவை ஒன்றிடம் உங்களை பாரப்படுத்தவேண்டும். அவர்கள் வழக்கு விசாரணைத் திகதிக்கு முன்னர் நீதிமன்ற வளாகத்துக்கு உங்களைப் பரிச்சியப்படுத்த அங்கே வருகை ஒன்றை ஏற்பாடு செய்யலாம். அல்லது வேறொரு ஆதரவுச் சேவை ஒன்றிடம் நீங்கள் பாரப்படுததப்படவேண்டும். ( பார்க்கவும் உரிமை 4 )
- விசேட நடவடிக்கைகள் எவற்றினதும் பயன்பாட்டால் ஏற்பட்ட விளைவு உங்களுக்கு சொல்லப்படவேண்டும் ( பார்க்கவும், உரிமை 4 )

8.3 சாட்சியம் அளிக்குமாறு நீங்கள் கோரப்பட்டால்,உங்கள் சாட்சிய வாக்குமூலத்தை வாசிப்பதன் மூலம் ( அல்லது பதிவு செய்த இடத்தில் அதனைப் பார்ப்பதன் மூலம் ) உங்கள் வாக்குமூலத்தை நினைவில் வைத்திருக்க உங்களால் முடியும். இயலுமானவிடத்து, நீதிமன்றம் அனுமதித்தால், வழக்குத் தொடுநர் என்ன நடக்கும் என்று விளக்கவும், உங்களிடம் கேள்விகள் இருந்தால் பதில் தரவும், உங்களை, நீங்கள் நீதிமன்றத்துக்குள் போகுமுன் சந்திப்பார்.

8.4 இழப்பு நேர்ந்த குடும்பத்தில் நீங்கள் ஒரு நெருங்கிய உறவினராக இருந்தால், நீங்கள் சாட்சியமளிக்கவேண்டியிருந்தாலும், இல்லாவிட்டாலும், நீதிமன்ற வளாகத்தைப் பரிச்சியப்படுத்திக்கொள்ள வழக்கு விசாரணைத் திகதிக்குமுன் நீதிமன்றம் செல்லக் கோரும் உரிமை உங்களுக்கு உண்டு. இதனை நீங்கள், உங்கள் குடும்ப தொடர்பு அலுவலரிடம் அல்லது சாட்சிகள் கவனிப்பு பிரிவிடம் கோரவேண்டும். நீதிமன்றத்தில் வழக்கை முன்வைக்கும் முடிக்குரிய வழக்கீட்டு சேவையின் வழக்குத் தொடுநர் அல்லது அட்வகேட்டைச் சந்தித்துப் பேசுவதற்கான கூட்டம் ஒன்று உங்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும் உரிமையும் உங்களுக்கு உம்டு. இந்தக் கூட்டம் வழமையாக வழக்கு விசாரணை தொடங்குவதற்கு சற்று முன்னர் நடக்கும். உங்களை அறிமுகப்படுத்தவும், கேள்விகள் எவையேனும் இருந்தால் கேட்கவும் இது ஒரு வாய்ப்பாகும்.

8.5 நீதிமன்றத்தில் முன்னிலையாகும்போது, இயலுமானவிடத்து, பிரதிவாதியின் நுழைவாயிலை விடுத்து, வேறொரு நுழைவாயில் ஊடாக உள்ளே வரக்கூடியதாகவும், வழக்கு விசாரணைக்கு முன்னரும் பின்னரும் புறம்பான காத்திருக்கும் பகுதியில் அமரக்கூடியதாகவும் இருக்கும். சில நீதிமன்றக் கட்டடங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புறம்பான நுழைவாயில்கள் தற்போது கிடையா. இருப்பினும், இது அறிவிக்கப்படுமிடத்து, மாண்புமிகு அரசியின் நீதிமன்றங்கள் மற்றும் விசாரணைமன்றங்கள் சேவைப் பணியாளர்கள் நீங்கள் நீதிமன்றம் வந்ததும் பிரதிவாதியைக காணாதிருக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதை உறுதி செய்வார்கள்

8.6 வழக்கு விசாரணையின்போது, சாட்சியமளிக்க நீங்கள் காத்திருக்க நேரலாம். மாண்புமிகு அரசியின் நீதிமன்றங்கள் மற்றும் விசாரணைமன்றங்கள் நீதிமன்றத்தில் உங்களுக்கு ஒரு தொடர்பாளரைத் தருவார்கள ( அவர் சாட்சிகள் ஆதரவுச் சேவை யின் ஓர் உறுப்பினராக இருக்கலாம். ) அவர் வழக்கின் முன்னேற்றம் பற்றிய ஆகப்பிந்திய தகவல்களை உங்களுக்கு தந்துகொண்டிருப்பா.அவர், முடிக்குரிய வழக்கீட்டு சேவையின் வழக்குத் தொடுநர் அல்லது அட்வகேட் நீங்கள் சாட்சியமளிக்க காத்திருக்கக்கூடிய நேரம் குறித்து உங்களுக்கு கூறுவார்.

8.7 சில சமயங்களில் நீங்கள் திரும்ப வேறு ஒரு நாள் வரவேண்டி ஏற்படலாம்.. இவ்வாறு நடந்தால், மாண்புமிகு அரசியின் நீதிமன்றங்கள் மற்றும் விசாரணைமன்றங்கள் சேவையின் நீதிமன்றப் பணியாளர்கள் , அல்லது முடிக்குரிய வழக்கீட்டுச் சேவையின் வழக்குத் தொடருநர் அல்லது அட்வகேட். ஏன் என்று விளக்குவார்.

## நீதிமன்றத்தில் முன்னிலையாகும்போது உதவி

பாதிக்கப்பட்டவர் எவருக்கும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவேண்டி இருத்தல் கவலை தரும் அனுபவமாகும். இருப்பினும், வழக்கு விசாரணைக்கு முன்னர், சாட்சிகள் கவனிப்பு பிரிவினரால் நீங்கள் தொடர்புகொள்ளப்படுவீர்கள் அவர்கள், பந்திகள் 8.1, 8.2, மற்றும் 8.4 - இல் பட்டியலிடப்பட்டுள்ள உரிமைகளை வழங்கும் அதே வேளை, நடைமுறை வழிகாட்டலும் ஆலோசனையும் தந்து உதவுவார்கள் இதில் உள்ளடங்குவன:

- நீதிமன்றத்தில் நீங்கள் எவற்றை எதிர்பார்க்கவேண்டும் என்று அறிவுறுத்தப்படுதல், அத்துடன் நீதிமன்றச் செயன்முறை குறித்த உங்கள் கேள்விகளுக்குப் பதிலளித்தல்
- பாதிக்கப்பட்டவர் 18 வயதுக்கு உட்பட்டவரானால், இளம் சாட்சிகளுக்கு ஏற்ற தகவல்களை அவருக்கு வழங்குதல்.
- நீதிமன்றம் செல்லும் வழிகளை விளக்குதல். மற்றும் பயண ஏற்பாடு அத்துடன் /அல்லது தங்குமிட வசதி ஏற்பாடுகளில் உதவுதல்
- பிள்ளைகள் கவனிப்பு அல்லது நீங்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகுவதற்கு மேலதிக உதவியை ஏற்படுத்துவதில் ஆதரவு வழங்கல்
- சாட்சிகளின் செலவினங்கள் மற்றும் படிகளுக்குப் பாத்தியதை கோருவது பற்றிய தகவல்களை வழங்குதல்
- தண்டனை பற்றி உங்களிடம் இருக்கக்கூடிய கேள்விகளுக்கு சாட்சிகள் கவனிப்பு பிரிவு பதிலளிக்க இயலாத நிலையில் , உங்களை, எந்தக் கேள்விகளுக்கும் பதில் தரவல்ல முடிக்குரிய வழக்கீட்டு சேவையிடம் பாரப்படுத்தல்; அத்துடன்
- நீங்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமுன்பும், முன்னிலையாகும்போதும், பின்னரும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு வழங்கும் சேவைகளிடம் உங்களைப் பாரப்படுத்தல்

# உரிமை 9: வழக்கின் முடிவு பற்றி மற்றும் மேன்முறையீடுகள் எவையும் பற்றி உங்களுக்குத் தகவல்கள் வழங்கப்படவேண்டியது உங்கள் உரிமையாகும்.

9.1 வழக்கு முடிவில், முடிவு உங்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டியது உங்கள் உரிமையாகும். முடிவுக்கான காரணங்கள் கிடைக்குமிடத்து, அவற்றின் குறுகிய சுருக்கம் உள்ளடக்கப்படவேண்டும். [அடிக்குறிப்பு 37] இதனை சாட்சிகள் கவனிப்புப் பிரிவு , நீதிமன்றத்திலிருந்து தகவல் கிடைத்த 1 வேலை நாளுக்குள், அதாவது, வழக்கு முடிவு எட்டப்பட்ட 5 வேலை நாட்களுக்குள் செய்தல் வேண்டும்.

9.2 பிரதிவாதி மீது குற்றத் தீர்ப்பு வழங்கப் பட்டால், (குற்றவாளியாகக் காணப்படல் ) அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை உங்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டியது உங்கள் உரிமையாகும். தண்டனையின் அர்த்தம் மற்றும் தாக்கம் பற்றிய குறுகிய விளக்கம் ஒன்றும் உள்ளடக்கப்படவேண்டும். இதனை சாட்சிகள் கவனிப்பு பிரிவு, நீதிமன்றத்திலிருந்து தகவல் கிடைத்த 1 வேலை நாளுக்குள், அதாவது, வழக்கு முடிவு எட்டப்பட்ட 5 வேலை நாட்களுக்குள் செய்தல் வேண்டும். தண்டனை பற்றி உங்களிடம் இருக்கக்கூடிய கேள்விகளுக்கு சாட்சிகள் கவனிப்பு பிரிவு பதிலளிக்க இயலாத நிலையில், உங்களை, எந்தக் கேள்விகளுக்கும் பதிலளிக்கவல்ல முடிக்குரிய வழக்கீட்டுச் சேவையிடம் பாரப்படுத்தப்படுவது உங்கள் உரிமையாகும்.

9.3 நீங்கள் இழப்பு நேர்ந்த குடும்பத்தின் நெருங்கிய உறவினராக இருந்தால், முடிக்குரிய வழக்கீட்டுச் சேவையுடன் உங்களுக்கு கூட்டம் ஒன்று கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் ஏற்பாடு செய்யப்படவேண்டும். இது உங்கள் உரிமையாகும்:

- குற்றத் தீர்ப்பை அடுத்து, ஆனால் பிரதிவாதியின் தண்டனைக் கேட்புரைக்கு முன்னர். இக்கூட்டம் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் அளிக்கப்பட்டது அல்லது அது புதுப்பிக்கப்ட்டது என்று உறுதிப்படுத்தும் பொருட்டாகும்.
- தண்டனைக் கேட்புரைக்குப் பின்னர். இது வழங்கப்பட்ட தண்டனையை விளக்குவதற்காகும்.
- பிரதிவாதி குற்றவாளி அல்ல என்று தீர்ப்பளிக்கப்படும் வழக்குகள், அல்லது குறைந்த குற்றச்சாட்டில் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகள் விடயத்தில் கூட்டம், வழக்கு

முடிவுற்ற சில வாரங்களுக்குப் பின்னர், முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை இதனை முறையற்றது என்று முடிவு செய்தாலொழிய, நடத்தப்படும். கூட்டம் நடத்துவது முறையற்றது என்று சேவை தீர்மானிக்கும் அபூர்வ தருணங்களில், அந்தத் தீர்மானம் உங்களுக்கு விளக்கப்படும். குடும்ப விருப்பங்களுக்கு அமைய கூட்டம் நடைபெறும் நேரம் அறிவிக்கப்படும். எந்த நேரம் நடைபெறவேண்டும் என்று கலந்தாலோசிக்க உங்களுடன் தொடர்பு கொள்ளப்படும்; அத்துடன்,

- அனைத்துப் பிரதிவாதிகளும், அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளிகள் அல்ல என்று காணப்படும் கொலை வழக்கு ஒன்றில் காவல்துறையும் முடிக்குரிய வழக்கீட்டு ச் சேவையும் இழப்பு நேர்ந்த குடும்பங்களுக்கான தேசிய ஆதரவு நியமங்கள் கூறும் செயல்முறையைப் பின்பற்றும். தேசிய ஆதரவு நியமங்கள் முடிக்குரிய வழக்கீட்டுச் சேவையின் கீழ்க்கண்ட இணையதளத்தில் கிடைக்கும் : www.cps.gov.uk அவற்றின் பிரதி ஒன்று இழப்பு நேர்ந்த குடும்பத்துக்கு காவல்துறை வழங்கும் இழப்புத் தொடர்பிலான ஆவணக்கட்டில் ஒரு பகுதியாக வழங்கப்படும்.

## குற்றவாளிக்கு வழங்கப்பட்ட தண்டனை மிகக்குறைவு என்று நீங்கள் நினைத்தால்

9.4 முடிக்குரிய நீதிமன்றத்தில் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட சில வழக்குகளை (ஆனால் அனைத்து வழக்குகளையும் அல்ல) மறு ஆய்வுக்காக மேன்முறையீட்டு[அடிக்குறிப்பு 38] நீதிமன்றம் அனுப்புமாறு [அடிக்குறிப்பு 39] தலைமை வழக்குரைஞரிடம் நீங்கள் கோரலாம். தலைமை வழக்குரைஞர் தண்டனை வெறுமனே கனிவானதாக இருக்கவில்லை, ' தகாமுறையில் கனிவானதாக ' அது இருந்தது என்று கருதினால் மட்டுமே இது சாத்தியமாகும்.',[அடிக்குறிப்பு 40] இந்த அளவுக்கு தண்டனை வழங்கிய நீதிபதி, பெரும் பிழை செய்துள்ளார் அல்லது இந்த வழக்கின் சூழ்நிலைகளில் நியாயமாக விதிக்கவேண்டிய தண்டனைகளுக்கு வெளியே சென்றுள்ளார்.

9.5 தலைமை வழக்குரைஞர், விதிக்கப்பட்ட தண்டனை ' தகாமுறையில் கனிவானதாக ' இருப்பதாகக் கருதினால், வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்படும். தலைமை வழக்குரைஞர் தண்டனையை அடுத்து இயலுமான விரைவில் விடயத்தை பரிசீலனை செய்தல் வேண்டும். தண்டனை விதிக்கப்பட்ட

28-வது கலண்டர் நாளுக்குப் பிந்தாமல் இது இருத்தல் வேண்டும். (விடயம் வேலை நேரங்களில் போதிய அவகாசம் அளித்துப் பரிசீலனை செய்யப்படவேண்டும்.) மேன்முறையீட்டு நீதிமன்றம் இணங்கினால், அது தண்டனையை அதிகரிக்கக்கூடும்.

9.6 உங்களிடம் வழக்கின் தண்டனைத் தீர்ப்பு எடுத்துக் கூறப்படும்போது, சாட்சிகள் கவனிப்பு பிரிவு உங்களுக்கு திட்டத்தை விளக்கும்.

## குற்றவாளி மேன்முறையீடு செய்தால்

9.7 சில சமயங்களில் வழக்கை அல்லது தண்டனையை மறு ஆய்வு செய்யுமாறு குற்றவாளி நீதிமன்றத்தைக் கோருவார். இது மேன்முறையீடு எனப்படும். அடுத்து என்ன நடைபெறும் என்பது குற்றவாளி மேன்முறையீடு செய்ய அனுமதிக்கப்படவாரா என்பதைப் பொறுத்தது. அவ்வாறானால், அந்த மேன்முறையீட்டின் முடிவு.

## நீதவான் நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட குற்றத் தீர்ப்பு அல்லது தண்டனையை எதிர்த்து முடிக்குரிய நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனு ஒன்று செய்யப்பட்டால்,

9.8 குற்றவாளி முடிக்குரிய நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தால், அவ்விடயம், சாட்சிகள் கவனிப்பு பிரிவினால், நீதிமன்றத்திலிருந்து தகவல் கிடைத்த 1 வேலை நாளுக்குள் உங்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டியது உங்கள் உரிமையாகும். அதாவது, கேட்புரை முடிவு வெளிவந்த 5 வேலை நாட்களுக்குள்:

- மேன்முறையீட்டுக்கான அறிவித்தல் கொடுக்கப்பட்டுன்னது
- கேட்புரை நடந்த திகதி, நேரம், இடம்; அத்துடன்
- முதல் குற்றத் தீர்ப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்கள் எவையும் உட்பட, மேன்முறையீட்டின் முடிவு.

9.9 நீங்கள் மேன்முறையீட்டின்போது சமுகமளிக்க விரும்பினால், அதனை நீதிமன்றப் பணியாளரகள் ் ஏற்பாடு செய்து தரவேண்டும். அது உங்கள் உரிமையாகும்.

- சாத்தியமானவிடத்து, நீதிமன்றத்தில் குற்றவாளிக்கும் குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும் புறம்பாக உள்ள ஓரிடத்தில் காத்திருந்து அமர்ந்துகெள்ளவும்
- முடிக்குரிய நீதிமன்றத்தில் உங்களுக்குத் தொடர்பாளர் ஒருவர் ஏற்பாடு செய்யப்படவேண்டும்.
- பாதிக்கப்பட்டவர்களுக்குப் பொருத்தமான ஆதரவை வழங்கக்கூடிய ஆதரவுச் சேவைகள் பற்றிய தகவல்கள் உங்களுக்கு அனுப்பப்படவேண்டும். .

## குற்றத் தீர்ப்பு அல்லது தண்டனை ஒன்றுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மனுச் செய்யப்பட்டால், அல்லது ஒரு குற்றவியல் குற்ற வழக்கில், சட்டப் பிரச்சினை காரணமாக, ஐக்கிய இராஜ்ய உயர் நீதிமன்றத்துக்கு (UK Supreme Court) மனு அல்லது அப்பீல் செய்யப்பட்டால்

9.10 குற்றவாளி மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது ஐக்கிய இராஜ்ய உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்தால், அதனை சாட்சிகள் கவனிப்பு பிரிவு நீதிமன்றத்திலிருந்து தகவல் கிடைத்த 5 வேலை நாட்களுக்குள் உங்களுக்குச் சொல்லவேண்டும (உயர்த்தப்பட்ட உரிமைகளின் கீழ் 1 வேலை நாளுக்குள்ளாகும். ) அதாவது,சம்பத்தப்பட்ட கேட்புரையின் முடிவு வெளியான 5 வேலை நாட்களுக்குள் :

- குற்றத் தீர்ப்பு, தண்டனை அல்லது சட்டப் பிரச்சினைக்கு எதிராக மேன்முறையீடு செய்ய குற்றவாளிக்கு அனுமதி வழங்கப்பட்டால்;
- கேட்புரை நடைபெற்ற திகதி, நேரம், இடம் மற்றும் இந்தத் தகவலுக்குச் செய்யப்பட்ட மாற்றங்கள் ஏதேனும் ( பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் 1 வேலை நாளுக்குள்);
- குற்றவாளி மேன்முறையீட்டுக்குமுன் பிணையில் விடுவிக்கப்படுவாரானால், அல்லது பிணை நிபந்தனகளில் மாற்றம செய்யப்பட்டிருந்தால் (பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் 1 வேலை நாளுக்குள்) ;
- குற்றவியல் குற்ற மேன்முறையீட்டு அலுவலகம் அல்லது ஐக்கிய இராஜ்ய உயர் நீதிமன்றப் பணியாளருக்கான தொடர்பாளரஒர ஒருவரின் பெயர்

- மூல தண்டனைத் தீர்ப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தால், அவை உட்பட, மேன்முறையீட்டின் முடிவு
- வழக்கில் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியிடப்பட்டதன் மேல், எவ்வாறு அதன் பிரதி ஒன்றை குற்றவியல் குற்ற மேன்முறையீட்டு அலுவலகத்திடம் அல்லது ஐக்கிய இராஜ்ய உயர் நீதிமன்றப் பணியாளரிடம் கோருவது.

9.11 நீங்கள் மேன்முறையீட்டின்போது சமுகமளிக்க விரும்பினால், நீதிமன்றப் பணியாளர்கள் அல்லது ஐக்கிய இராஜ்ய உயர் நீதிமன்றப் பணியைளர்கள் அதற்கு கீழ்க்கண்டவாறு ஏற்பாடு செய்து தருவது உங்கள் உரிமையாகும் .

- சாத்தியமானவிடத்து, நீதிமன்றத்தில், குற்றவாளிக்கும், அவர் குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும் புறம்பாக உள்ள ஓரிடத்தில் காத்திருந்து அமர்ந்துகொள்ளல்.
- நீதிமன்றத்தில் குற்றவாளி சமுகமளித்திருக்கும் நிலையில், நீங்கள் அங்கே அமர்ந்திருக்க விரும்பாவிடில், உங்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். (உயர் நீதிமன்றத்தில் குற்றவாளி கேட்புரைகளுக்கு சமுகமளிப்பது அபூர்வம்).

9.12 குற்றவாளியை மேன்முறையீடு செய்ய அனுமதிக்க எடுக்கப்பட்ட முடிவின்பின், நீங்கள் இழப்பு நேர்ந்த குடும்பத்தில் நெருங்கிய உறுப்பினராக இருந்தால், மேன்முறையீட்டின் தன்மை மற்றும் நீதிமன்ற செயல்முறையை உங்களுக்கு விளக்க, முடிக்குரிய வழக்கீட்டுச் சேவையுடன் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்படவேண்டும். இது உங்கள் உரிமையாகும்.

9.13 குற்றத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டை த் தீர்மானிக்கையில், நீதிமன்றம் எப்போதும் தீர்ப்பு வழங்கிய நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை கருத்தில் கொள்ளும்.

9.14 மேலுமொரு பாதிக்கப்பபட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வழங்குவது வழமையாக அவசியமல்ல. இருப்பினும், உங்கள் மீது குற்றச் செயல் தொடர்ச்சியாக ஏற்படுத்தி வந்துள்ள தாக்கம் காரணமாக நீதிமன்றம் அறியவேண்டிய தகவல்கள் இருந்தால், புதிய அல்லது மேலதிக பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் ஒன்று நீதிமன்றத்துக்கு காவல்துறை மூலம் அல்லது முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை மூலம் அனுப்பப்படலாம். ice.

## குற்றவியல் குற்ற மறு ஆய்வு ஆணையம்

9.15 குற்றவியல் குற்ற மறு ஆய்வு ஆணையம் இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்தில் குற்றவியல் நீதி வழுவுதல் குற்றச்சாட்டுக்களை புலன்விசாரணை செய்து வருகிறது. குற்றம் காணப்பட்டவர், புதிய தகவல்கள் அல்லது புதிய சட்டவாதம் கிடைத்தால், தனது குற்றத் தீர்ப்பு மற்றும்/ அல்லது தண்டனையை மறு ஆய்வு செய்யுமாறு கோரி மனுச் செய்யலாம். இந்த தகவல்கள் அல்லது வாதங்கள் குற்றத் தீர்ப்பு நின்றுபிடிக்காது, அல்லது தண்டனை மிக நீண்டதாக உள்ளது என்று அர்த்தப்படுத்துவதாக அமையலாம்.

ஆணையம், வழக்கு ஒன்றை மறு ஆய்வு செய்யும்போது, உங்களுக்கு ஏற்படக்கூடிய தாக்கத்தை மதிப்பாய்வு செய்து , உங்களுக்கு அறிவிக்கப்படவேண்டுமா என்று முடிவு செய்யும்.

9.17 ஆணையம், வழமையாக, வெறுமனே மனுவைப் பெற்றுக்கொண்ட காரணத்தால் உங்களுடன் தொடர்பு கொள்ள முயலாது. ஏனெனில், பெரும்பாலான மறு ஆய்வுகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பப்படுவதில்லை. ஆதலால் குற்றம் காணப்பட்டவர் மனுச் செய்திருக்கிறார் என்று உங்களை எச்சரிப்பது அவசியமில்லை எனினும், நீங்கள் ஊடகங்கள் வழியாகவோ, வேறு வழியிலோ வழக்கை ஆணையம் ஆராய்கிறது என்று கண்டுபிடிக்கும் நியாயமான வாய்ப்பு இருப்பதாக ஆணையம் கருதினால் அது உங்களுடன் தொடர்பு கொள்ளும். ஆணையம் உங்களுக்கு மனு பற்றித் அறிவிப்பதற்கு வழமையாகக் காவல்துறையுடன் இணைந்து பணியாற்றும். வழக்கைப் பாரப்படுத்துவதா என்பது குறித்து ஒரு முடிவு எடுக்கப்பட்டதன் மேல் அவர்கள் மீண்டும் தொடர்பு கொள்வார்கள்.

9.18 மறு ஆய்வு நடைபெறும்போது உங்களுடன் தொடர்பு கொள்வது முறையற்றது என்று தீர்மானித்த ஆணையம், பின்னர் குற்றத் தீர்ப்பை அல்லது தண்டனையை நீதிமன்றங்களிடம் அனுப்ப முடிவு செய்தால், மேன்முறையீட்டுக்கு அனுப்புவதற்கு முன்னதாக உங்களுடன் தொடர்பு கொள்ள கடும் முயற்சி எடுக்கும்.

# உரிமை 10: செலவினங்களின் கொடுப்பனவுக்கும் உடைமைகளை மீள ஒப்படைத்தலுக்குமான உங்கள் உரிமை

10.1 நீங்கள் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் முன்னிலையானால், [அடிக்குறிப்பு 41] முடிக்குரிய வழக்கீட்டு சேவையிடமிருந்து சில செலவினங்களுக்கு பாத்தியதை உரிமை கோரமுடியும். [அடிக்குறிப்ப 42] உதாரணமாக பயணச் செலவுகள், குழந்தை கவனிப்பு செலவுகள், வருமான இழப்பு, சிற்றுண்டி மற்றும் உணவுக்கான செலவுகள். (மேலும் விபரங்கள் முடிக்குரிய வழக்கீட்டு ச் சேவையின் கீழ்க்கண்ட இணையதளத்தில் கிடைக்கும்: www.cps.gov.uk). செலவினங்களுக்கு உரிமை கோருவது குறித்து கேள்விகள் எவற்றையும் நீங்கள் கேட்க விரும்பினால், சாட்சிகள் கவனிப்பு பிரிவினால் உங்களுக்கு உதவி செய்ய முடியும்.

10.2 சரியாக நிரப்பப்பட்ட பாத்தியதை உரிமைக் கோரிக்கைப் படிவம் கிடைத்த 10 வேலை நாட்களுக்குள் முடிக்குரிய வழக்கீட்டுச் சேவை உங்களுக்குரிய செலவினங்களைச் செலுத்திவிடும்.

10.3 காவல்துறையினர் உங்கள் உடைமைகளில் எவற்றையும் சாட்சிப் பொருளாக எடுத்திருந்தால், அவை தொடர்ந்து தேவைப்படாத பட்சத்தில் அவற்றை இயலுமான விரைவில் மீள எடுக்கும் உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உடைமைகளை மீளப் பெறுவது குறித்து உங்களிடம் கேள்விகள் எவையும் உண்டானால், காவல்துறையினரால் உங்களுக்கு உதவ முடியும்.

# உரிமை 11: குற்றத் தீர்ப்பு ஒன்றை அடுத்து, குற்றவாளி பற்றிய தகவல்கள் உங்களுக்கு வழங்கப்படவேண்டிய உரிமை

## பாதிக்கப்பட்டவருடனான தொடர்புத் திட்டம்

நீங்கள் பாதிக்கப்பட்டவராக, அல்லது இழப்பு நேர்ந்த குடும்பத்து உறவினராக இருந்து, குற்றவாளி குறிப்பிட்டதொரு வன்முறை அல்லது பாலியல் குற்றச்செயல் 43 குற்றச்சாட்டில் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டு, 12 மாதங்கள் அல்லது கூடுதலாக சிறைவாச44 தண்டனை பெற்றவராக இருந்தால், (அல்லது உளநலச் சட்டம் 1983-இன் கீழ் சிகிச்சைக்காக, கட்டுப்பாடு உத்தரவு 45 உடனோ இல்லாமலோ மருத்துவமனை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டவராக இருந்தால்), நீங்கள் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட 10 வேலை

நாட்களுக்குள், தேசிய நன்னடத்தைக் கண்காணிப்பு சேவையின், பாதிக்கப்பட்டவருடனான தொடர்புத் திட்டத்துக்கு இயலபாகவே பாரப்படுத்தப்பட்டு பாதிககப்பட்டவர் ் தொடர்பு அலுவலர ஒருவர் உங்களுக்கு நியமிக்கப்படுவார். இது உங்கள் உரிமையாகும். பாதிக்கப்பட்டவருடனான தொடர்பு அலுவலர், நீங்கள் பாரப்படுத்தப்பட்ட 20 வேலை நாட்களுள் உங்களுடன் தொடர்பு கொள்வார்.

11.2 பாதிக்கப்பட்டவருடனான தொடர்புத் திட்டத்தை நீங்கள் எவ்விடத்தில் தெரிவு செய்கிறீர்களோ, அவ்விடத்தில் வைத்து குற்றவாளிக்கு விதிக்கப்பட்ட தண்டனையின் முக்கிய கட்டங்களின்போது உங்களுக்கு தகவல்கள் கிடைக்க உரித்துள்ளவராக இருக்கிரீர்கள். குற்றவாளி தண்டனை/ மருத்துவமனை உத்தரவை நிறைவேற்றிக்கொண்டிருக்கையில், நீங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கான தொடர்புத் திட்டத்திலிருந்து எச்சமயத்திலும் வெளியேறி பின்னர் உள்வரலாம.

11.3 பாதிக்கப்பட்டவர்களுக்கான தொடர்பு அலுவலர் உங்களிடம் கூறப்போகும் விடயங்கள்:

- குற்றவாளியின் சிறைத் தடுப்பு அல்லது மருத்துவசாலைத் தடுப்பு விடயத்தில் நீதிமன்றத்தின் தண்டனை எதனை எடுத்துக் காட்டுகிறது, மற்றும் தண்டனையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளனவா எந்பன
- சிறையில் உள்ள குற்றவாளி ஒருவர் எப்போது தாராள நிபந்தனைகளைப் பெறத் தகுதி உள்ளவர் என்று கருதப்படும் நிலைக்கு வருவார்.
- சிறைக்கைதி ஒருவர் தாராள நிபந்தனைகளுக்கு மாறினால்;
- குற்றவாளி ஒருவரை விடுதலை செய்வதா அல்லது நிபந்தனையுடன் விடுவிப்பதா என்று கருதப்படும்போது;
- குற்றவாளி ஒருவர் விடுதலை செய்யப்பட்டு, அல்லது மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு, அதன்மேல் அவர் சிறைச்சாலை மருத்துவமனைக்கு திருப்பி அழைக்கப்பட்டால;
- குற்றவாளியை சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்ய உத்தரவிடுவதா என்று முடிவு எடுக்கும் பணி நிபந்தனையில் விடுவிக்கும் பரோல் சபையிடம் இருக்கையில், எவ்வாறு பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் அளித்தல்;
- உங்கள் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை பரோல் சபை முன்னிலையில் வாசிக்க, அல்லது உங்கள் சார்பில் வாசிப்பிக்க எவ்வாறு மனுச் செய்தல், அல்லது பரோல் சபை வாய்மூல விசாரணை நடத்தும் வழக்கானால் , முன்னரே வாக்குமூலத்தை குரல் பதிவு செய்தல்;

- நீங்கள் குற்றவாளியை சமூகத்தில் சந்திக்கும் சந்தர்ப்பங்களைக் குறைக்க, அல்லது உங்களுடன் தொடர்பு கொள்வதைத் தடை செய்ய லைசன்ஸ் /விடுவிப்பு நிபந்தனைகளுக்கு மனுச்செய்தல் எவ்வாறு ;
- உங்களுடன் தொடர்புடைய லைசென்ஸ்/ விடுவிப்பு நிபந்தனைகள், அவை முடிவடையும் திகதி அல்லது அவற்றை மாற்றுமாறு அல்லது அகற்றுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை ஏதாகிலும் பற்றி
- பரோல் சபை முடிவின் சுருக்கத்தை எவ்வாறு கோருவது மற்றும் குற்றவாளியை விடுவிப்பது பாதுகாப்பானது என்று பரோல் சபை முடிவு செய்யுமிடத்து, எவ்வாறு பதிலுத்தாரம் செய்ய முனைவது ;
- குற்றவாளி காவலில் இருந்து தப்பித்துவிட்டால் அல்லது தலைமறைவாகினால் ;
- குற்றவாளிக்கு மிகமோசமான குற்றச்செயலுக்காக குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டால், (பார்க்கவும் 11.18 - 11.19) எவ்வாறு தகவல் கோருவது; அத்துடன்
- எவ்வாறு (தகுதி இருக்குமிடத்து) மறு ஆய்வுக் கோரிக்கை ஒன்றை முன்வைக்கலாம். (பார்க்கவும் 11.9 - 11.10 ).

11.4 பாதிக்கப்பட்டவர்களுடனான தொடர்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் சட்டமுறையான குற்றச்செயல்களுடன், தேசிய நன்னடத்தைக் கண்காணிப்பு சேவை யும் பாதிக்கப்பட்டவர்களுக்கு திட்டத்தை, குற்றவாளிக்கு 12 மாதங்கள் அல்லது அதற்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளில் (அல்லது உளநலச் சட்டம் 1983-இன் கீழ் சிகிச்சைக்காக, மருத்துவமனை ஒன்றில், கட்டுப்பாட்டு உத்தரவுடனோ இல்லாமலோ தடுத்துவைக்கப்பட்டுள்ள குற்றவாளி சம்பந்தப்பட்ட வழக்குகளில்) நடைமுறைப்படுத்தும்:

- கவனயீனமான அல்லது பரிவுணர்ச்சியற்ற சாரதித்துவத்தால் மரணம் விளைவித்தமை (வீதிப் போக்குவரத்துச் சட்டம் 1988) ;
- அபாயகரமான வாகன ஓட்டத்தால் கடும் காயம் விளைவித்தமை (வீதிப் போக்குவரத்துச் சட்டம் 1988) ;
- மிகநெருங்கிய அல்லது குடும்ப உறவில் அடக்குமுறை அல்லது வலுக்கட்டாய நடத்தை (மோசமான குற்றசெயல் சட்டம் 2015)

## 18 வயதுக்கு உட்பட்டவர்களால் பாதிக்கப்பட்டவர்கள்

11.5 உங்கள் வழக்கில் குற்றவாளி 18 வயதுக்கு உட்பட்டவராக இருந்து, நீங்கள் பாதிக்கப்பட்டவர்களுடனான தொடர்புத் திட்டத்துக்குத் தகுதி அற்றவராக இருந்தால், இளைஞர் குற்றத் தடுப்புக் குழு நேரடியாக உங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடும். இளம் குற்றவாளி ஒருவர் மீது 12 மாதச் சிறைத் தண்டனைக்குக் குறைந்த குற்றத் தீர்ப்பு விதிக்கப்படும் வழக்குகளில் அல்லது பாலியல் சாராத அல்லது வன்முறை அற்ற குற்றச் செயலுக்கு 12 மாதங்கள் அல்லது அதற்கும் கூடுதலான குற்றத் தீர்ப்பு விதிக்கப்படும் வழக்குகளில் அல்லது சமூக- அடிப்படையிலான உத்தரவுகளில் இவ்வாறு நடைபெறும். சமூக-அடிப்படையிலான உத்தரவு, சிறைச்சாலையில் தண்டனை அனுபவிக்கும் ஒரு குற்றவாளியைவிட, சமூகத்தின் மத்தியில் தண்டனை அனுபவிப்பவர் மீதே நிபந்தனைகளை விதிக்கிறது.

11.6 இளைஞர் குற்றச்செயல் தடுப்புக் குழு, தண்டனைத் தீர்ப்புக்கு முன்னதாக உங்கள் கருத்துக்களைக் கேட்டறிய முற்பட்டு, பொருத்தமானால் அத்துடன் கிடைக்குமானால், முன்னிலை மீட்டாக்க முயற்சி (பார்க்கவும் உரிமை 3) எதிலும் ஈடுபட விருப்பமா விசாரிக்கும்

11.7 இளைஞர் குற்றச்செயல் தடுப்புக் குழுவிடமிருந்து கீழ்க்கண்ட தகவல்களைப் பெற உங்களுக்கு உரிமை உண்டு:

- கோரிக்கை ஒன்றின் பேரில், குற்றவாளியின் வழக்கின் முன்னேற்றம் பற்றிய தகவல்கள்; அத்துடன்
- நீங்கள் கூடுதலான ஆதரவு கேட்பதானால், பாதிக்கப்பட்டவர்களை ஆதரிக்கும் பொருத்தமான சேவைகள் பற்றிய தகவல்கள்.

## பரோல் சபை

11.8 பரோல் சபை[அடிக்குறிப்பு 46] கீழ்க்கண்டவற்றை செய்தல் வேண்டும்:

- லைசென்ஸ் நிபந்தனைகள் பற்றிப் பாதிக்கப்பட்டவர்கள் செய்த முறைப்பாடுகளைக் கருத்தில் கொள்ளவேண்டும் ;லைசென்ஸ் நிபந்தனை ஒன்றைப் பாதிக்கப்பட்டவர் கோரியவிடத்து, அது உட்சேர்க்கப்படாத நிலையில், அல்லது திருத்தம் செய்யப்பட்ட நிலையில், அது உட்சேர்க்கப்படாமைக்கு அல்லது திருத்தப்பட்டமைக்கு விளக்கம் தரவேண்டும்.

- பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலமொன்று சமர்ப்பிக்கப்பட்டால், அதனை வாசித்தல் வேண்டும்.
- கேட்புரையின்போது முன்னிலையாகித் தனது பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை வாசிக்க, அல்லது தனது சார்பில் வாசிக்கப்பட அனுமதி கோரிப் பாதிக்கப்பட்ட ஒருவர் செய்யும் மனுவைக் கருத்தில் கொள்ளவேண்டும்.
- கேட்புரையின்போது வாக்குமூலத்தை பாதிக்கப்பட்டவர் வாசிப்பதற்கு அல்லது அவர் சார்பில் வேறொருவர் வாசிப்பதற்கு, அவ்வாறு செய்யாதிருக்க நல்லதொரு காரணம் இருந்தாலொழிய, இணங்குதல் வேண்டும்.
- மனு ஒன்றின் பேரில், பரோல் சபை முடிவின் சுருக்கம் ஒன்றை, வழங்கவேண்டும் - அவ்வாறு வழங்காதிருக்க நல்லதொரு காரணம் இருந்தாலொழிய.[அடிக்குறிப்பு 47]

## பரோல் சபையும் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலங்களும்

### நான் எப்போது பரோல் சபைக்கு பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் அளிக்கலாம்?

பரோல் மீளாய்வு தொடங்கும் வரை எந்த நேரத்திலும் நீங்கள் புதிய பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை அளிக்கலாம். ஆனால் பரோல் சபை அதனை வாசிக்கத் தக்கதாக நேரகாலத்துடன் அது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பரோல் வாய்மூல கேட்புரை நடைபெறப்போவதானால், பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் எட்டு வாரங்களுக்கு முன்னதாகச் சமர்பிக்கப்படல் வேண்டும். பிந்திய பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் ஒன்றை அனுமதிக்கும் பொருட்டு, பரோல் கேட்புரையொன்று தாமதப்படுத்தப்படுவது சாத்தியம் அல்ல.

### நான் எனது மனதை மாற்றலாமா, அல்லது எனது பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தைப் புதுப்பிக்கலாமா?

நீங்கள் உங்கள் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தைப் புதுப்பிக்கலாம் அல்லது புதிதாக ஒன்றை எழுதலாம். ஆனால், உங்கள் பழைய வாக்குமூலத்தை முதலில் மீளப்பெறவேண்டும். நீங்கள் நடைபெறக்கூடிய ஒவ்வொரு பரோல் மீளாய்வுக்கும் ஒரு புதிய வாக்குமூலத்தை எழுதமுடியும்.

### எனது பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை குற்றவாளியால் பார்க்க முடியுமா?

பரோல் மீளாய்வு தொடர்பிலான அனைத்துத் தகவல்களையும் குற்றவாளி பார்ப்பார் என்பதே மேலான கோட்பாடு ஆகும். மிகவும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் பரோல் சபை வாக்குமூலத்தை குற்றவாளிக்கு காட்டலாகாது என்று இணங்கினாலொழிய. இந்த வழக்கம் எங்கள் குற்றவியல் நீதிமுறையின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு அமைவாக உள்ளது. இருப்பினும், குற்றவாளி உங்கள் வாக்குமூலத்தை வாசிப்பதை நீங்கள் விரும்பவில்லை என்றால், நீங்கள் உங்கள் பாதிக்கப்பட்டவருடனான தொடர்பு அலுவலரை, ஒரு வெளிப்படுத்தாமை மனுவின் கீழ் வாக்குமூலத்தை வெளியிடாது வைத்திருக்க மனுச் செய்யுமாறு கோரலாம். இவ்விடயத்தில் அனுசரிக்கப்படவேண்டிய விதிமுறைகள் உள்ளன. மனு ஒன்றைச் செய்வதற்கு உள்ள கடுமையான கால வரம்புகள் உட்பட, (வாய்மூல கேட்புரை ஒன்றுக்கு எட்டு வாரங்கள் முன்னதாக மனுச் செய்தல்), தகவல்கள் எப்போது வெளியிடப்படாது வைத்திருக்கப்படல் வேண்டும், அதற்கான துல்லியமான காரணங்கள் என்பன விதிமுறைகளில் உள்ளடங்கும். இவை யாவும் பரோல் சபை விதிமுறைகள் 2019-இல் உள்ளன. இறுதி முடிவு பரோல் சபையால் எடுக்கப்படும். உங்கள் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை வெளியிடாதிருக்க சபை இணங்கினாலும் கூட, கைதியின் சொலிசிட்டர் அதனைப் பார்த்திருக்கக்கூடும். அதனைக் கைதியிடம் வெளியிடலாகாது என்று அவரிடம் கோரப்பட்டிருக்கலாம். நீங்கள் வெளியிடப்படாமையைக் கோரி, அதனைப் பரோல் சபை மறுத்திருந்தால், நீங்கள் உங்கள் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தை மீளப்பெறலாம்.

### உங்கள் பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலத்தைப் பதிவு செய்வது குறித்து மேலும் கேள்விகள் அல்லது உதவி

பாதிக்கப்பட்டவர் தனிப்பட்ட வாக்குமூலம் அளித்தல், அது எவ்வாறு பயன்படுத்தப்படும் அல்லது அதில் எவற்றை உள்ளடக்குவது என்று உங்களிடம் கேள்விகள் இருந்தால், நீங்கள் உங்கள் பாதிக்கப்பட்டவருடனான தொடர்பு அலுவலருடன் பேசலாம். உங்கள் தனிப்பட்ட வாக்குமூலத்தைக் குரல்பதிவு செய்ய உதவவும் அவரால் முடியும்.

## பரோல் முடிவு ஒன்றை மறு ஆய்வு செய்யக் கோருதல்[அடிக்குறிப்பு 48] (மறு ஆய்வுப் பொறிமுறை)

11.9 பரோல் சபை சில குற்றவாளிகளை பரோலில் (நிபந்தனைகளுடன் விடுவித்தல்) விடுவிப்பது குறித்து அல்லது

மீளச்சிறை எடுத்து மீண்டும் விடுவிப்பது குறித்து ஆராயும். பொதுமக்களுக்குத் தீங்கு ஏற்படும் ஆபத்தைக் கருத்தில் கொண்டு சபை இவ்வாறு செய்யும்.

11.10 குற்றவாளி ஒருவரை விடுவிப்பது பாதுகாப்பானது என்று பரோல் சபை முடிவு செய்தால், பெரும்பாலான வழக்குகளில் அந்த முடிவு 2149 கலண்டர் நாட்களுக்கு தற்காலிகமாக நடைமுறையில் இருக்கும். If the Parole Board decides it is safe to release an offender the decision is provisional for 2149 calendar days in the majority of cases (தீர்க்கமான நியம மீளச்சிறை எடுத்தல்களைத் தவிர்த்து [அடிக்குறிப்பு 50]). இந்தக் கால கட்டத்தில் இராஜாங்க அமைச்சர், குற்றவாளியை பரோலில் விடுவிப்பது குறித்த மறு ஆய்வில் சரியான செயல்முறை பின்பற்றப்படவில்லை என்கிற வாதுரை அவரிடம் இருந்தால், சபையிடம் அதன் முடிவை மறு ஆய்வு செய்யுமாறு கோரலாம் - உதாரணமாக முக்கிய சாட்சியம் கருத்தில் கொள்ளப்படவில்லை, அல்லது முடிவு பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது - ஆபத்துக் குறித்த சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட முடிவை நியாயப்படுத்த முடியாது.

பாதிக்கப்பட்டவர் என்கிற வகையில் நீங்கள் பரோல் சபை முடிவு இரண்டு சோதனைகளில் ஒவ்வொன்றும் உங்களுக்கு சாதகமாக இருப்பதாக நம்பினால், மறு ஆய்வு ஒன்றுக்கு விண்ணப்பிக்குமாறு இராஜாங்க அமைச்சரிடம், நீங்கள் கோரலாம். உங்கள் கோரிக்கை 21-நாள் தற்காலிக அவகாச இடைவெளிக்குள் விடுக்கப்படவேண்டும். தேவையான அளவுகோல் எட்டப்பட்டிருப்பதற்கு சான்று இருந்தால் மட்டுமே இராஜாங்க அமைச்சர் மனுவைச் சமர்ப்பிப்பார். இராஜாங்க அமைச்சர் மறு ஆய்வுக்கு விண்ணப்பிக்கிறாரா இல்லையா என்று உங்களுக்கு அறிவிக்கும் கடிதம் ஒன்று உங்களுக்குக் கிடைக்கும்.

## பாலியல் குற்றவாளி தொடர்பிலான அறிவித்தல் தேவைகளின் மறு ஆய்வு செயன்முறை

11.11 பதிவு செய்யப்பட்ட பாலியல் குற்றவாளிகளுக்கு ' அறிவித்தல் கடப்பாடுகள் ' உள்ளன. இதன் அர்த்தம் அவர்கள் தங்களைப் பற்றிய சில தனிப்பட்ட விபரங்களை காவல்துறையினருக்கு எடுத்துரைத்தல் வேண்டும். அறிவித்தல் தேவைகள் பாலியல் குற்றங்கள் சட்டம் 2003-இன் கீழ், அட்டவணை 3 குற்றம் தொடர்பில், குற்றத் தீர்ப்பு அல்லது எச்சரிக்கை வழங்கப்பட்டமையின் தன்னியக்கமான விளைவு ஆகும். ஆனால், குற்றவாளி ஒருவர் எவ்வளவு காலம் இந்தத் தேவைகளுக்கு கட்டுப்பட்டிருப்பார் என்பது அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையைப் பொறுத்து வேறுபடும். அறிவித்தல் தேவைகளை

மீறுதல் ஒரு குற்றவியல் குற்றமாகும். அதற்குரிய தண்டனை ஐந்து ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனையாகும்,,

11.12 ஆயுட்கால அறிவித்தல் தேவைகளுக்குக் கட்டுப்பட்ட குற்றவாளிகள், தங்கள் முதலாவது அறிவித்தலையடுத்து, ஒரு குறிப்பிட்ட காலம் சென்றதன்மேல், மறு ஆய்வு ஒன்றுக்கு விண்ணப்பிக்கலாம். இந்த மறு ஆய்வு வழமையாக சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்டும் காலத்தில் இடம்பெறும். குறிப்பிட்ட காலம் என்பது வயது வந்தவர்களுக்கு 15 ஆண்டுகள், சிறுவர்களுக்கு 8 ஆண்டுகள். குற்றவாளி இவ்வாறான விண்ணப்பம் ஒன்றைச் செய்தால், காவல்துறையினர், அவரது அறிவித்தல் தேவைகளை நிறுத்தலாமா என்று முடிவு செய்யும் பொருட்டு, ஆபத்து மதிப்பாய்வு ஒன்று உட்பட, மீளாய்வு ஒன்றை மேற்கொள்வார்கள் இன்னும் ஆபத்து ஏற்படுத்தக்கூடியவர்கள் என்று மதிப்பாய்வு செய்யப்படும் பாலியல் குற்றவாளிகள் தொடர்ந்து அறிவித்தல் தேவைகளுக்குக் கட்டுப்பட்டிருப்பார்கள். தேவையானால் ஆயுட்காலம் முழுவதும் அவ்வாறே இருப்பார்கள்.

11.13 இவ்வாறான விண்ணப்பத்தைச் செய்யும் குற்றவாளியால் பாதிக்கப்பட்டவராக நீங்கள் இருந்தால், காவல்துறையினர் உங்களுடன் தொடர்பு கொள்ளவேண்டிய உரிமையை நீங்கள் கொண்டுள்ளீர்கள். விண்ணப்பம் தொடர்பில் ்.அவர்களது மீளாய்வின் ஒரு பகுதியாக,உங்கள் கருத்துக்களை அவர்கள் அறிய விரும்புவார்கள். இந்தச் செயன்முறை பற்றி உங்கள் பாதிக்கப்பட்டவருடனான தொடர்பு அலுவலர் மேலும் தகவல் தருவார்.

## வெளிநாட்டு பிரஜைகளான குற்றவாளிகள்

11.14 வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் புரிந்த குற்றச் செயல் ஒன்றில் நீங்கள் பாதிக்கப்பட்டவராகி, உங்கள் மீது புரிந்ந குற்றத்துக்காக, குற்றவாளிக்கு 12 மாதங்கள் அல்லது அதற்குமேல் சிறைத்தண்டனை அல்லது மருத்துவமனைக் காவல் உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது. உங்கள் மீதான குற்றத்துக்கு நீதிமன்றம் ஒன்று அவரை நாடு கடத்த சிபார்சு செய்துள்ளது; அல்லது வன்முறை அல்லது பாலியல் குற்றத்துக்காக ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு சிறைத்தண்டனை விதித்துள்ளது.

அவ்வாறானால், குற்றவாளியின் நாடு கடத்தல் பற்றிய தகவல் பெற உங்களுக்கு உரிமை உண்டு. இந்தத் தகவலைப் பெறாதுவிடுவதை

நீங்கள் தெரிவு செய்யலாம். சிறைக்கைதியின் குடிவரவு அந்தஸ்து பற்றிய தகவல்களையும் மற்றும் நாடு கடத்தல் பற்றிய ஏதும் தகவல்களையும் இயன்ற அளவுக்கு பாதிக்கப்பட்டவர்களுக்குத் தெரிவிப்பதை உறுதிப்படுதததும் பொருட்டு, தேசிய நன்னடத்தைக் கண்காணிப்புச் சேவை (பாதிக்கப்பட்டவர்களுடனான தொடர்பு அலுவலரும் குற்றவாளி மேலாளர்களும்) குடிவரவு அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்ற, நியாயமான அனைத்து வழிமுறைகளையும் கையாளவேண்டும்.

11.15 நீங்கள் 11.14-இல் விபரிக்கப்பட்டவாறு குற்றச் செயல் ஒன்றால் பாதிக்கப்பட்டவராக இருந்தால், பாதிக்கப்பட்டவர் தொடர்பு திட்டத்தினால் உங்களுக்கு நியமிக்கப்பட்ட பாதிக்கப்பட்டவருடனான தொடர்பு அலுவலர் (பார்க்கவும் 11.1 ) உங்கள் சார்பில் உள்விவகார அமைச்சிலிருந்து (Home Office) ஆகப்பிந்திய தகவல்களைப் பெற்றுத் தருவார் .

11.16 நீங்கள் பாதிக்கப்பட்டவரக்கள் தொடர்புத் திட்டத்துக்குத் தகுதி அற்றவராக அல்லது அதிலிருந்து வெளியேறியவராக ஆனால் அதற்கான அளவுகோல் உல்லவராக இருந்தால், வெளிநாட்டுப் பிரஜையான குற்றவாளியின் குடிவரவு வழக்கின் ஆகப் பிந்திய தகவல்களை (பார்க்கவும் 11.14) உள்விவகார அமைச்சின் பாதிக்கப்பட்டவர் ஆதரவு குழுவிடமிருந்து நேரடியாகப் பெறும் உரிமைஉங்களுக்கு உண்டு. .

11.17 உள்விவகார அமைச்சின் பாதிக்கப்பட்டவர் ஆதரவுக் குழு, உங்களுக்குக் கூறக்கூடியவை வருமாறு: குற்றவாளிக்கு எதிராக நாடு கடத்தல் நடவடிக்கை எடுக்கும் எண்ணம் உண்டா; நாடு கடத்தலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்த மேன்முறையீட்டினதும் இறுதி முடிவு ; குற்றவாளி எப்போது குடிவரவுத் தடுப்புக் காவலிலிருந்து விடுவிக்கப்படுவார் ;எப்போது குற்றவாளி நாடு கடத்தப்பட்டார்;. அல்லது குற்றவாளி நாடு கடத்தப்படப்போவதில்லையானால், இயலுமானால் அதற்கான - காரணங்கள் என்ன.

## மோசமான மேலதிக குற்ற மறு ஆய்வுகள்

11.18 குற்றவாளி ஒருவர் மேலும் ஒரு மோசமான குற்றச்செயலை, அவர் நன்னடத்தைக் கண்காணிப்புச் சேவையாளரின் சட்டமுறைக் கண்காணிப்பில் இருக்கையில் அல்லது கண்காணிப்பு முடிவுற்ற,[அடிக்குறிப்பு 51] குறுகிய காலத்தில் புரிந்தால், நன்னடத்தைக் கண்காணிப்பு சேவையாளர் மோசமான மேலதிகக் குற்ற மறு ஆய்வு ஒன்றைச் செய்வார். வழக்கு எவ்வாறு கையாளப்பட்டது எதிர்கால

வழக்குகளைக் கையாள திருத்தங்கள் அவசியமா இல்லையா என்று புலன்விசரணை செய்யும் பொருட்டு மறு ஆய்வு நடத்தப்படும்.

11,19 பெரும்பாலான மோசமான வழக்குகளில் நன்னடத்தைக் கண்காணிப்புச் சேவையாளர்கள் மோசமான மேலதிக குற்ற மறு ஆய்வு ஒன்றின் முடிவுகளைக் குற்றவாளியின் குற்றத் தீர்ப்பை அடுத்து, பாதிக்கப்பட்டவருடன் அல்லது அவரது குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்ள முன்வருவார்கள். இவ்வாறு நடந்தால், உங்கள் பாதிக்கப்பட்டவருடனான தொடர்பு அலுவலர் உங்களுடன் தொடர்பு கொள்ளவேண்டியது உங்களது உரிமையாகும். அவர் நன்னடத்தைக் கண்காணிப்பு சேவையின் சிரேஷ்ட மேலாளரை மோசமான மேலதிக குற்ற மறு ஆய்வு முடிவுகள் பற்றி உரையாடுவதற்காக சந்திக்க விருப்பமா, மற்றும் அறிக்கையின் பிரதி ஒன்று தேவையா என்று கேட்பார்.

# உரிமை 12: உங்கள் உரிமைகள் நிறைவேற்றப்படாமை பற்றி முறைப்பாடு செய்தலுக்கான உரிமை

12. 1 இந்தத் தொகுப்பின் கீழ் உங்கள் உரிமைகள் எவையும் கிடைக்கவில்லை என்று நீங்கள் நம்பினால், நீங்கள் முறைப்பாடு ஒன்றைச் தெய்யலாம். முதன்முதலாக, உங்களுக்கு சௌகர்யமாக இருந்தால், உங்கள் முறைப்பாட்டை சம்பந்தப்பட்ட சேவை வழங்குநரிடம் நீங்கள் வழமையாகப் பழகும் ஆளுடன் உங்கள் முறைப்பாடு பற்றிக் கலந்துரையாடல் வேண்டும்.

12.2 உங்களுக்குத் திருப்தி ஏற்படாவிட்டால், அல்லது நீங்கள் பழகும் ஆளுடன் முறைப்பாட்டை விவாதிப்பது சங்கடமாக இருந்தால், சேவை வழங்குநரின் உள்ளக முறைப்பாட்டு நடைமுறை மூலம் முறைப்பாடு செய்யலாம். [அடிக்குறிப்பு 52] அவர்கள் தங்கள் முறைப்பாடுகள் நடைமுறை பற்றிய தகவல்களைத் தந்து நடைமுறையில் தரப்பட்டுள்ள காலக்கெடுக்களின் படி பதில் அளிப்பார்கள்.

12.3 உங்கள் முறைப்பாட்டை தவறான சேவை வழங்குநருக்கு அனுப்பினால், அல்லது அதனை ஒன்றுக்கு மேற்பட்டசேவை வழங்குநர்கள் கையாளவேண்டும் என்றால், அவர்கள் உங்களுக்கு அறிவிப்பார்கள்

12.4 உங்கள் சேவை வழங்குநரின் முறைப்பாட்டு நடைமுறையை முடித்த பின்னரும் உங்களுக்குத் திருப்தி ஏற்படவில்லையானால், அல்லது அவர்களிடமிருந்து பதில் வர நீண்ட காலம் எடுத்தால், நீங்கள் உங்கள் முறைப்பாட்டை நாடாளுமன்ற மற்றும் சுகாதார சேவை முறைமன்ற நடுவரிடம் பாரப்படுத்துமாறு உங்கள் நாடாளுமன்ற உறுப்பினரைக் கேட்கலாம். முறைமன்ற நடுவர் தன்னிடம் விடப்படும் எந்த முறைப்பாட்டையும் கவனத்தில எடுத்து, பொருத்தமானவிடத்து,சுயாதீனமான புலன்விசாரணை ஒன்றை நடத்துவார்.

12.5 முறைமன்ற நடுவருக்கு முறைப்பாடு செய்வது தொடர்பான மேலதிக தகவல்களை அவரது கீழ்க்கணடஇணையதளத்தில் பார்க்கலாம் : www.ombudsman.org.uk அல்லது கீழ்க்கண்ட அவரது வாடிக்கையாளர் உதவுகர இலக்கத்துக்கு அழைப்பு எடுக்கவும் : 0345 015 4033 [அடிக்குறிப்பு 53]

1.

2. சட்டமுறை நபர்கள் (உதாரணம், வர்த்தக அமைப்புக்கள், அல்லது அறநெறி அமைப்புக்கள் போன்ற முயற்சிகள்) பாதிக்கப்பட்டவர்கள் என்கிற வரையறைக்குள் வரமாட்டா. இருப்பினும், வர்த்தக அமைப்புக்களும் அறநெறி சார்ந்த அமைப்புக்களும் இந்தத் தொகுப்பில் உள்ள சேவைகளைப் பெறலாம். அவற்றுக்கு எதிராக குற்றவியல் குற்றம் ஒன்று புரியப்பட்ட நிலையில் அவை ஏற்பட்ட தாக்கம் பற்றிய வாக்குமூலம் ஒன்றை அளிக்கவேண்டும். சம்பந்தப்பட்ட சேவை வழங்குநருக்குத் தொடர்பாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். வர்த்தகத்தில் ஏற்பட்ட தாக்கம் பற்றிய வாக்குமூலத்தை எவ்வாறு அளிப்பது என்பது தொடர்பில் Iமேலதிக தகவல்கள் ↩

3. இந்தத் தொகுப்பின் நோக்கங்களுக்கு அமைய , ' குற்றவியல் குற்றம்' என்பது இங்கிலாந்திலும் வேல்ஸிலும், புரியப்பட்ட , அல்லது குற்றவியல் நடவடிக்கைகளுக்கு உட்பட்ட ஒரு குற்றமாகும்..↩

4. இது வழமையாக, பாதிக்கப்பட்டவரின் கணவன்/ மனைவி, பங்காளர், நேரடி உறவில் வரும் உறவினர்கள், சகோதர சகோதரிகள், மற்றும் பாதிக்கப்பட்டவரில் தங்கியிருப்போரைக் குறிக்கும். பாதுகாவலர்கள், மற்றும் கவனிப்பாளர்கள் உட்பட, ஏனைய குடும்ப உறுப்பினர்கள், சேவை வழங்குநரின் விருப்புரிமையின்படி நெருங்கிய உறவினர்களாகக் கருதப்படலாம்..↩

5. பெற்றார் அல்லது பாதுகாவலர் குற்றச்செயல் தொடர்பாகப் புலன்விசாரணைக்கு உட்பட்டிருந்தால், அல்லது காவல்துறையால்

குற்றம் சுமத்தப்பட்டிருந்தால் தவிர, அல்லது சம்பந்தப்பட்ட சேவை வழங்குநரின் நியாயமான கருத்துப்படி, உங்கள் பெற்றார் அல்லது பாதுகாவலர் சேவைகளைப் பெறுவது பாதிக்கப்பட்டவரின் நலன்களுக்கு உகந்ததல்ல.

6. www.gov.uk/government/publications/the-witness-charter-standards-of-care-for-witnesses-in-the-criminal-justice-system↩

7. இது பாதிக்கப்பட்டவரின் கணவன்/ மனைவி, பங்காளர், நேரடி உறவில் உள்ள உறவினர்கள், சகோதர சகோதரிகள் மற்றும் அவரில் தங்கியிருப்பவர்களைக் குறிக்கும். பாதுகாவலர்கள் மற்றும் கவனிப்பாளர்கள் உட்பட, ஏனைய குடும்ப உறுப்பினர்கள் வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அமைச்சின் விருப்புரிமையின்படி நெருங்கிய உறவினர்களாகக் கருதப்படலாம்.

8. நாளொன்றில் 24 மணி நேரமும், வாரத்தில் 7 நாட்களும் கிடைக்கும் நீங்கள் ஐக்கிய இராஜ்யத்தில் இல்லாதிருந்தால், ஆகக்கிட்டிய பிரித்தானிய தூதராலயம், உயர் ஸ்தானிகலாலயம் அல்லது கொன்ஸ்யூலேட் தூதரகத்தைத் தொடர்பு கொள்ளும் விபரங்களை இணையத்தில் பெறலாம்.

9. பாதிக்கப்பட்டவர்களைச் சிறைக்கைதி ஒருவர் அனாவசியமாகத் தொடர்புகொண்டால்அதனை அறிவிக்க அவர்களுக்கு ஓர் இலக்கம் தேவை. அதனை உறுதிப்படுத்த ு க் மாண்புமிகு அரசியின் சிறைச்சாலை மற்றும் நன்னடத்தைக் கண்காணிப்பு சேவை, தொலைபேசி உதவுகர அழைப்புச் சேவைஒன்றைப் பேணவேண்டும்.

10. திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை, முற்பகல் 9.00 - பிற்பகல் 4.00

11. இதில், தொடர்பாடல் தகவல்கள்,இந்தத் தொகுப்பின் உரிமைகள் 3, , 4, 5, 6, 8, 9, மற்றும் 11 என்கிற தலைப்புக்களில் உள்ளடங்கலாம்.

12. www.gov.uk/contempt-of-court↩

13. www.nhs.uk/live-well/sexual-health/help-after-rape-and-sexual-assault/↩

14. சாட்சிகள் கவனிப்புப் பிரிவு என்பது காவல்துறையால் வழிநடத்தப்படும் பணி ஒன்றின் பொதவான பெயராகும். இந்தப் பிரிவு குற்றவியல் நீதிமுறையூடாக நடைபெறும் வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சாட்சிகளுக்கும் தகவல்கள் மற்றும் ஆதரவு வழங்கிவருகிறது. உங்கள் பகுதியில் இந்தப் பிரிவு வேறொரு பெயரால் அழைக்கப்படலாம். இந்தத் தொகுப்பில் சாட்சிகள் கவனிப்பு பிரிவு வழங்கவென அதற்கு ஒதுக்கப்பட்ட உரிமைகளை வழங்கும் பிரிவின் பெயரை காவல்துறையினர் உங்களிடம் கூறுவார்கள்.

15. குற்றச்செயல் மீது புலன்விசாரணை நடத்துவதாக சேவை வழங்குநர் முறைப்படி ஏற்றுக்கொண்டமை அல்லது குற்றச்செயல் தொடர்பில் வழக்குத் தொடர முடிவு செய்வது குறித்து பொறுப்பெடுத்தமை என்கிற வரையிலேயே இது பொருந்தும்.

16. விசேட நடவடிக்கைகளுக்குத் தகுதி உண்டா வென்று நீதிமன்றம் முடிவு செய்வதற்கான இளைஞர் நீதிமுறை மற்றும் குற்றவியல் சான்றுச் சட்டம் 1999-இன் 16-ம் பிரிவின் கீழ் உள்ள அளவுகோலின் அடிப்படையில் இது அமைந்துள்ளது.

17. தொகுப்பின் கீழ் பொதுவான உயர்த்தப்பட்டஉரிமைகள் இருப்பினும், இளைஞர் நீதிமுறை மற்றும் குற்றவியல் சான்றுச் சட்டம் 1999, பிரிவு 16-இன் கீழ் விசேட நடவடிக்கைகளுக்குத் தகுதி பெறுவதற்கு , கேட்புரைச் சமயத்தில் நீங்கள் 18 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

18. இது இளைஞர் நீதிமுறை மற்றும் குற்றவியல் சான்றுச் சட்டம் 1999 பிரிவு 17-இன் கீழ் விசேட நடவடிக்கைகளுக்கான தகுதி காண் அளவுகோல் அடிப்படையில் உஅமைந்துள்ளது.

19. இதில், பேச்சு மொழிபெயர்ப்பும் பேசா மொழிபெயர்ப்பும் உள்ளடங்குவன. உதாரணமாக, பாதிக்கப்பட்டவர் செவிப்புலன் அற்றவராக அல்லது குறைந்தவராக இருத்தல்

20. நீங்கள் புரிந்துகொள்ளும் மொழியில் குற்றச்செயல் ஒன்றை அறிவிக்க, அல்லது ஆங்கிலம் தெரியாவிட்டால் தேவையான மொழிபெயர்ப்பு உதவியுடன் அறிவிக்க உங்களுக்கு உரிமை உண்டு.

21. மறு ஆய்வுக்கான பாதிக்கப்பட்டவர்களின் உரிமை. விளக்கத்துக்கு பார்க்கவும் உரிமை 6

22. வெல்ஷ் மொழிச் சட்டம் 1993, பிரிவு 22(1)வாசகம்: " வேல்ஸில் எந்த சட்ட நடவடிக்கைகளிலும் , வெல்ஷ் மொழியைப் பயன்படுத்த விரும்பும் தரப்பு எதுவும் சாட்சியும் அல்லது வேறு ஆளும் வெல்ஷ் மொழியில் பேசலாம். " நீதவான் நீதிமன்றத்து நடவடிக்களின்போது, வெல்ஷ் மொழியைப் பயன்படுத்த முன்னறிவித்தல் தேவையில்லை. இருப்பினும், சில சமயங்களில் மொழிபெயர்ப்புக்கு ஏற்பாடு செய்யும் தேவை ஏற்படுகிறது. தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு வெல்ஷ் மொழி பிரிவுக்கு முன்னறிவித்தல் வழங்கப்படும்.

23. இளைஞர் குற்றத் தடுப்புக் குழு ஒரு பல்முகவர் குழுவாகும். அது குற்றம் புரிந்த அல்லது புரியும் ஆபத்தில் இருக்கக்கூடிய,

10 மற்றும் 17 வயதுகளுக்கு இடைப்பட்ட பிள்ளைகளுடன் பணியாற்றுகிறது. குழுவினரின் இணைப்பாளராக நியமன உள்ளூராட்சி மன்றம் ஒன்று செயற்படும். அத்துடன் இளைஞர் நீதிமுறையின் ஒரு பகுதியாக இளைஞர் நீதிமுறைச் சபை அவர்களை நெறிப்படுத்தும்.

24. www.apccs.police.uk/find-your-pcc/↩

25. www.apccs.police.uk/find-your-pcc/↩

26. இளைஞர் நீதிமுறை மற்றும் குற்றவியல் சான்றுச் சட்டம் 1999 , எளிதில் ஊனமுறக்கூடிய மற்றும் பயமுறுத்தலுக்கு ஆளாக்கப்பட்ட சாட்சிகள் சாட்சியங்களைத் திரட்டி அளிப்பதை இலகுபடுத்தப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியது. அந்த நடவடிக்கைகள் கூட்டாக 'விசேட நடவடிக்கைகள் ' என்று அறியப்படும். விசேட நடவடிக்கைகள் சாட்சியம் அளிப்பதால் ஏற்படும் மன அழுத்தங்கள் சிலவற்றிலிருந்து நிவாரணம் பெற உதவும். அவை வழக்குத் தொடருநர் சாட்சிகளுக்கும் பிரதிவாதி தரப்பு சாட்சிகளுக்கும் பொருந்தும்,ஆனால் பிரதிவாதிக்கு அல்ல.

27. நீங்கள் குற்றவியல் குற்றக் காயங்களுக்கு இழப்பீடு கோரி, குற்றவியல் குற்ற இழப்பீட்டு ஆணையத்துக்கு விண்ணப்பம் செய்வது பற்றிச் சிந்தித்தால், நீங்கள் நியாயமான அளவுக்கு , தாக்கியவருக்கு நீதி வழங்க ஒத்துழைத்தால் தவிர, உங்கள் இழப்பீடு வழங்கல் செய்யப்படமாட்டாது.

28. நீங்கள் மனிதக் கடத்தலில் பாதிக்கப்பட்டவர் என்று தகுதி வாய்ந்த ஆணையரால் முற்றுமுழுதாக அடையாளம் காணப்பட்டாலொழிய, அல்லது குடிவரவுச் சட்டம் 1971, பிரிவு 3 (2) - இன் கீழ் புகலிடம் வழங்கப்பட்டிருந்தாலொழிய, குற்றவியல் குற்ற காயங்களுக்கான இழப்பீட்டு ஆணையத்தின் இழப்பீட்டுக்கான உங்கள் தகுதி உங்கள் வாச அந்தஸ்து அல்லது நாட்டிமையில் தங்கியிருக்கலாம். ↩

29. விதிவிலக்கான சூழ்நிலைகளில், விண்ணப்பம் ஒன்றை முன்னரே செய்ய இயலாமல் போய்விட்டது. வன்முறைக் குற்றச்செயல் ஒன்று புரியப்பட்டமைக்கு சாட்சியம் உண்டு. இந்த நிலையில் இழப்பீட்டுக் கோரிக்கை அலுவலர் மேலும் விரிவான விசாரணைகள் இல்லாமல் முடிவு ஒன்றை எடுக்கலாம்.

30. திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை, முற்பகல் 10.00 - பிற்பகல் 3.00

31. எச்சரிக்கைகள், நிபந்தனையுடன் கூடிய எச்சரிகைகள், ஒழுங்கீன நடத்தைக்கு தண்ட அறிவித்தல்கள் போன்ற

வழக்கீட்டுக்குப் பதிலான மாற்று வழிகள் பெருமபாலும் கீழ் மட்ட முதன் முறை சம்பவங்களைக் கையாளுபவையாக இருக்கும். இவற்றுக்கு வழக்கீடு பொது நலனுக்கு உகந்ததாக இருக்காது.

32. இதர சேவை வழங்குநர்கள் ( இந்தத் தொகுப்பின் பக்கம் 8-இல் பட்டியலிடப்பட்டுள்ளவர்கள் ) எவ்வாறு தங்கள் சொந்தத் திட்டம் மூலம் மறு ஆய்வு கோருவது என்று விளக்குவார்கள். ↩

33. பாதிக்கப்பட்டவர்களின் மறு ஆய்வு உரிமை குறிப்பாக வழக்கு தொடராதிருக்கும் முடிவுகள பற்றியதாகும்.. ////குற்றச்செயலைப் பதிவு செய்யும் முடிவுகள், அல்லது விசாரணைகளைத் தொடருவதில்லை என்று எடுக்கப்படும் முடிவுகள் இதில் உள்ளடங்கமாட்டா.

34. முடிக்குரிய வழக்கீட்டு சேவையினரைச் சந்தித்துப் பேச பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமையுள்ள சில வகை வழக்குகள் வருமாறு: குழந்தைகள் துஷ்பிரயோகம், பாலியல் குற்றங்கள், இன, மத துவேஷத்தைத் தூண்டும் குற்றங்கள், தன்பால் அல்லது பால்மாற்ற வெறுப்புணர்ச்சிக் குற்றங்கள், வலதுகுறைவு அடிப்படையில் ஏற்படும் வெறுப்புணர்ச்சிக் குற்றங்கள் மற்றும் வயது அடிப்படையில் ஏற்படும் வெறுப்புணர்ச்சி வழக்குகள்

35. முடிக்குரிய வழக்கீட்டு சேவையினரைச் சந்தித்துப் பேச இழப்பு நேர்ந்த குடும்பத்தவர்களுக்கு உரிமை உள்ள வழக்குகள் வருமாறு: கொலை, கைமோசக்கொலை, கூட்டாண்மைக் கைமோசக் கொலை, குடும்பத் தகராறுக்கொலை அபாயகரமா ன வாகன ஓட்டத்தால் மரணம் விளைவித்தல், கவனயீன வாகன ஓட்டத்தால் அல்லது பரிவுணர்ச்சியற்ற வாகன ஓட்டத்தால் மரணம் விளைவித்தல். உரிமம் அற்ற நிலையில், தகுதி இழந்த நிலையில் அல்லது காப்புறுதி அற்ற நிலையில் வாகனம் ஓட்டி மரணம் விளைவித்தல். அத்துடன் கடுமையான சூழலில் வாகனத்தை எடுத்து மரணம் விளைவித்தல்

36. மாண்புமிகு அரசியின் தயவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் குற்றவாளிகளின் ஆரம்ப குறைந்த பட்ச தவணைக் காலத்தில் அரைவாசி நிறைவேறியதும், அவரது முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு,அவரது தவணைக்காலம், மேல் நீதிமன்றத்தால் (High Court) மீள்பரிசீலனை செய்யப்படலாம். இது, இளம் ஆட்கள் வயதுவந்தவர்களை விடக் கூடுதல் விரைவில் மாறுவார்கள் என்கிற உண்மையைப் பிரதிபலிக்கிறது. இவ்வாறு மாறுவார்கள் என்கிற இந்த உண்மை தண்டனை விதிக்கப்பட்ட காலத்தில் முழுமையாகப் புலனாகாது

இருந்திருக்கலாம். பாதிக்கப்பட்டவர்கள் அல்லது மரணமான பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தவர்கள், மேல் நீதிமன்றத்துக்குப் பாதிக்கப்பட்டவரின் தனிப்பட்ட வாக்குமூலம் ஒன்றைச் சமர்ப்பிக்கலாம்.

37. குற்றவாளியை சான்றாயம் (jury) குற்றவாளி அல்ல என்று காணும் பட்சத்தில், சாட்சிகள் கவனிப்பு பிரிவால் விளக்கம் தர இயலாது போய்விடும். ஏனெனில் சான்றாயம் தனது முடிவுக்கு காரணங்கள் கூறவேண்டியதில்லை.

38. முடிக்குரிய வழக்கீட்டுச் சேவையும் தீர்ப்புக் கவலை அளித்தால் தலைமை வழக்குரைஞரைத் தொடர்பு கொள்ளக்கூடும்.

39. தலைமை வழக்குரைஞர் முடியாட்சிக்குப் பிரதம சட்ட ஆலோசகராக இருக்கிறார். அவருக்குப் பல சுயாதீனமான பொதுநலன் சார்ந்த கடமைகள் உளளன. அத்துடன் சட்ட அலுவலர்கள் பிரிவுகளை அவர் மேற்பார்வை செய்கிறார். .↩

40. பொருத்தமானது என்று நீதிபதி இலகுவாகக் கருதக்கூடிய நியாயமான சாதாரண தீர்ப்புகளுக்கு வெளியே ஒரு தீர்ப்பு கிடைக்கும்போது அது 'நியாயமானதைவிட அதிகனிவானதாக' இருக்கும்.

41. நீங்கள் உங்கள் பாதிக்கப்பட்டவரின் தனிப்பட்ட வாக்குமூதத்தைப் பரோல் சபைக் குழுவிடம் சமர்ப்பிக்க சிறைச்சாலைக்குச் சென்றால், சில செலவினங்களை பரோல் சபையிடம் கோர உங்களுக்குத் தகுதி உண்டு., உதாரணமாக பயணச் செலவு அல்லது சிற்றுண்டி மற்றும் உணவுச் செலவுகள் இந்தச் செலவினங்களை கோருவது தொடர்பில் உங்களிடம் கேள்விகள் எவையும் இருந்தால், உங்கள் பாதிக்கப்பட்டவருடனான தொடர்பு அலுவலரால் உங்களுக்கு உதவ இயலும்.

42. குற்றச்செயல் ஒன்று தொடர்பில், வழக்கீட்டுக்குப் பொறுப்பான இதர சேவை வழங்குநர்கள் பாதிக்கப்பட்டவர்கள் சாட்சியமளிக்க நீதிமன்றம் செல்வதால் ஏற்படும் செலவினங்களை ஈடுசெய்யக்கூடிய விதிமுறைகளை ஏற்படுத்தியிருத்தல் வேண்டும்.

43. குடும்ப வன்முறை, குற்றம் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் சட்டம் 2004, பிரிவு 45(2)-இல் விளக்கப்பட்டவாறு

44. இந்த வழக்கில் சிறைச்சாலை என்பது, ஆளொருவரைத் தடுத்து வைக்கக்கூடிய எந்த இடமாகவும், உதாரணமாக இளம் குற்றவாளிகள் தாபனமாகவும் அர்த்தப்படுத்தலாம்.

45. மற்றவர்களைக் கடும் தீங்கில் இருந்து பாதுகாக்க நோயாளி ஒருவர் மீது கட்டுப்பாடுகள் அவசியம் என்று நீதிமன்றம் கருதினால், அவர் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். ' கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட நோயாளர்களின் 'முகாமைத்துவத்தில் இராஜாங்க அமைச்சர் ஈடுபாடு கொண்டுள்ளார். இராஜாங்க அமைச்சர் குற்றவாளியின் புனர்வாழ்வு தொடர்பாக முடிவுகள் எடுப்பார் என்பது இதன் அர்த்தமாகும். 'கட்டுப்பாடுகள் அற்ற நோயாளர்களை' சிகிச்சையாளர்கள் மற்றும் மருத்துவமனை மேலாளர்கள் முகாமைப்படுத்துவார்கள்.

46. கைதிகளில் பெரும்பாலானவர்கள் தன்னியல்பாக, பரோல் சபையின் ஈடுபாடு எதுவுமின்றி விடுதலையாகிறார்கள். பரோல் சபை விடுதலைக்குப் பொருத்தமானவர்கள் என்று அது கருதும் முக்கிய வகைக் கைதிகள் வருமாறு : a) நீடிக்கப்பட்ட விதிக்கப்பட்ட காலத்துக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள். இவர்கள் தண்டனைக் காலத்தின் குறிப்பிட்டகாலத்தை சிறையில் கழித்தவர்கள். இவர்களை லைசென்ஸில் விடுவிக்கலாம். b) ஆயுள் தண்டனை போன்ற, வரையறையற்ற சிறைத்தண்டனை பெற்றவர்கள் அல்லது பொதுமக்கள் பாதுகாப்பின் நிமித்தம் சிறைத்தண்டனை பெற்றவகள் . c) விதிக்கப்பட்டகாலத்துக்கு நியமதர சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள். லைசெனஸில விடுவிக்கப்பட்டு லைசென்ஸ் நிபந்தனைகளை மீறியதால் மீளக் காவலில் வைக்கப்பட்டவர்கள்

47. உதாரணமாக, அது - ஆளெவரையும் ஆபத்தில் விடலாம் – குற்றவாளி, பாதிக்கப்பட்டவர், அல்லது வேறு ஒருவர் risk.↩

48. https://www.gov.uk/guidance/challenge-a-parole-decision↩

49. விதிவிலக்கான சூழ்நிலையில் இந்தக் காலத்தைக் குறைக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்படலாம். அவ்வாறு நடந்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்படும்..↩

50. நிர்ணயிக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஒரு காலத்துக்காகும். கைதி, தண்டனையின் முதல் பாதி அல்லது மூன்றில் இரண்டு பகுதியை ( தண்டனையினதும் குற்றத்தினதும் முழு நீளத்தைப் பொறுத்து ) சிறையிலும், மிகுதிக்காலத்தை சமூகத்தில் லைசென்ஸிலும் கழிப்பார். லைசென்ஸ் நிபந்தனைகள் எவற்றையும் அவர் மீறினால், உதாரணமாக, அவரால் ஏற்படக்கூடிய ஆபத்தை அதிகரிக்கும் வகையில் மோசமாக நடந்துகொண்டால், அவர் தண்டனையின மிகுதிக் காலத்தை செலவிட, திறைக்கு மீற வரவழைக்கப்படுவார்.

51. நன்னடத்தை அறிவுறுத்தல் 15/2014 C இணைப்பில் பட்டியலிடப்பட்டுள்ள குற்றச்செயல்.' மோசமான மேலதிக குற்றங்களுக்கான அறிவித்தல் மற்றும் மறு ஆய்வு நடைமுறைகள்' இவை யாவும் தற்போது 14 ஆண்டு சிறைத்தண்டனையை அல்லது காலநிர்ணயமற்ற சிறைத்தண்டனையை ஈர்க்கும் மோசமான வன்முறை அல்லது பாலியல் குற்றங்கள் ஆகும்.

52. பாதிக்கப்பட்டோர், இந்தத் தொகுப்பின்கீழ் தங்கள் உரிமைகள் வழங்கப்படவில்லையானால் முறைப்பாடு ஒன்றைச் செய்யகூடியதாக, சேவை வழங்குநர்கள், தெளிவாக அடையாளம் காணக்கூடிய முறைப்பாட்டுப் பொறிமுறை ஒன்றைப் பேணவேண்டும்.

53. திங்கட்கிழமை - வியாழக்கிழமை, முற்பகல் 8.30 -பிற்பகல் 5.00 அத்துடன் வெள்ளிக்கிழமை, முற்பகல் 8.30 - பிற்பகல் 12.00.